



# தமிழ்நாடு இபேப்பர்.காம்

www. tamilnaduepaper.com





CHENNAI | Volume- 3 | Issue:203 | 07-02-2026 | சனிக்கிழமை | Free E- Paper | ● சென்னை ● மதுரை ● கோவை ● திருச்சி


# சமூக வலைதளங்களில் நேரத்தை வீணாக்காதீர்கள்

## மாணவர்களுக்கு பிரதமர் மோடி அறிவுரை

**புதுடெல்லி, பிப்.7:** பொது தேர்வுகளை நேர்மையுடனும் தன்னம்பிக்கையுடனும் அணுகுவது குறித்து பரிஷா பே சர்ச்சா (தேர்வு பற்றிய விவாதம்) என்ற தலைப்பில் மாணவர்களுடன் ஆண்டுதோறும் பிரதமர் மோடி கலந்துரையாடி வருகிறார். அந்தவகையில் மாணவ - மாணவிகளுடன் உரையாடிய காணொலியை தனது எக்ஸ் பக்கத்தில் இன்று காலை பிரதமர் மோடி வெளியிட்டுள்ளார்.

அதில், நாட்டில் டேட்டா மலிவு விலையில் கிடைப்பதால் இணையத்தில் நேரத்தை வீணாக்க வேண்டாம் என்றும், வாழ்க்கையையும் கல்வித் திறன்களையும் மேம்படுத்துவதில் கவனம் செலுத்த வேண்டும் என்று பிரதமர் நரேந்திர மோடி மாணவர்களுக்கு அறிவுரை வழங்கி உள்ளார்.

தன்னம்பிக்கை மற்றும் நேர்மறையாக தேர்வுகளை மாணவ -மாணவிகள் எப்படி அணுக வேண்டும் என்பதை குறித்து விரிவாக ஒரு கலந்துரையாடல் நடத்தினேன் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.



இந்த கலந்துரையாடலில் மாணவர்களுடன் பிரதமர் மோடி பேசியதாவது:-

உங்கள் பெற்றோர், ஆசிரியர்கள் அல்லது சக நண்பர்கள் என்ன கூறினாலும், உங்களுக்கு பிடித்த யோசனைகளை மனதில் வைத்து, அதனைப் பின்பற்றுங்கள். நமது இலக்கு எப்போதும் அடையக் கூடியதாக இருக்க வேண்டும். ஆனால் எளிதில் இலக்கை அடைய முடியாது. உங்கள் ஆசிரியர்களை விட ஒரு படி மேலே இருங்கள்.

வாழ்க்கையில் எல்லாவற்றிலும் சமநிலை இருக்க வேண்டும். நீங்கள் ஒரு பக்கம் அதிகமாக வளைந்தால் விழுந்துவிடுவீர்கள். வாழ்க்கைத் திறன்களும் தொழில்சார் திறன்களும் சம அளவில் முக்கியமானவை. அவை கல்வி மூலமாக மட்டுமே பெற இயலும்.

கல்வியை சுமையாக நினைக்கக்கூடாது. அதற்கு நமது முழு ஈடுபாடும் தேவை. மதிப்பெண்களில் கவனம் செலுத்துவதை விட, ஒவ்வொருவரும் வாழ்க்கையில் எந்த இடத்தைப் பிடிக்க வேண்டும் என்பதில் கவனம் செலுத்த வேண்டும். உங்கள் வெற்றி உங்கள் பெற்றோரின் மரியாதையாக மாறும்.

உங்களுக்கு கேமிங்கில் ஆர்வம் இருக்கலாம், ஆனால் இந்தியாவில் டேட்டா மலிவாக கிடைக்கிறது என்பதற்காக சமூக வலைதளங்களில் நேரத்தை வீணாக்கி அதில் ஈடுபடாதீர்கள். வேடிக்கையாக கூட அதைச் செய்யாதீர்கள். பணத்திற்காக கேமிங்கில் ஈடுபடுபவர்கள் அழிந்து போவார்கள். நாட்டில் சூதாட்டத்தை ஊக்குவிக்க வேண்டியதில்லை. ஆன்லைன் சூதாட்டத்திற்கு எதிராக நான் ஒருசட்டத்தைஇயற்றியுள்ளேன். இருப்பினும், கேமிங் என்பது ஒரு திறமை.

நான் கடந்த காலத்தை எண்ணுவதில்லை. மீதமுள்ளதை நான் எண்ணுகிறேன். எனவே நான் உங்களுக்குச் சொல்கிறேன்: கடந்த காலத்தைப் பற்றி சிந்திக்காதீர்கள். உங்களுக்கு முன்னால் இருப்பதை வாழ முயற்சி செய்யுங்கள் எனத் தெரிவித்தார்.

பிரதமருடனான கலந்துரையாடலில் சொந்தமாக இயக்கிய பாடல்களை மாணவர்கள் பாடினர். இந்த கலந்துரையாடலில் பங்கேற்ற, அனைத்து மாணவர்களுக்கும் அஸ்ஸாமின் பாரம்பரிய சால்வையான கமோசாவை பிரதமர் அணிவித்தார்.

# சென்னை எழும்பூரில் கார்ல் மார்க்ஸ் சிலை திறப்பு!

**சென்னை, பிப்.7:** எழும்பூர் அருங்காட்சியக வளாகத்தில் ரூ.85.80 லட்சம் செலவில் நிறுவப்பட்ட கார்ல் மார்க்ஸ் சிலையை முதல்வர் ஸ்டாலின் இன்று திறந்து வைத்தார்.

இது குறித்து தமிழக அரசு வெளியிட்ட செய்திக் குறிப்பு: ‘உலகத் தொழிலாளர்களே ஒன்றுகூடுங்கள்’ என்ற பிரகடனத்தை உலகத் தொழிலாளர்கள் அனைவருக்குமான ஒரே முழக்கமாக, பொதுவுடைமைத் தத்துவத்தை வடித்துத் தந்த மாமேதை கார்ல் மார்க்ஸ் உருவச் சிலை சென்னையில் அமைக்கப்படும்’ என்று கடந்த 2025-ம் ஆண்டு சட்டப்பேரவையில் 110-வது விதியின்கீழ் முதல்வர் ஸ்டாலின் அறிவித்தார்.




அதன்படி, சென்னை எழும்பூர் அருங்காட்சியக வளாகம், கன்னிமாரா பொது நூலக வாயிலில் ரூ.85.80 லட்சம் செலவில் நிறுவப்பட்டுள்ள கார்ல் மார்க்ஸ் சிலையை முதல்வர் ஸ்டாலின் நேற்று திறந்து வைத்தார்.சிலையின் அருகே வைக்கப்பட்டிருந்த அவரது உருவப் படத்துக்கும் மலர்தூவி மரியாதை செலுத்தினார். கார்ல் மார்க்ஸ் வாழ்க்கை வரலாற்றை எடுத்துரைக்கும் வகையில் அமைக்கப்பட்டிருந்த புகைப்படக் கண்காட்சியையும் பார்வையிட்டார்.

இந்த நிகழ்வு குறித்து முதல்வர் ஸ்டாலின் முதல்வர் வெளியிட்ட சமூக வலைதளப் பதிவில், ‘மாமேதை கார்ல் மார்க்ஸ் சிலை திறப்பு. சிவந்தது சென்னை! ‘இழப்பதற்கு அடிமைச் சங்கிலிகளைத் தவிர ஒன்றுமில்லை. அடைவதற்கோ பொன்னுலகம் காத்திருக்கிறது’ என்று உலகத் தொழிலாளர்களை ஒன்றுதிரட்டிய பொதுவுடைமைத் தத்துவத்தின் பிதாமகன் கார்ல் மார்க்ஸ் சிலை கன்னிமாரா பொது நூலக வளாகத்தில் நிலைகொண்டது.

நல்லவை எங்கிருந்து வந்தாலும் வணங்கி ஏற்றுக் கொள்வோம். அல்லவை ஆதிக்கம் செலுத்தப் பார்த்தால் தடுத்து நிறுத்துவோம். இதுதான் திராவிட மாடல்” என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

# மதுரையில் பிரதமர் மோடி பங்கேற்கும் பொதுக் கூட்டம் மார்ச் 1-க்கு மாற்றம்

**நெல்லை, பிப்.7:** மதுரையில் பிரதமர் மோடி பங்கேற்கும் பொதுக் கூட்டம் மார்ச் 1-ம் தேதிக்கு மாற்றப்பட்டுள்ளதாக பாஜக மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன் கூறினார்.



திருநெல்வேலியில் இன்று செய்தியாளர்களிடம் அவர் கூறியது: “தேர்தலில் ஒரு வாக்குக்கு ரூ.2 ஆயிரம் வீதம் கொடுப்பதற்காக ஒவ்வொரு தொகுதிக்கும் ரூ.20 கோடி திமுகவினருக்கு வந்துள்ளது. பணத்தை வைத்து ஆட்சியைப் பிடித்து விடலாம் என்று திமுக நம்புகிறது. சாத்தான்குளம் இரட்டை காவல் மரண விவகாரத்தில் திமுக போட்டிபோட்டு போராட்டங்களை நடத்தியது. ஆனால், திமுக ஆட்சியில் 33 காவல் நிலைய மரணங்கள் நடைபெற்றுள்ளன. மடப்புரம் கோயில் காவலாளி அஜித்குமார் வழக்கில் நியாயம் கிடைக்கவில்லை. இதையெல்லாம் மறைப்பதற்காக ‘டப்பா இன்ஜின்’ என்று திமுகவினர் போஸ்டர் ஒட்டி வருகின்றனர். மதுரையில் பிரதமர் மோடி பங்கேற்கும் பொதுக்கூட்டம் மார்ச் 1-ம் தேதிக்கு மாற்றப்பட்டுள்ளது.

## இன்றைய பஞ்சாங்கம்

07.02.2026 தை 24
சனிக்கிழமை

சூரிய உதயம் 6.36

**திதி:**
இன்று அதிகாலை 4.03 வரை பஞ்சமி பின்பு சஷ்டி.

**நட்சத்திரம்:**
இன்று அதிகாலை 3.03 வரை அஸ்தம் பின்பு சித்திரை

**யோகம் :**
இன்று அதிகாலை 2.12 வரை திருதி பின்பு சூலம்.

**கரணம் :**
இன்று அதிகாலை 4.03 வரை தைதுலம் பின்பு மாலை 4.38 வரை கரசை பின்பு வணிசை.

**அமிர்தாதி யோகம் :**
இன்று அதிகாலை 3.03 வரை அமிர்த யோகம். காலை 6.35 வரை சித்த யோகம் பின்பு யோகம் சரியில்லை.

**சந்திராஷ்டமம்**
இன்று அதிகாலை 3.03 வரை சதயம் பின்பு பூரட்டாதி.

**நல்ல நேரம்**
காலை 7.30 – 8.30.
மாலை 4.30 – 5.30.

**இராகு காலம்**
காலை 9.00 – 10.30

**எமகண்டம்**
பிற்பகல் 1.30 – 3.00.

**குளிகை**
காலை 6.00 – 7.30.

இன்று தேய்பிறை சஷ்டி நாள்.

ஜோதிட நிபுணர்:
இராஜபாளையம்
இராமமூர்த்தி
செல்: 8189908040

# பாகிஸ்தான் தலைநகரில் உள்ள மசூதியில் குண்டுவெடிப்பு 31 பேர் உயிரிழப்பு

**இஸ்லாமாபாத், பிப்.7:** பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாதில் உள்ள கதீஜா துல் குப்ரா மசூதியில் நேற்று மக்கள் அதிகம் கூடியிருந்த சமயம் குண்டுவெடிப்பு நிகழ்ந்துள்ளது. சந்தேக நபர் ஒருவர் மசூதி மண்டபத்தில் வாயில் அருகே தடுத்து நிறுத்தப்பட்டபோது தனது உடலில் கட்டியிருந்த குண்டுகளை வெடிக்கச்செய்துள்ளார்.

இதில் குறைந்தது 31 பேர் கொல்லப்பட்டதாக முதற்கட்ட தகவல் வெளியாகி உள்ளது. மேலும் 160 பேர் காயமடைந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குண்டுவெடிப்பைத் தொடர்ந்து இஸ்லாமாபாத் முழுவதும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. காவல்துறையினர் மற்றும் பாதுகாப்புப் படையினர் அங்கு குவிக்கப்பட்டுள்ளனர். இதுவரை எந்த அமைப்பும் இந்தத் தாக்குதலுக்குப் பொறுப்பேற்கவில்லை.

பாகிஸ்தானின் பலுசிஸ்தான் மாகாணத்தில் பிரிவினைவாதிகள் பயங்கரவாத தாக்குதல்கள் அண்மைக்காலமாக அதிகரித்து வரும் நிலையில் தற்போது பாகிஸ்தான் தலைநகரிலேயே குண்டுவெடிப்பு நிகழ்ந்துள்ளது பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# விஜய்க்கு விதிக்கப்பட்ட ரூ.1.50 கோடி அபராதம் செல்லும்: சென்னை ஐகோர்ட் அதிரடி

**சென்னை, பிப்.7:** நடிகர் விஜய் வீட்டிலும், அலுவலகத்திலும் கடந்த 2015-ம் ஆண்டு வருமான வரித்துறை திடீர் சோதனை நடத்தி ஏராளமான ஆவணங்களை பறிமுதல் செய்தனர். இந்தநிலையில், கடந்த 2015-2016-ம் நிதியாண்டிற்கான வருமானம் 35 கோடியே 42 லட்சத்து 91 ஆயிரத்து 890 ரூபாய் என்று விஜய் கணக்கு காட்டியிருந்தார்.

அந்த ஆண்டுக்கான மதிப்பீட்டு நடவடிக்கையை மேற்கொண்ட வருமான வரித்துறை அதிகாரிகள், 2015-ம் ஆண்டு கைப்பற்றிய ஆவணங்களுடன் ஒப்பிட்டு பார்த்தனர். அப்போது, புலி திரைப் படத்தில் நடிப்பதற்காக அவர் பெற்ற ரூ.15 கோடியை கணக்கில் காட்டவில்லை என்று கண்டுபிடித்தனர். இவ்வாறு வருமானத்தை மறைத்ததற்காக விஜய்க்கு ரூ.1 கோடியே 50 லட்சத்தை அபராதம் விதித்து கடந்த 2022-ம் ஆண்டு ஜூன் 30-ந்தேதி வருமான வரித்துறை உத்தரவு பிறப்பித்தது.



இதை எதிர்த்து சென்னை ஐகோர்ட்டில் நடிகர் விஜய் வழக்கு தொடர்ந்தார். இந்த வழக்கை விசாரித்த ஐகோர்ட்டு, அபராதம் விதித்த வருமான வரித்துறை உத்தரவுக்கு இடைக்கால தடை விதித்து உத்தரவிட்டது. இந்த வழக்கின் இறுதிகட்ட விசாரணை நீதிபதி செந்தில்குமார் ராமமூர்த்தி முன்பு நடந்தது. அனைத்துதரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதி தீர்ப்பை தேதி குறிப்பிடாமல் தள்ளிவைத்து உத்தரவிட்டார்.

இந்தநிலையில், இந்த வழக்கில் தீர்ப்பளித்த சென்னை ஐகோர்ட்டு விஜய் தாக்கல் செய்த மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட்டுள்ளது. விஜய்க்கு வருமான வரித்துறை பிறப்பித்த ரூ.1.50 கோடி அபராதம் செல்லும் எனவும் ஐகோர்ட் தனது உத்தரவில் தெரிவித்துள்ளது.






## திருக்குறள் குறள்-523

**அளவளா வில்லாதான் வாழ்க்கை குளவளாக்
கோடின்றி நீர்நிறைந் தற்று**



சுற்றத்தாரோடு மனம் கலந்து பழகும் தன்மை இல்லாதவனுடைய வாழ்க்கை, குளப்பரப்பானது கரையில்லாமல் நீர் நிறைந்தாற் போன்றது.

## சிந்திக்க ஒரு நொடி



விடையறிந்து எழுத
செல்வது தேர்வு....

விடை அறியாமல்
எழுதிக்
கொண்டிருப்பது
வாழ்க்கை ...

**உஷா முத்துராமன்**

## ஐடிஐ மாணவர்களுக்கு மடிக்கணினிகள்..!



**வந்தவாசி, பிப் 07:** திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி அடுத்த தெள்ளார் எஸ்கேவி தொழிற் பயிற்சி நிலையத்தில் தமிழக அரசின் உலகம் உன் கையில் திட்டம் சார்பில் இரண்டாம் ஆண்டு பயிலும் மாணவர்களுக்கு இலவச மடிக்கணினிகள் வழங்கும் விழா நடைபெற்றது. இந்த நிகழ்வில் தெள்ளாறு புலவர் ந.பானு, கலாம் பவுண்டேசன் நிர்வாகி கேசவராஜ், தொழிற் பயிற்சி நிர்வாகி கோ.பாஸ்கர் உள்ளிட்டோர் பங்கேற்று சிறப்புரை ஆற்றி மடிக் கணினிகளை வழங்கினர்.

## சோழபுரீஸ்வரர் கோயிலில் மகா குடமுழுக்கு விழா



சோளிங்கர் சோழபுரீஸ்வரர் கோயிலில் மகா குடமுழுக்கு விழா நேற்று நடந்தது.

## இந்திய விமானப் படையின் சைக்கிள் பயணக் குழு ராமேசுவரம் அப்துல் கலாம் நினைவிடத்திலிருந்து புறப்பட்டு சென்றது



கார்கில் போர் வெற்றியை நினைவுகூரும் வகையில் விழிப்புணர்வு பிரச்சாரப் பயணத்தை மேற்கொண்டு வரும் இந்திய விமானப் படையின் சைக்கிள் பயணக் குழு நேற்று ராமேசுவரம் அப்துல் கலாம் நினைவிடத்திலிருந்து புறப்பட்டு சென்றது.

## தேரழுந்தூர் ஆமருவியப்பன் கோயில் கும்பாபிஷேகம்



மயிலாடுதுறை மாவட்டம் தேரழுந்தூர் ஆமருவியப்பன் கோயில் கும்பாபிஷேகம் நேற்று நடந்தது.

## காளமங்கலம் கிராமம் பச்சாம்பாளையம் ஸ்ரீ மகா மாரியம்மன் கோவில் திருவிழா

**ஈரோடு, பிப்.07:** ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சி ஒன்றியம் புஞ்சை காளமங்கலம் கிராமம் பச்சாம்பாளையம் ஸ்ரீ மகா மாரியம்மன் கோவில் திருவிழா...

ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி ஒன்றியம், புஞ்சை காளமங்கலம் கிராமம், பச்சாம்பாளையம் அருள்மிகு ஸ்ரீமகா மாரியம்மன் கோவில் திருவிழா நிகழ்ச்சிகள்... 27.01.2026 செவ்வாய் பூச்சாட்டுதலுடன் விழா துவங்கியது.

அதனை தொடர்ந்து 29.01.2026 வியாழன் கம்பம் நடுதல் நிகழ்ச்சி நடைபெற்றது... 05.02.2026 வியாழன் மதியம் காவேரி ஆற்றிற்கு சென்று தீர்த்தம், பால்குடம், காவடி மற்றும் அக்கினி கும்பம் எடுத்து வந்து அம்மனுக்கு சிறப்பு அபிஷேக அலங்காரம் நடைபெற்றது.



இரவு மாவிளக்கு பூஜை, பொங்கல் பூஜை மற்றும் கம்பம் விடுதல் நிகழ்ச்சி நடைபெற்றது 06.02.26 வெள்ளி காலை சிறுவர், சிறுமியர்கள் மற்றும் பெண்களுக்கான விளையாட்டு போட்டி நடைபெற்றது.

மாலை மஞ்சள் நீராட்டு விழா திருவீதி உலா நிகழ்ச்சி மற்றும் ஊஞ்சல் பாட்டு நிகழ்ச்சி நடைபெற்றது 07.02.2026 சனிக்கிழமை மாலை விளையாட்டு போட்டியில் பங்கு பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படும் .

இரவு மறுபூஜை மற்றும் எடுத்துக்காட்டு ஏலம் நடைபெறும்.கோவில் திருவிழா நிகழ்ச்சிகள் ஊர் தர்மகர்த்தா திரு.சரவணன் தலைமையில் ஊர் பொதுமக்கள் மற்றும் உதயம் இளைஞர் நற்பணி மன்றம் சார்பாக நடைபெற்றது கோவிலில் காப்பு கட்டி திருவிழா நிகழ்ச்சிகளை மிகவும் சிறப்பாக நடத்தியவர் கோவில் பூசாரி திரு.மணிகண்டன் மற்றும் திரு.சபாபதி கம்பத்திற்கு சிறுவர், சிறுமியர்கள் மற்றும் பெண்கள் தீர்த்தம் விட்டு மகா மாரியம்மன் வழிபட்டனர்.

## வேலூர் மாவட்டத்தில் உங்க கனவ சொல்லுங்க கருத்துக்கேட்புக் கூட்டம்

**வேலூர், பிப். 07:** வேலூர் மாவட்டத் தொலைநோக்கு திட்டம் 2030 உங்க கனவ சொல்லுங்க கருத்துக்கேட்புக் கூட்டம் வழியாக உங்க கனவ சொல்லுங்க என்ற திட்டத்தின் கீழ் பின்வரும் கருத்துக்களை மாவட்ட ஆட்சியர் வே.இரா. சுப்புலட்சுமியிடம் ஓய்வுபெற்ற ஆசிரியர் செ.நா.ஜனார்த்தனன் கருத்து தெரிவித்தார்!

அரசு நகர்புற மற்றும் ஊர்புற சுகாதார நிலையங்கள் அமைத்து உரிய மருத்துவ வசதி வழங்கி வருகிறது. உள்ளூர் மக்கள் தங்கள் வீட்டின் அருகிலேயே மருத்துவ வசதியினை இந்த நிலையங்கள் வழங்கி வருகின்றன. மேலும் கூடுதலாக வாரத்தில் ஒரு நாள் சிறப்பு மருத்துவர்கள் வருகை தர வைத்து சிகிச்சை அளிக்க வேண்டும்.

தற்போது உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களின் எண்ணிக்கையை மக்கள் தொகை பெருக்கத்தினை கருத்தில் கொண்டு 2030ல் என்ன மக்கள் தொகை இருக்கும் என கணித்து அதற்கேற்றவாறு கூடுதலாக ஆரம்ப சுகாதார / நகர்புற சுகாதார நிலையங்கள் ஏற்படுத்த திட்டமிடவேண்டும். வேலூர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனை அடுக்கம்பாறையில் அமைந்துள்ளது.

பெருகிவரும் மக்கள் தொகையினை கருத்தில் கொண்டு இம் மருத்துவமனைக்கு நோயாளிகள் வந்து செல்ல ஏற்ற வகையில் வேலூர் மாநகரின் பல்வேறு பகுதிகளிலிருந்து நகர பேருந்து வசதிகள் ஏற்படுத்த வேண்டும். குறிப்பாக காட்பாடி, அலமேலுமங்காபுரம், சத்துவாச்சாரி, கொணவட்டம், அரியூர் ஸ்ரீபுரம் ஆகிய



பகுதிகளிலிருந்து அடுக்கம்பாறை வரை, நகர பேருந்துங்கள் இயக்கப்பட்டால் பொதுமக்கள் பெரிதும் பயன்பெறுவர். இதனால் மாநகரில் இரண்டு சக்கர மற்றும் இதர வாகன போக்குவரத்து குறைய வாய்ப்புள்ளது. நகரின் பல சாலைகள் அகலப்படுத்தும் பணிக்காக மரங்கள் அகற்றப்பட்டுள்ளன.

தற்போது சாலையின் இரு மருங்கிலும் புதிய மரக்கன்றுகளை நட்டு பராமரிக்க திட்டமிட வேண்டும். வேலூர் மாநகருக்குக்கென வாகன போக்குவரத்தை குறைக்கும் வகையில் சுற்று வட்ட பாதை அமைக்க வேண்டும்.

சென்னை,நெல்லை,மதுரை போன்ற மாநகரங்களில் பேருந்துகள் வந்து செல்ல ஏதுவாக பஸ் டெர்மினஸ் அமைக்கப்பட்டுள்ளது போல் வேலூர் மாநகரிலும் காட்பாடி, சத்துவாச்சாரி, பாகாயம், கொணவட்டம், ஸ்ரீபுரம் உள்ளிட்ட தேவைப்படும் பகுதிகளில் பஸ் டெர்மினஸ் அமைத்து போக்குவரத்தினை எளிமைபடுத்த வேண்டும். காட்பாடி ரயில் நிலைய சந்திப்பு போக்குவரத்து நெரிசல் மிகுந்த பகுதியாகவே எப்போதும் உள்ளது. நகர பேருந்துகள் ரயில் நிலையத்திற்குள் வந்து சென்றால் நெடுஞ்சாலையில் போக்குவரத்து ஸ்தம்பிக்காது. காட்பாடியில் நிறுவப்பட்ட அனைத்து போக்குவரத்து சிக்னல்களும் செயல்படாமல் உள்ளன.

அதனை செயல்பட வைக்க வேண்டும். நகர பேருந்து 1 மற்றும் 2 வழித்தடத்திற்கான நேர ஒதுக்கீடு 20 ஆண்டுகளுக்கு முன் நிர்ணயிக்கப்பட்டது. தற்போதுள்ள மற்றும் இனி ஏற்படும் போக்குவரத்து வாகன நெரிசலை கணக்கில் கொண்டு வழித்தடங்களின் நேரம் திருத்தி நிர்ணயிக்கப்பட வேண்டும்.

பெருகி வரும் மக்கள் தொகை மற்றும் இரு சக்கர வாகனங்கள், மற்றும் நான்கு சக்கர வாகனங்களின் எண்ணிக்கை ஆகியவற்றை கருத்தில் கொண்டு காட்பாடி ரயில்வே மேம்பாலம் விரிவு படுத்தப்பட வேண்டும் அல்லது கூடுதலாக ஒரு மேம்பாலம் கட்டப்படவேண்டும்.

இவ்வாறு அந்த கருத்து கேட்ப கூட்டத்தில் செ. நா. ஜனார்த்தனன் தனது கருத்துக்களை தெரிவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## பாவாணர் பிறந்த நாள் விழா




**இளமனூர், பிப்.07:** இளமனூர் அரசு மேனிலைப் பள்ளியில் மொழிஞாயிறு தேவநேயப்பாவாணரின் 124 ஆவது பிறந்தநாள் விழா கொண்டாடப்பட்டது. தலைமையாசிரியர் கனகலட்சுமி தலைமை வகிக்க, ஆசிரியை தேவி முன்னிலை வகித்தார். தமிழாசிரியர் மகேந்திர பாபு வரவேற்றார். தமிழாசிரியர் நாகேந்திரன், சமூக அறிவியல் ஆசிரியர் இராணி வாழ்த்திப் பேசினார்கள். சிறப்பு விருந்தினராக உலகத் தமிழ் கழக மதுரை மாவட்ட அமைப்பாளரும், பாவாணரின் கொள்ளுப்பெயரனுமான சீவாப்பாவாணர் கலந்து கொண்டு, பாவாணரின் தமிழாராய்ச்சிப் பற்றிப் பேசினார்.

பாவாணர் அவர்கள் ஐம்பது ஆண்டுகளாக வேர்ச்சொல்லாராய்ச்சித் துறையில் 52 நூல்கள் எழுதியுள்ளார். அதில் தமிழ் மொழியின் வரலாறு குறித்தும், தமிழர் வரலாறு குறித்தும், உலகின் முதல் மனிதன் தமிழன், அவன் தோன்றியது குமரிக் கண்டம் எனவும் நிறுவியவர் பாவாணர் அவர்கள். அவரது ஆய்வுகள் இன்று போற்றப்படுகிறது. ஆனால் அவர் வாழ்ந்த காலத்தில் அவரது ஆய்விற்கு உரிய மதிப்பு தரப்படவில்லை. ஆயினும் பாவாணர் மொழிக்கான தனது ஆராய்ச்சியைத் தொடர்ந்து செய்தார். தமிழ்ச்சொல் வளம் குறித்து அவரது ஆய்வு இன்று பலரையும் வியப்பில் ஆழ்த்தியுள்ளது. இன்றைய மாணவர்கள் பாவாணரின் நூல்களைப் படித்து நம் மொழியின் பெருமையை, சிறப்பை உணர வேண்டும். பாவாணரின் ஆய்வைப் பின்பற்றி இன்று பலரும் மொழியாராய்ச்சி செய்து வருகிறார்கள் என்றார். உடற்கல்வி ஆசிரியர் முத்துராசா நிகழ்வை ஏற்பாடு செய்தார். ஒன்பதாம் வகுப்பு மாணவி சக்திபிரியா நன்றி கூறினார்.

## தொங்கும் பூங்காவில் 'தமிழ்நாடு தலைகுனியாது' என்ற தலைப்பில் கலந்துரையாடல்



சேலம் மாநகராட்சி தொங்கும் பூங்காவில் 'தமிழ்நாடு தலைகுனியாது' என்ற தலைப்பில் கலந்துரையாடல் மற்றும் கருத்துக் கேட்பு கூட்டத்தில் மக்களிடம் இருந்து கோரிக்கை மனுக்களை தயாநிதி மாறன் எம்.பி. பெற்றுக் கொண்டார்.

## பத்ரகாளியம்மன் திருக்கோயில் கும்பாபிஷேக விழா



திருச்செங்கோடு அர்த்தநாரீஸ்வரர் திருக்கோயிலின் உப கோயிலான பத்ரகாளியம்மன் திருக்கோயில் கும்பாபிஷேக விழா நேற்று நடந்தது.

## போராட்டம் நடத்திய அங்கன்வாடி பணியாளர்களுக்கு அன்புமணி ஆதரவு



செங்கல்பட்டு கலெக்டர் அலுவலகம் அருகில், கோரிக்கைகளை வலியுறுத்தி போராட்டம் நடத்திய அங்கன்வாடி பணியாளர்கள் மற்றும் கிராம ஊராட்சி உதவியாளர்களுக்கு பாமக தலைவர் அன்புமணி ஆதரவு தெரிவித்தார்.

## வாக்காளர் விழிப்புணர்வு பேரணி




கோவில்பட்டியில் நடந்த வாக்காளர் விழிப்புணர்வு பேரணியை சப்கலெக்டர் ஹிமான்ஷு மங்கள் தொடங்கி வைத்தார்.

## குளித்தலையில் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை புதிய கட்டிடம் திறப்பு





குளித்தலையில் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை புதிய கட்டிடத்தை முதல்வர் ஸ்டாலின் காணொலியில் திறந்து வைத்ததை அடுத்து அங்கு முன்னாள் அமைச்சர் செந்தில்பாலாஜி குத்துவிளக்கேற்றினார். கலெக்டர் தங்கவேல், குளித்தலை சப் கலெக்டர் சுவாதிஸ்ரீ, இணை இயக்குநர் (மருத்துவப் பணிகள்) செழியன் உடன் உள்ளனர்.

## மயிலாடுதுறை பிரசன்ன மாரியம்மன் ஆலய 42 -வது ஆண்டு தை கடைவெள்ளி பால் குட அபிஷேக அன்னதான விழா

**மயிலாடுதுறை , பிப் .07:** மயிலாடுதுறை வண்டிக்காரத்தெரு அருள்மிகு பிரசன்ன மாரியம்மன் ஆலய 42-வது ஆண்டு தை கடைவெள்ளி, பால்குட அபிஷேக, அன்னதான விழா தை மாதம் 25-ந் தேதி வெள்ளிக்கிழமை காலை நடைப்பெற்றது.

மயிலாடுதுறை துலாக்கட்டத்திலிருந்து 108 பால்குடம் மற்றும் பச்சைக் காளி, பவளக்காளி காளியாட்டத்துடன் வீதிவலம் வந்து பிரசன்ன மாரியம்மனுக்கு பால்



அபிஷேகமும், கஞ்சி வார்த்தலும், மதியம் 1மணிக்கு அன்னதானமும், மாலை 6 மணிக்கு சந்தனக் காப்பு அலங்காரமும் நடைபெற்றது.

பக்த கோடிகள் திரளாக வருகை வந்து அம்மன் அருள் பெற்றார்கள்.

விழா ஏற்பாடுகளை திருக்கோயில் நிர்வாகம், கார்த்தி, ராஜ்(என்கிற) ஸ்ரீதர் , மயிலாடுதுறை நகர அனைத்து மலர் வணிக உரிமையாளர்கள் மற்றும் ஊழியர்கள் செய்தனர்.

## துணை தேர்தல் ஆணையர் பிப். 11-இல் தமிழகம் வருகை!

**சென்னை, பிப்.7:**

தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல், ஏப்ரல் மாதம் நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதற்கான முன்னேற்பாட்டு நடவடிக்கைகளை இந்திய தேர்தல் ஆணையம் மேற்கொண்டு வருகிறது. பிப்ரவரி 17 அன்று தமிழகத்திற்கான இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட உள்ளது. முன்னதாக பிப்ரவரி 11 அன்று துணை தேர்தல் ஆணையர் பானு பிரகாஷ் எத்துரு தமிழ்நாடு வருகிறார். இறுதி வாக்காளர் பட்டியல், தேர்தல் முன்னேற்பாடுகள் குறித்து, தமிழ்நாடு தலைமை தேர்தல் அதிகாரியுடன் அவர் ஆலோசனைநடத்துகிறார்.

## ‘உயிரிழந்த பறவைகளை கைகளால் தொடக்கூடாது!’

**சென்னை, பிப். 7:**

உயிரிழந்த பறவைகளை வெறும் கைகளால் தொடக்கூடாது என்று தமிழ்நாடு கால்நடைத்துறை அறிவுறுத்தல் வழங்கியுள்ளது. மேலும், உயிரிழக்கும் பறவைகள் மற்றும் பசு மாடுகளை எரிக்க வேண்டும் அல்லது ஆழமாக குழிதோண்டி புதைக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. கோழிப் பண்ணைகளுக்குள் வெளி நபர்களை அனுமதிக்கக் கூடாது என்றும், ஒரு கோழிப் பண்ணையில் வேலை செய்பவர் பல பண்ணைகளுக்குச் செல்வதை தவிர்க்க வேண்டும் என்றும் கால்நடைத்துறை தெரிவித்துள்ளது. பிற மாநிலங்களில் இருந்து கோழிகளையோ, கோழி இறைச்சியையோ கொண்டுவரக்கூடாது என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## ஐசிஎப் வேலைவாய்ப்பில் உள்ளூர் மக்களுக்கு முன்னுரிமை! ஆ. ராசா கோரிக்கை

**சென்னை, பிப். 7:**

தமிழ்நாடு உட்பட நாட்டில் இயங்கும் ‘வந்தே பாரத்’ எக்ஸ்பிரஸ் ரயில் கள் மற்றும் ‘அம்ரித் பாரத்’ ரயில்களின் பட்டி யல் குறித்து மக்களவை யில் திமுக துணைப் பொதுச்செயலாளர் ஆ. ராசா எம்.பி. கேள்வி எழுப்பியுள்ளார். மேலும், அதிவேக எக்ஸ்பிரஸ் ரயில்கள் தயாரிக்கும் ரயில் பெட்டி தொழிற்சாலைகளின் விவ ரங்கள் என்ன என்றும் கேள்வி எழுப்பியுள்ள ஆ.ராசா, ஐசிஎப் பெரம்பூர் உட்பட ரயில் பெட்டிகள் தயாரிக்கும் தொழிற்சாலைகளில் உள்ளூர்வாசிகளுக்கு முன்னுரிமை அளிக்க அரசு முன்மொழிகிறதா என்ற கேள்வியையும் எழுப்பியுள்ளார். 2026 ஜனவரி 1 நிலவரப்படி, கடந்த மூன்று ஆண்டு களில் தெற்கு ரயில்வே யில் நிரந்தர மற்றும் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட ஊழியர்களின் எண்ணிக் கை என்ன? என்பது உள்ளிட்ட கேள்விகளை ஆ. ராசா கேட்டுள்ளார்.

## புகையிலை விற்பனை: ஒருவர் மீது வழக்கு

**திருவில்லிபுத்தூர், பிப்.7:**

திருவில்லிபுத்தூர் நகர் காவல்நிலையம் எல்லைக்கு உட்பட்ட மாவட்ட நீதிமன்ற வளாகம் அருகே சார்பு ஆய்வா ளர் மாணிக்கம் வாகன தணிக்கை செய்தார். அப்போது அருப்புக்கோட்டை வட்டம் பந்தல்குடி அருகே வெள்ளை யாபுரம் கிராமத்தைச் சேர்ந்த விக்னேஷ் என்பவரின் வாக னத்தை சோதனை செய்தபோது தடை செய்யப்பட்ட புகை யிலைப் பொருட்கள் விற்பனைக்கு கொண்டு வந்தது கண்டுபிடிக்கப்பட்டது. பொருட்களை கைப்பற்றி, விக்னேஷ் மீது வழக்கு பதியப்பட்டது.

## வார இறுதி விடுமுறை: 725 சிறப்பு பேருந்துகள் இயக்கம்

**சென்னை, பிப்.7:**

சென்னை மற்றும் பிற நகரங்களிலிருந்து வார இறுதி விடுமுறையை முன்னிட்டு சொந்த ஊர் செல்லும் பயணிகளுக்காக நாளை முதல் 725 சிறப்பு பேருந்துகள் இயக்கப்பட உள்ளன. சென்னை கிளாம்பாக்க த்திலிருந்து பல்வேறுநகரங்களுக்கு வெள்ளிமற்றும்சனிக்கிழமைகளில் மொத்தம் 495 பேருந்து களும், கோயம்பேட்டி லிருந்து 110 பேருந்துகளும், மாதாவரத்திலிருந்து 20 பேருந்துகளும் இயக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், பெங்களூரு மற்றும் கோயம்புத்தூர் உள்ளிட்ட இடங்களிலிருந்து மற்ற ஊர்களுக்கு 100 சிறப்பு பேருந்துகள் இயக்கப்படும். ஞாயிற்றுக் கிழமை மீண்டும் ஊர் திரும்பவும் பயணிகளின் தேவைக் கேற்ப பேருந்து கள் இயக்கப்படும் நிலை யில், இதுவரை 21,000-க்கும் மேற்பட்டோர் பயணிக்க முன்பதிவு செய்துள்ளனர். கூட்ட நெரிசலைத் தவிர்க்க பயணிகள் WWW.TNSTC.IN இணையதளம் மூலம் முன்பதிவு செய்து பய ணிக்க போக்குவரத்து கழகம் அறிவுறுத்தியுள்ளது.

## எம்.ஜி.ஆர் பல்கலைக்கழக 34வது பட்டமளிப்பு விழா: ‘இஸ்ரோ’ தலைவர் டாக்டர் நாராயணன், டைரக்டர் கே.பாக்யராஜ்க்கு கவுரவ டாக்டர் பட்டம்



**சென்னை, பிப்.7:**

டாக்டர் எம்.ஜி.ஆர். கல்வி மற்றும் ஆராய்ச்சி பல்கலைக்கழகத்தின் 34வது பட்டமளிப்பு விழா சென்னை வேலப்பன் சாவடி ஏ.சி.எஸ். மருத்துவமனையில் அமைந்துள்ள கன்வென்ஷன் அரங்கில் நடந்தது. அப்போது தேர்வில் வெற்றி பெற்ற 3750 மாணவ மாணவிகளுக்கு அவரவர் தேறிய படிப்புக்களில் பட்டங்கள் வழங்கப்பட்டது.

டாக்டர். அபிஜத் சந்திரகாந்த் ஷேத் (தேசிய மருத்துவ ஆணையத்தின் தலைவர்) பேசுகையில், அனைத்து துறைகளிலும முதலிடம் பிடித்த முது நிலை மற்றும் இளநிலைப் பட்டதாரி மாணவ மாணவிகளுக்கு பதக்கங்களையும், பட்டங்களை யும் வழங்கி உரையாற்றினார்.

விழாவில் டாக்டர் வி.நாராயணன் (இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தின் தலைவர், பெங்களூர்) கே. பாக்யராஜ் (திரைப்பட இயக்குனர்) இருவரும் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர். இருவருக்கும் வேந்தர் ஏ.சி. சண்முகம் கவுரவ டாக்டர் பட்டங்களை வழங்கினார். பின் அவர் சிறப்புரையாற்றினார்.

தலைவர் அருண்குமார் சிறப்பு விருந்தினர்களை கவுரவித்தார். கல்லூரி மற்றும் மருத்துவமனை செயலாளர் ஏ.ரவிக்குமார் (துணைவேந்தர்), டாக்டர் எஸ். கீதாலட்சுமி (துணை தலைவர்), டாக்டர் எம்.கே. பத்நாபன் (இணை துணை வேந்தர்) டாக்டர்கள் எம். ரவிச்சந்திரன், சி.எஸ். ஜெயசந்திரன், டி.விஸ்வநாதன் ஜி.சி. கோதண்டன், என். வாசுதேவன் (திட்ட இயக்குனர்), ஏ.ஞானசேகரன் (விசேஷ அதிகாரி) (பதிவாளர் டாக்டர் பி.பழனிவேலு, பல்கலைக்கழக அதிகாரிகள், பேராசிரியர்கள் மற்றும் மாணவ, மாணவிகள் பங்கேற்றனர்.

## அண்ணா பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் 1 லட்சத்து 50 ஆயிரத்து 595 பேருக்கு பட்டங்கள்: கவர்னர் வழங்கினார்

**சென்னை, பிப்.7:**

அண்ணா பல்கலைக்கழகத்தின் 46-வது பட்டமளிப்பு விழா, கல்லூரி வளாகத்தில் உள்ள விவேகானந்தர் அரங்கத்தில் நேற்று நடைபெற்றது. பல்கலைக்கழக வேந்தரும், கவர்னருமான ஆர். என்.ரவி தலைமை தாங்கினார். அவர் பல்கலைக்கழக அளவில் முதலிடம் பிடித்த மாணவ-மாணவிகளுக்கு பதக்கங்களையும் பட்டங்களையும் வழங்கினார். அதில் பி.இ., பிடெக், எம்.இ., எம். டெக் உள்ளிட்ட படிப்புகளில் ஒரு லட்சத்து 50 ஆயிரத்து 595 பேருக்கு பட்டங்கள் வழங்கப்பட்டன. அவர்களில் 953 பேர் பி.எச். டி. பட்டதாரிகள் ஆவார்கள்.

இந்த விழாவில் தமிழக அரசின் உயர்கல்வித்துறையின் செயலாளர் பொ.சங்கர் வரவேற்று பேசினார். அப்போது அவர், தமிழக அரசு அண்ணா பல்கலைக்கழகத்தை உலகத்தரத்துக்கு மேம்படுத்தும் வகையில் செயற்கை நுண்ணறிவு கட்டமைப்புகள், ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுப் பணிகள் ஆகியவற்றுக்காக ரூ.1,380 கோடி வழங்கி உள்ளது என்றார்.

விழாவில் விஞ்ஞானி மயில்சாமி அண்ணாதுரை கலந்துகொண்டு பேசியபோது கூறியதாவது:- நானும் இங்கு படித்தவன் என்பதால் அதில் கலந்து கொள்வதில் பெருமைபடுகிறேன். எனது பள்ளிக்காலம் முதல் எனது பணியில் சேர்ந்தது வரை நான் விரும்பியது எனக்கு கிடைக்கவில்லை. கிராமத்தில் உள்ள அரசு பள்ளியில் படித்தேன். உயர்நிலைப்பள்ளிக்கு சைக்கிளில் சென்று படிக்க ஆசைப்பட்டேன்.

ஆனால், சைக்கிள் வாங்க முடியாமல் நடந்து சென்றுதான் உயர்நிலைப்பள்ளிக்குச் சென்றேன். எனது உயர்கல்வியை தமிழ்வழியில் படிக்க விரும்பினேன். ஆனால் ஆங்கில வழியில் தான் என்ஜினீயரிங் படிப்பை படித்தேன். பதக்கமும் பெற்றேன்.

எனக்கு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு பணியில் சேர வேண்டும் என்பது தான் ஆசை. ஆனால், இஸ்ரோவில் செயற்கைக்கோள் திட்டத்தில் பணி கிடைத்தது. ஆனால் கிடைத்த பணியை விரும்பி செய்தேன். 12 செயற்கைக் கோள்களை விண்ணில் செலுத்தும் பணியில் திட்ட இயக்குனராக பணியாற்றியுள்ளேன். நிலவுக்கு வெற்றிகரமாக அனுப்பப் பட்ட இந்தியாவின் முதல் விண்கல திட்டமான சந்திரயான்-1 திட்டத்துக்கு தலைமை தாங்கி வழிநடத்தினேன். நாம் விரும்புவது கிடைக்கா விட்டாலும் கிடைப்பதை விரும்பி செய்தால் அதுவும் வெற்றிதான். மாணவர்களுக்கு எனது வேண்டுகோள், கிடைக்கின்ற வாய்ப்புகளை நன்கு பயன்படுத்திக் கொள்ளுங்கள் என்பதுதான். அரசு பள்ளிக்குச் செல்லும் அச்சத்தையும், தமிழ்வழியில் அறிவியல் படிக்க முடியுமா? என்ற அச்சத்தையும் தவிருங்கள். இவ்வாறு அவர் கூறினார்.

## தமிழ்நாடு மெர்க்கன்டைல் வங்கி நிகர லாபம் ரூ.342 கோடி: நிர்வாக இயக்குநர்

**தூத்துக்குடி, பிப்.7:**

நடப்பு மூன்றாம் காலாண்டில் தமிழ்நாடு மெர்க்கன்டைல் வங்கி ரூ.342 கோடி நிகர லாபம் ஈட்டியது.

தூத்துக்குடியை தலைமை யிடமாக கொண்டு செயல்படும் தமிழ்நாடு மெர்க்கன்டைல் வங்கியின் இயக்குனர் குழு கூட்டம் தூத்துக்குடியில் நடந்தது.

கூட்டத்தில் நடப்பு 2025-26-ம் நிதியாண்டின் 3-ம் காலாண்டுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை அறிக்கை முடிவுகள் இறுதி செய்யப்பட்டன. இதனை வங்கியின் நிர்வாக இயக்குனர் மற்றும் தலைமை செயல் அதிகாரியான சலீ எஸ். நாயர் வெளியிட்டார். அதில் கூறி இருப்பதாவது:-

தூத்துக்குடியை தலைமை யிடமாக கொண்டு 1921-ம் ஆண்டு தொடங்கப்பட்ட தமிழ்நாடு மெர்க்கன்டைல் வங்கி தொடர்ந்து சிறப்பாக செயல்பட்டு ஒவ்வொரு ஆண்டும் லாபம் ஈட்டி வருகிறது. 2025-26-ம் நிதியாண்டின் 3-ம் காலாண்டில் வங்கியானது தனது மொத்த வணிகத்தில் 14.28 சதவீதம் வளர்ச்சியடைந்து ரூ.1 லட்சத்து 7 ஆயிரத்து 470 கோடியை எட்டி உள்ளது. வைப்புத்தொகை ரூ.56,707 கோடி என்ற நிலையை அடைந்துள்ளது. கடன்களின் மொத்த தொகை ரூ.50,763 கோடியாக உள்ளது. இது 16.30 சதவீதம் வளர்ச்சியை எட்டி உள்ளது. வங்கியின் நிகர மதிப்பு ரூ.9,744 கோடியாக உயர்ந்து உள்ளது. முந்தைய ஆண்டின் 3-ம் காலாண்டில் இது ரூ.8,715 கோடியாக இருந்தது. வங்கியின் நிகர லாபம் 14 சதவீதம் அதிகரித்து ரூ.342 கோடியாக உயர்ந்து உள்ளது. வங்கியின் செயல்பாட்டு லாபம் ரூ.408 கோடியில் இருந்து ரூ.468 கோடியாக உயர்ந்து உள்ளது. நிகர வட்டி வருமானம் ரூ.646.14 கோடியாக உள்ளது.. முந்தைய ஆண்டின் 3-வது காலாண்டில் ரூ.570.39 கோடியாக இருந்தது. மொத்த வராக்கடன் 1.32 சதவீதத்தில் இருந்து 0.91 சதவீதமாகவும், நிகர வராக்கடன் 0.41 சதவீதத்தில் இருந்து 0.20 சதவீதமாகவும் குறைந்து உள்ளது. தமிழ்நாடு மெர்க்கன்டைல்வங்கி பங்குகளின் புத்தக மதிப்பு ரூ.550.38-ல் இருந்து ரூ.617.22 ஆக அதிகரித்து உள்ளது.

## சர்வதேச சுற்றுலா தலமாக உருவாகும் மதுரை, காஞ்சி நகரங்கள்!

**புதுடெல்லி, பிப்.7:**

வரும் 2026- 27ம் நிதியாண்டுக்கான மத்திய பட்ஜெட்டை நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் மக்களவையில் தாக்கல் செய்தார்.

இதில் கோயில் நகரங்கள், இரண்டாம், மூன்றாம் நிலை நகரங்களின் வளர்ச்சிக்காக ரூ.5,000 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது.

இந்த திட்டத்தின் மூலம் நாடு முழுவதும் 50 ஆன்மிக நகரங்கள் சர்வதேச சுற்றுலா மையங்களாக உருவாக்கப்பட உள்ளன. வடக்கு பிராந்தியத்தில், உத்தர பிரதேசத்தின் வாராணசி, மதுரா, உத்தராகண்ட் மாநிலத்தில் ரிஷிகேஷ், ஹரித்வார் மற்றும் ஜம்மு காஷ்மீரின் முக்கிய ஆன்மிக சுற்றுலா தலங்கள் சர்வதேச சுற்றுலா தலங்களாக உருவாக்கப்பட உள்ளன.





தெற்கு பிராந்தியத்தில் தமிழகத்தின் கோயில் நகரங்களாக அழைக்கப்படும் மதுரை, காஞ்சிபுரம் ஆகியவை சர்வதேச சுற்றுலா தலங்களாக மாற்றப்பட உள்ளன. ஆந்திராவின் புகழ்பெற்ற ஆன்மிகத் தலமான திருப்பதி, யுனெஸ்கோவின் உலக பராம்பரிய சின்னம் அங்கீகாரம் பெற்ற கர்நாடகாவின் ஹம்பி ஆகியவையும் சர்வதேச சுற்றுலா தலங்களாக உருவாக்கப்பட உள்ளன. மேலும் ஒடிசாவில் புரி, மேற்குவங்கத்தில் விஷ்ணுபூர், மத்திய பிரதேசத்தில் உஜ்ஜைனி, கஜுராஹோ, குஜராத்தில் துவாரகா, மகாராஷ்டிராவில் பந்தர்பூர் ஆகிய ஆன்மிக நகரங்களும் சர்வதேச சுற்றுலா தலங்களாக மாற்றப்பட உள்ளன.

அருணாச்சல பிரதேசம், சிக்கிம், அசாம், மணிப்பூர், மிசோரம் ஆகிய மாநிலங்களில் உள்ள புத்த வழிப்பாட்டுத் தலங்களில் சர்வதேச தரத்துக்கு இணையாக உள்கட்டமைப்பு வசதிகள் மேற்கொள்ளப்பட உள்ளன. மேலும் தமிழகத்தின் ஆதிச்சநல்லூர் உட்பட நாடு முழுவதும் 15 அகழ்வாராய்ச்சி தலங்கள் சர்வதேச சுற்றுலா தலங்களாக மேம்படுத்தப்பட உள்ளன.

சமீபத்திய புள்ளிவிவரங்களின்படி ஒவ்வொரு ஆண்டும் சுமார் ஒரு கோடிக்கும் மேற்பட்ட வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் இந்தியாவுக்கு வருகை தருகின்றனர். புதிய திட்டங்கள் மூலம் இந்த எண்ணிக்கையை 10 கோடியாக அதிகரிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு உள்ளது.

சுற்றுலா துறை மூலம் மத்திய அரசுக்கு ஆண்டுக்கு ரூ.43.25 லட்சம் கோடி வருவாய் கிடைக்கிறது. இந்த துறையின் மூலம் 6.3 கோடி பேர் வேலைவாய்ப்பும் பெற்றுள்ளனர். இதை கருத்தில் கொண்டு மத்திய பட்ஜெட்டில் சுற்றுலா துறை மேம்பாட்டுக்கு ரூ.2,438.40 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது..

தமிழ்நாடு இ பேப்பர்.காம்
www.tamilnaduepaper.com

இ பேப்பரை தினமும் இலவசமாக பெற விரும்புபவர்கள்.

"welcome Tamilnadu" என்று கீழ் உள்ள வாட்ஸ்ஆப் எண்ணிற்கு அனுப்பி வையுங்கள். தங்களின் அமைப்பு செய்திகள் தங்கள் பகுதியில் நடைபெறும் நிகழ்ச்சிகளை வெளியிட செய்தி மற்றும் புகைப்படத்தை கீழ்உள்ள வாட்ஸ்ஆப்பிற்கு அனுப்புங்கள்

94452 65389



## நலம் தரும் மருத்துவம்

## சுக்குப் பொடியில் சுருண்டு போகும் நோய்கள்!

சுக்கு பல்வேறு உடல் நல பிரச்னைகளை தீர்க்கும் மருத்துவ பொருள். அவற்றினால் ஏற்படும் நன்மைகளைப் பற்றி இப்பதிவில் காண்போம்.

இஞ்சியை சுண்ணாம்பு நீரில் ஊற வைத்து வெயிலில் உலர்த்துகிறார்கள். அப்படி காய்ந்த இஞ்சியே சுக்கு ஆகிறது.

வீட்டு வைத்தியத்துக்கு உதவும் மருந்து சரக்குகளில் சுக்கு முதலிடம் பெறுகிறது. இது சுலபமாகக் கடைகளில் கிடைக்கிறது. எப்போதும் வீடுகளில் இருப்பது; எச்சமயத்திலும் முதல் உதவிக்கு உதவும் மருந்து என்று சுக்கைக் கூறலாம்.

பித்தம்: சிலருக்கு பித்தம் அடிக்கடி தலை தூக்கும். தலைவலி, உடம்பில் வலி, தலை சுற்றல், வாந்தி, பேதி முதலியன ஏற்படும். உடம்பில் ஓச்சல் அதிகமாக இருக்கும். சுக்குப் பொடியை தேனில் குழைத்தோ, சர்க்கரையில் கலந்தோ உட்கொண்டால் நோய் தீரும்.

வயிற்று நோய்: சாப்பிடும் பொருட்களில் சிறு சுக்குப் பொடியை கலந்தால் உணவு ஜீரணமாக உதவும். வயிற்று வலி இருந்தால் அடியோடு மறைந்துவிடும்.

அஜீரணம்: சுக்கு உணவில் ஜீரணத்தை தூண்டுவதால் பேதிக்கு மருந்து சாப்பிடும் போது சுக்கு கசாயத்தை அனுபானமாக சாப்பிடுவது உண்டு. மிளகு ரசத்திலும் சிறிது சுக்கை சேர்க்கலாம்.

தலை நோய்: தலைவலி கடுமையாக இருந்தாலும் கூட தண்ணீர் விட்டு சுக்கை உரைத்து பொட்டுகளில் தடவினால் சரியாகும்.

கக்குவான் இருமல்: சுக்கை உப்பு நீரில் / இந்துப்பு நீரில் அரை மணி நேரம் ஊறவைத்தபின் தணலில் இட்டு சுட வேண்டும். பிறகு சுக்கின் மேல் தோலை அகற்றி எடுத்துவிட்டு உட்பகுதியை பொடி செய்து தினந்தோறும் அதிகாலையில் உட்கொண்டு வந்தால் கக்குவான், இருமல் முதலாக எல்லா வித இருமல்களும் குணமாகும்.

பேதிகள்: எந்தவிதமான பேதியானாலும் பசுமோரில் அரைத்த சுக்கினை ஒரு ஸ்பூன் அளவு கலந்து தினந்தோறும் இரண்டு முறை உட்கொண்டால் நின்று விடும்.

குளிர் ஜுரம்: மிளகு, கிராம்பு, பொரித்த வெண்காரம் இவற்றை சம பாகம் சேர்த்து பொடி செய்து தேன் கலந்து மாத்திரை செய்து தினந்தோறும் மூன்று மாத்திரைகள் உட்கொண்டால் குளிர் சுரம் நீங்கும்.

விக்கல்: சுக்குப்பொடியை தேனில் கலந்து விக்கல் வந்த சமயத்தில் கொடுத்தால் தொடர் விக்கல் நின்று விடும்.

முகப்பருக்கள்: பருக்களின் மேல் சுக்கு விழுதை அடிக்கடி தடவினால் சில நாட்களில் பருக்கள் மறைந்து விடும்.

வீக்கம், கீழ் வாயுக்கள்: உடலில் எந்த பாகத்திலாவது வீக்கமோ கீழ்வாயுவோ தொந்தரவு செய்தால் சுக்கை அரைத்து தடவி சூடு காண்பித்தால் அந்த நோய் நீங்கிவிடும்.

தேள் கொட்டு: அரைத்த சுக்கு விழுதை தேள் கொட்டுவாயில் தடவி நெருப்பு சூடு காட்டினால் தேள் விஷம் நீங்கும்.

சுக்கு கசாயம்: ஒரு பாத்திரத்தில் தண்ணீர் வைத்து அதில் சுக்கு பொடியை கொதிக்க விட்டு இறக்கவும் இதுதான் சுக்கு கசாயம். ஒரு பெரிய டம்ளர் நீரில் அரை ஸ்பூன் சுக்குப்பொடியை சேர்த்து இதில் சிறிது பாலும், சர்க்கரையும் கலந்து தினம் காப்பிக்கு பதிலாக போட்டு அருந்தி வந்தால் சில மாதங்கள் சாப்பிட்டபின் இதன் பயன் தெரியும். இதனால் கண்கள் தெளிவு பெறும். ஜீரண சக்தி, மிகவும் மந்தம், அஜீரணம், வாதம், வயிற்று நோய், குளிர் ஜுரம், மலச்சிக்கல், மூலநோய், வயிற்றில் கட்டி முதலிய நோய்கள் நீங்கும் மற்றும் யானைக்கால் வியாதி தொடங்கும் பொழுதே தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் அந்த நோயிலும் தப்பலாம். சரியாக கசாயத்தை உபயோகித்து வந்தால் இனம் தெரியாத பல நோய்கள் தீருவதுடன் உடலில் நோய் வராமலே பாதுகாக்கலாம். சித்த, ஆயுர்வேத வைத்திய முறைகளில் முதன்மை பெற்றதால் “சுக்கிற்கு மிஞ்சின வைத்தியம் இல்லை” என்ற முதுமொழியே இதற்கு சான்று பகிர்கிறது.

சுக்கு சூரணம்: நன்கு இடித்த சுக்கு பொடி கால் டம்ளர் எடுத்து, ஒரு டம்ளர் புளித்த தயிரில் கலந்து வெயிலில் நன்றாக உலர்த்தவும். அதனுடன் மிளகு, அரிசி திப்பிலி, இந்துப்பு, சீரகம் அனைத்தையும் கால் டம்ளர் அளவும் பெருங்காயம் சிறிதளவு எடுத்து பொரித்து நன்றாக பொடித்து, அவற்றை இதனுடன் கலந்து தினசரி காலை, மாலை ஒரு டீஸ்பூன் வீதம் சாப்பிட்டு வர வயிற்று உபாதைகள் அனைத்தும் நீங்கும்.

## கொலை, கொலை முயற்சி வழக்கில் 2 பேர் தடுப்பு காவல் சட்டத்தில் கைது

**தூத்துக்குடி, பிப்.7:**

தூத்துக்குடி மாவட்டம், கழுகுமலை பகுதியில் நடந்த கொலை வழக்கில் சம்பந்தப்பட்ட தென்காசியை சேர்ந்த ராஜேஷ்குமார் (வயது 25) மற்றும் முத்தையாபுரம் பகுதியில் நடந்த கொலை முயற்சி வழக்கில் சம்பந்தப்பட்ட முத்தையாபுரம் பகுதியை சேர்ந்த அருள்ஆனந்தம்(39) ஆகியோர் மீது தமிழ்நாடு தடுப்பு காவல் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்குமாறு கழுகுமலை, முத்தையாபுரம் காவல் நிலைய இன்ஸ்பெக்டர்கள் மாவட்ட எஸ்.பி.யிடம் வேண்டுகோள் விடுத்தனர்.

மேற்சொன்ன போலீஸ் இன்ஸ்பெக்டர்களின் வேண்டுகோளின்பேரில், தூத்துக்கு மாவட்ட எஸ்.பி. சிலம்பரசன் பரிந்துரையின்படி, மாவட்ட கலெக்டர் இளம்பகவத் உத்தரவின்பேரில், மேற்சொன்ன 2 பேரையும் நேற்று போலீசார் தமிழ்நாடு தடுப்பு காவல் சட்டத்தின் கீழ் பாளையங்கோட்டை மத்திய சிறையில் அடைத்தனர்.

## சிறப்பாக பணியாற்றிய காவல் துறையினர் 151 பேருக்கு எஸ்.பி. பாராட்டு

**தூத்துக்குடி, பிப்.7:**

தூத்துக்குடி மாவட்டத்தில் போலீஸ் டி.எஸ்.பி.க்கள், போலீஸ் இன்ஸ்பெக்டர்கள் மற்றும் சப்-இன்ஸ்பெக்டர்களுக்கான மாதாந்திர ஆய்வு கூட்டம் மாவட்ட எஸ்.பி. அலுவலகத்தில் நேற்று மாவட்ட எஸ்.பி. சிலம்பரசன் தலைமையில் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் மாவட்டத்தில் உள்ள அனைத்து வழக்குகளின் புலன் விசாரணை, நிலுவையில் உள்ள வழக்குகள், கஞ்சா மற்றும் புகையிலை போன்ற போதைப்பொருட்கள் கடத்தல் மற்றும் விற்பனையில் ஈடுபடுபவர்கள் மீது கடும் நடவடிக்கை மேற்கொள்வது, பொது அமைதிக்கு பங்கம் விளைவிப்பவர்கள் மற்றும் ரவுடிகள் மீது மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள், நீதிமன்ற அலுவல்கள் மற்றும் பல்வேறு நிகழ்வுகள் ஆகியவை குறித்து ஆய்வு நடைபெற்றது.

மேலும் மாவட்ட எஸ்.பி. அலுவலக மைதானத்தில் வைத்து தூத்துக்குடி மாவட்ட காவல்துறையின் இருசக்கர வாகனங்கள், நான்கு சக்கர வாகனங்கள், கனரக வாகனங்கள் ஆகியவை நல்ல முறையில் பராமரிக்கப்படுகிறதா என மாவட்ட எஸ்.பி. ஆய்வு மேற்கொண்டு வாகன ஓட்டுநர்களுக்கு அறிவுரைகள் வழங்கி, வாகனங்களின் நிறை குறைகளை கேட்டறிந்தார். பின்னர் தூத்துக்குடி மாவட்டத்தில் கொலை குற்றங்களை முன்னெச்சரிக்கை நடவடிக்கையினால் தடுத்தும், கஞ்சா வழக்கில் குற்றவாளிகளை கைது செய்து சொத்துக்களை பறிமுதல் செய்தும், நீதிமன்ற விசாரணைக்கு ஆஜராகாமல் தலைமறைவாக இருந்த குற்றவாளிகளை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியது போன்ற பல்வேறு பணிகளில் சிறப்பாக செயல்பட்ட போலீஸ் டி.எஸ்.பி.க்கள், போலீஸ் இன்ஸ்பெக்டர்கள் உட்பட 151 காவல் துறையினருக்கு மாவட்ட எஸ்.பி. சிலம்பரசன் நற்பணி சான்றிதழ் வழங்கி பாராட்டினார்.

## பரமத்தி வேலூர்: விநாயகர் கோவில்களில் சங்கடஹர சதுர்த்தி சிறப்பு வழிபாடு

**நாமக்கல், பிப்.7:**





நாமக்கல் மாவட்டம், பரமத்தி வேலூர், பேட்டையில் உள்ள பஞ்சமுக ஹேரம்ப விநாயகர், கோப்பணம்பாளையம் பரமேஸ்வரர் ஆலயத்தில் உள்ள விநாயகர் பெருமான், பொத்தனூர், வெங்கமேடு வல்லப கணபதி கோவில்களில் சங்கடஹர சதுர்த்தியை முன்னிட்டு 18 வகையான வாசனை திரவியங்களால் விநாயகப்பெருமானுக்கு அபிஷேகம் செய்யப்பட்டு சிறப்பு தீபாராதனை நடைபெற்றது.

அதேபோல் பரமத்திவேலூர் சக்திநகரில் உள்ள விநாயகர், பரமத்திவேலூர் காவிரி கரையில் அமைந்துள்ள சத்திரத்து விநாயகர், பொத்தனூர் மகா பகவதியம்மன் கோயிலில் உள்ள விநாயகர், பரமத்திவேலூரில் தேரடி வீதியில் உள்ள 500 ஆண்டுகள் பழமையான பாணலிங்க சிவ விஷ்ணு ஆலயத்தில் உள்ள வல்லப விநாயகர்,

பாண்டமங்கலம், கொந்தளம், சேளூர், பிலிக்கல்பாளையம், அய்யம்பாளையம், ஆனங்கூர் ,வடகரையாத்தூர், ஜேடர்பாளையம், சோழசிராமணி, மணியனூர், கந்தம்பாளையம், பரமத்தி, கபிலர்மலை மற்றும் பரமத்திவேலூர் சுற்றுவட்டாரப் பகுதிகளில் உள்ள விநாயகர் கோவில்களில் சங்கடஹர சதுர்த்தியை முன்னிட்டு சிறப்பு அபிஷேக ஆராதனைகளும், சிறப்பு அலங்காரமும், மகா தீபாராதனையும் நடைபெற்றது.

சிறப்பு வழிபாடுகளில் அந்தந்த பகுதிகளை சேர்ந்த பக்தர்கள் கலந்து கொண்டு விநாயகப் பெருமானை தரிசனம் செய்தனர்.

## பிரம்மோற்சவ விழா.. சீனிவாசமங்காபுரத்தில் கோவில் ஆழ்வார் திருமஞ்சனம்

**திருப்பதி, பிப்.7:**



திருப்பதியை அடுத்த சீனிவாசமங்காபுரத்தில் உள்ள கல்யாண வெங்கடேஸ்வரர் கோவிலில் வரும் 8-ந்தேதி முதல் 16-ந்தேதி வரை வருடாந்திர பிரம்மோற்சவ விழா நடக்கிறது. பிரம்மோற்சவ விழா தொடங்குவதற்கு முன்பு கோவில் ஆழ்வார் திருமஞ்சனம் நடத்துவது ஒரு வழக்கமான சடங்காகும். அதன்படி நேற்று கோவில் ஆழ்வார் திருமஞ்சனம் எனப்படும் தூய்மைப் பணி நடந்தது. நிகழ்ச்சியையொட்டி நேற்று அதிகாலை சுப்ரபாதத்தில் சாமி துயிலெழுப்பப்பட்டார். அதன்பிறகு தோமாலை சேவை, கொலு மற்றும் பஞ்சாங்க சிரவணம் நடந்தது.

கோவில் ஆழ்வார் திருமஞ்சனம் காலை 6.30 மணியில் இருந்து 11 மணி வரை நடந்தது. அதன் ஒரு பகுதியாக முதலில் கோவில் வளாகம், சுவர்கள், மேற்கூரைகள், பூஜை பொருட்கள் மற்றும் மற்ற அனைத்துப் பொருட்களும் தண்ணீரால் சுத்தம் செய்யப்பட்டன. அதன்பிறகு நாமப்பொடி, ஸ்ரீசூர்ணம், கஸ்தூரி மஞ்சள், பச்சிலை, கற்பூரம், சந்தனப் பொடி, குங்குமம், கிச்சிலிக்கிழங்கு மற்றும் பிற நறுமணப் பொருட்கள் கொண்டு தயாரிக்கப்பட்ட புனிதநீர் கலவை கோவில் முழுவதும் தெளிக்கப்பட்டது.

ஆழ்வார் திருமஞ்சனம் நிறைவடைந்ததையடுத்து காலை 11 மணியில் இருந்து பக்தர்கள் சாமி தரிசனம் செய்ய கோவிலுக்குள் அனுமதிக்கப்பட்டனர்.

திருப்பதியைச் சேர்ந்த பக்தர் மணி என்பவர் கோவிலுக்கு 2 திரை சீலைகளை காணிக்கையாக வழங்கினார். இவை, வரவிருக்கும் பிரம்மோற்சவத்தின்போது பயன்படுத்தப்படும், என அதிகாரிகள் தெரிவித்தனர்.

கோவில் ஆழ்வார் திருமஞ்சன நிகழ்வில் கோவில் சிறப்பு நிலை துணை அதிகாரி வரலட்சுமி, கண்காணிப்பு அதிகாரி கிரிதர், உதவி அதிகாரி கோபிநாத், கண்காணிப்பாளர் ரமேஷ்பாபு, கோவில் ஆய்வாளர்கள் தனசேகர், முனிகுமார், கோவில் அர்ச்சகர் பாலாஜி ரங்காச்சாரியார் மற்றும் பிற அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

## மேல்மலையனூர் அங்காள பரமேஸ்வரி அம்மன் கோவில் மாசிப் பெருவிழா: 15-ந்தேதி கொடியேற்றம்

**மேல்மலையனூர், பிப்.7:**

விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூரில் அமைந்துள்ள பிரசித்தி பெற்ற அங்காள பரமேஸ்வரி அம்மன் கோவிலில் ஆண்டுதோறும் மகா சிவராத்திரியிலிருந்து 13 நாட்கள் மாசிப் பெருவிழா நடைபெறுவது வழக்கம் அதன்படி இந்த ஆண்டுக்கான மாசிப் பெருவிழா 15-ந் தேதி கொடியேற்றத்துடன் தொடங்குகிறது. ஒவ்வொரு நாளும் நடைபெறும் விழாக்களின் விவரம் வருமாறு:-

15 - ந் தேதி (ஞாயிற்றுக்கிழமை) காலையில் கோபால விநாயகர் பூஜை, இரவு கொடியேற்றம் மற்றும் சக்தி கரக ஊர்வலம் நடைபெறும். 16-ந்தேதி (திங்கட்கிழமை) காலையில் மயானக் கொள்ளை இரவு ஆண் பூத வாகனத்தில் அம்மன் வீதி உலா நடைபெறுகிறது. 17-ந்தேதி (செவ்வாய்கிழமை) காலையில் தங்க நிற மரப் பல்லக்கிலும், இரவு பெண் பூதவாகனத்திலும் அம்மன் வீதி உலா நடைபெறுகிறது.

18-ந் தேதி (புதன்கிழமை) காலை தங்க நிற மரப் பல்லக்கிலும், இரவு சிம்ம வாகனத்திலும் அம்மன் வீதி உலா நடக்கிறது. 19-ந்தேதி (வியாழக்கிழமை) மாலை தீமிதி விழாவும், இரவு அன்ன வாகனத்தில் அம்மன் வீதி உலாவும் நடக்கிறது. 20-ந் தேதி (வெள்ளிக்கிழமை) காலையில் தங்க நிற மரப் பல்லக்கிலும், இரவு வெள்ளை யானை வாகனத்திலும் அம்மன் வீதி உலாவும் நடக்கிறது. 21-ந்தேதி (சனிக்கிழமை) மாலை தேரோட்டம் நடைபெறுகிறது.

22 - ந் தேதி (ஞாயிற்றுக்கிழமை) காலை அம்மன் வெள்ளையானை வாகனத்தில் கோவிலை வலம் வரும் நிகழ்ச்சியும், இரவு குதிரை வாகனத்தில் அம்மன் வீதி உலாவும் நடைபெறுகிறது. 23-ந்தேதி (திங்கட்கிழமை) காலையில் தங்க நிற மரப் பல்லக்கிலும், இரவு சத்தாபரணம் என்னும் புஷ்ப பல்லக்கிலும் அம்மன் வீதி உலா நடக்கிறது. 24-ந் தேதி (செவ்வாய்க்கிழமை) மாலையில் தீர்த்தவாரியும், இரவு தெப்ப உற்சவமும் நடைபெறுகிறது. 25-ந் தேதி (புதன்கிழமை) யிலிருந்து 27-ந் தேதி வரை காலையில் அம்மனுக்கு சிறப்பு அபிஷேக ஆராதனைகள் நடக்கின்றன.

27-ந்தேதி மாலை அம்மனுக்கு மஞ்சள் நீராட்டு, இரவு கும்பப் படையலுடன் விழா முடிவடைகிறது. விழாவை முன்னிட்டு தினமும் இரவு கலைநிகழ்ச்சிகள், இன்னிசை கச்சேரி, கரகாட்டம், மாடு, மயிலாட்டம் ஆகியவை நடைபெறுகின்றன.



வறுமை, நோய், அறியாமை மூன்றும்
முற்றிலும் நீங்கும்
போர் என்னும் பொல்லா அரக்கனை
பூமியில் இல்லாமல்
ஆக்கினால்...!
தொடர்புக்கு: 9791667528

## 237 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவி: அமைச்சர் ஆர். காந்தி வழங்கினார்

**ராணிப்பேட்டை, பிப்.7:**

ராணிப்பேட்டை மாவட்ட ஆட்சியர் ஜெ.யு. சந்திரகலா தலைமையில், வாலாஜா அரசினர் மகளிர் கலைக்கல்லூரியில் நடைபெற்ற மாபெரும் விழாவில் கைத்தறித் துறை அமைச்சர் ஆர். காந்தி கலந்துகொண்டு நலத்திட்ட உதவி களை வழங்கினார். 'உங்களுடன் ஸ்டாலின்' திட்டத்தின் கீழ் நடத்தப்பட்ட 236 முகாம்களில் பெறப்பட்ட மனுக்களுக்குத் தீர்வு காணப்பட்ட தன் தொடர்ச்சியாக, 237 பயனாளிகளுக்கு ரூ.2.97 கோடி மதிப்பிலான உதவிகளும், 5,894 பேருக்குப் புதிய மாதாந்திர உதவித்தொகை ஆணைகளும் வழங்கப்பட்டன. இந்நிகழ் வில் ஆற்காடு சட்டமன்ற உறுப்பினர் ஜெ.எல். ஈஸ்வரப்பன், மாவட்ட வருவாய் அலுவலர் செ. தனலிங்கம், மாவட்ட ஊராட்சிக் குழு தலைவர் ஜெயந்தி திருமூர்த்தி, உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## கார்கள் தீப்பிடித்து எரிந்து விபத்து

**சென்னை, பிப்.7:**

சென்னையிலிருந்து பொத்தேரி நோக்கிச் சென்ற கோபி என்பவரது கார், தைலாவரம் சிக்னல் அருகே சென்ற போது திடீரென தீப்பிடித்து எரிந்தது. காரில் இருந்த கோபியும் அவரது மனைவியும் நல்வாய்ப்பாக உயிர் தப்பினர். தகவலறிந்து வந்த தீயணைப்புத் துறையினர் தீயை அணைத்தனர்.

இதேபோல், மதுராந்தகம் மேட்டுப் பாளையம் அருகே திருச்சியில் இருந்து சென்னை நோக்கிச் சென்ற மற்றொரு காரும் இன்ஜின் பகுதியில் ஏற்பட்ட கரும்புகை காரணமாகத் தீப்பிடித்தது. இதில் பயணம் செய்த 3 பெண்கள் உள்ளிட்ட 5 பேர் உடனடியாகக் கீழே இறங்கியதால் பெரும் உயிர்ச் சேதம் தவிர்க்கப்பட்டது.

## போக்சோ வழக்கில் வாலிபர் தடுப்பு காவல் சட்டத்தில் கைது

**திருநெல்வேலி, பிப்.7:**

திருநெல்வேலி மாவட்டம், லெவிஞ்சிபுரத்தை சேர்ந்த இசக்கியப்பன் மகன் ஹரிகோபாலகிருஷ்ணன் (வயது 27) போக்சோ வழக்கில் தொடர்புடையவர் ஆவார்.

அந்த வாலிபர் மீது தமிழ்நாடு தடுப்பு காவல் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்குமாறு வள்ளியூர் மகளிர் காவல் நிலைய இன்ஸ்பெக்டர் சாந்தி மாவட்ட எஸ்.பி.யிடம் வேண்டுகோள் விடுத்தார்.

அவரது வேண்டுகோளின் பேரில், திருநெல்வேலி மாவட்ட எஸ்.பி. பிரசண்ணகுமார் பரிந்துரையின்படி, மாவட்ட கலெக்டர் சுகுமார் உத்தரவின்பேரில் நேற்று ஹரிகோபாலகிருஷ்ணன், தமிழ்நாடு தடுப்பு காவல் சட்டத்தின் கீழ் பாளையங்கோட்டை மத்திய சிறையில் அடைக்கப்பட்டார்.

## நம் உடலிலேயே இயக்கும் உறுப்புகளின் நேரத்தை நாம் அறிந்து கொண்டால் ஆரோக்கியமான வாழ்க்கை வாழலாம்!

நாம் பரபரப்பாக வேலை பார்க்கும் நேரத்தில் திடீரென்று பசிக்க துவங்கும் நேரத்தை பார்த்தால் வழக்கமாக நாம் சாப்பிடும் நேரமாக இருக்கும். வெளியில் எப்படி நம்மை இயக்க கடிகாரம் இருக்கிறதோ, அதைப்போல நம் உடலுக்குள்ளும் ஒரு கடிகாரம் இருக்கிறது. இதுதான் உயிரியல் கடிகாரம் (BIOLOGICAL CLOCK).



தினசரி நிகழும் இந்த மாற்றங்களுக்கு 'சிற்கார்டியன் ரிதம்' என்று பெயர். இதற்கு காரணமாக இருப்பவை பீரியட் ஜீன், டைம்லெஸ் ஜீன் ஆகிய இரண்டு மரபணுக்கள். ஒவ்வொரு செல்லிலும் இருக்கும் பீரியட் ஜீன் ஒரு வகை புரதத்தை உற்பத்தி செய்யும். புரதத்தின் அளவு குறைய குறைய இரண்டாவது ஜீனான டைம்லெஸ் ஜீன் சிதையும். இந்த சிதைவு தான் காலம் நகர்வதை செல்களுக்கு உணர்த்தும்.

இதன் மூலம் தான் நமக்கு தூக்கம், பசி போன்ற வெளிப்படையான உடலியல் இயக்கங்களும் உடலுக்குள் ஏற்படவேண்டிய இயக்கங்களும் சரிவர நடக்கின்றன. ஒரு நாளில் 24 மணி நேரத்தில் சிற்கார்டியன் ரிதத்தின் அடிப்படையில் புரதத்தின் அளவில் மாற்றம் ஏற்படுவதை ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்து உள்ளனர்.

உயிரியல் கடிகாரத்தின் இயக்கம் பாதிக்கப்படுவது தான் வாழ்க்கை முறை மாற்றங்களால் வரும் நோய்களுக்கு காரணம் என சமீபத்திய ஆய்வு சொல்கிறது. நம் உடலிலேயே இயக்கும் உறுப்புகளின் நேரத்தை நாம் அறிந்து கொண்டால் ஆரோக்கியமான வாழ்க்கை முறையை பின்பற்றலாம். அது எவ்வாறு என்பதை பார்ப்போம்.

காலை 3 மணி முதல் 5 மணி வரை

வான்வெளியில் சுத்தமான காற்று அதிகமாக இருக்கும். இந்த நேரத்தில் மூச்சுப் பயிற்சி, தியானம் செய்தால் நுரையீரல் பலம் பெறும். இந்த நேரத்தில் கிடைக்கும் ஆற்றல் உணவின் மூலம் கிடைப்பதை விட சிறந்தது.

காலை ஐந்து மணி முதல் ஏழு மணி வரை

இந்தநேரத்தில்மலம்கழிக்க உடலை பழக்கப்படுத்தினால் பெருங்குடல் சுத்தமாகி எந்த நோயும் வராது.

காலை 7:00 மணி முதல் 9 மணி வரை

காலை உணவை 9 மணிக்குள் சாப்பிட்டு முடிக்க வேண்டும். நேரம் கடந்து சாப்பிடும் போது மற்ற உறுப்புகளின் இயக்கமும் சேர்ந்து சுழற்சி தடைப்படும்.

காலை 9 மணி முதல் 11 மணி வரை

காலையில் உண்ட உணவை மண்ணீரல் செரித்து ஊட்டச்சத்து ஆக மாற்றும் நேரம். இந்த நேரத்தில் அதிகமான உடல் உழைப்பு திரவ உணவுகள் உட்கொள்வதை தவிர்க்க வேண்டும்.

காலை 11:00 மணி முதல் ஒரு மணி வரை

இது இதயத்தின் நேரம் இந்த நேரத்தில் படபடப்பு கோவப்படுதல் கூடாது. கடினமான வேலை எதுவும் செய்யாமல் தண்ணீர் மட்டும் குடிக்கலாம்.

மதியம் ஒரு மணி முதல் 3 மணி வரை

சிறு குடல் நேரத்தில் மதிய உணவு சாப்பிட்டு சிறிது நேரம் ஓய்வெடுத்துக் கொள்ளலாம்.



மாலை 3 மணி முதல் 5 மணி வரை

அன்றைய நாளின் கழிவை உடலில் இருந்து பிரித்து எடுத்து சிறுநீர்பையில் தேக்கி வைக்கும் பணி நடைபெறும்.

மாலை 5 மணி முதல் 7:00 மணி வரை

இந்த நேரத்தில் இளம் சூடான உணவுகள் திரவு உணவுகள் சாப்பிடலாம். உடற்பயிற்சி செய்வது சிறுநீரகங்களுக்கு நல்லது.

இரவு 7 மணி முதல் 9 மணி வரை

இந்த நேரத்தில் மிதமான எளிதில் செரிக்கக் கூடிய உணவுகளை எடுத்துக் கொள்ளலாம். நாள் முழுவதும் நம் உடல் உழைப்புக்கு ஏற்றவாறு செயல்பட்ட இதயம், இதயம் சார்ந்த பகுதிகள் ஓய்வெடுக்கும் நேரம். மன அழுத்தம், பதற்றம், எரிச்சல் போன்ற எதிர்மறை உணர்வுகள் கூடாது.

இரவு 9 மணி முதல் 11 மணி வரை

உடலின் வெப்பத்தை சமன் செய்யும் நேரம் எண்ண ஓட்டங்கள் இன்றி அமைதியாக உறங்க வேண்டும்.

இரவு 11:00 மணி முதல் அதிகாலை ஒரு மணி வரை

இந்த நேரத்தில் இரவு உணவு சாப்பிடவே கூடாது. தூங்காமல் விழித்திருந்தால் பித்தப்பை செயல்பாடு தடைப்பட்டு கற்கள் உருவாக வாய்ப்பு உள்ளது.

அதிகாலை ஒரு மணி முதல் 3 மணி வரை

இந்த நேரத்தில் ஆழ்ந்த தூக்கம் இருந்தால் உடலில் எந்த பிரச்னையாக இருந்தாலும் அதன் வீரியம் குறைந்து குணமாகிவிடும்.

இதுதான் நம் வாழ்க்கையின் உயிரியல் கடிகாரம் எனப்படுகிறது.

# மனித கடவுள்

வந்துருவார் தானே கேட்டான் வினோத். வந்துருவார் என கூறினாள் ரஞ்ஜினி. உன்ன நம்பித்தான் இந்த காரியத்துல இறங்கிருக்கேன். என்னை காட்டிக் கொடுத்திரக் கூடாது என்றான் வினோத். உங்கள இடைஞ்சல் பண்ண மாட்டேன் என்றாள். வாராறனு பார்ப்போம். இருவருக்கும் அருகில் வந்து பைக் நின்றது. கெல்மெட்டை கழற்றி விட்டு வினோத்திற்கு கைக் கொடுத்தான் சுபாஷ். எப்படி நன்றி சொல்லனும் என்றே தெரியல. இவ்வளவு பெரிய உதவிய பண்ணுவிங்க என்று எதிர்பாக்கல. ரொம்ப நன்றி என கையெடுத்து கும்பிட்டான் சுபாஷ். ரஞ்ஜினிக்கு தான் நன்றி சொல்லனும். அவளோட பிடிவாதம் தான் என்னை மாற்றியது. எனக்கும், அவளுக்கும் நிச்சயம் ஆன மறுநாளே எல்லா விசயத்தையும் சொல்லிட்டா? 5 வருட காதல். வாழ்ந்த உங்களோடத் தான் என கூறினாள். பெண் பாவத்தில் விழக் கூடாது என சேர்த்துக் வைக்க முடிவு பண்ணினேன். இனிமே உங்களோட மனைவி என வினோத் கூறினான். இருவரும் பைக்கில் புறப்பட வினோத்தைப் பார்த்து கை அசைத்தனர். வினோத்திற்கு போன் வந்தது. உங்கள பார்க்க வந்துட்டாளா கேட்டார் ரஞ்ஜினி அம்மா. இன்னும் வரல என கூறினான். காதலனுடன் சேர்த்து வைத்ததை சொல்லவா முடியும். இல்லை என்று தானே சொல்ல முடியும். இதையே பாலோ பண்ணுவோம் என நினைத்தான் வினோத்



-எஸ்.மாடசாமி

# கருக்கா நெல்

விளைந்து தலைசாய்த்து வரப்பில் தொட்ட நெற்பயிரை பார்த்து மகிழ்ந்தார் ராமசாமி. அறுவடைக்கு ஆட்களை அமர்த்துவதற்காகக் குள்ளம்மா வீட்டை நோக்கி நடந்தார். அடுப்பில் நெல்லை அவித்துக்கொண்டிருந்தவள் “ஐயா சொல்லுங்க, நானே வந்திருப்பேன். நீங்க ஏன் வந்தீங்க? நேத்து கழனிப்பக்கம் போயிட்டுவந்தன். வெள்ளிக்கிழமை அறுவடை செய்திடலாம்.” என்று சொல்லி முடித்தாள்.

”ஒரு காணிதான். ஆளுங்களுக்கு சொல்லிடு. பொம்பள ஆளுங்க அதிகமா இருக்கட்டும். உன் வீட்டுக்காரர்கூட ஒரு ஆண் ஆள் போதும்” என்று அறப்புக்கு ஆட்களை அமர்த்திவிட்டு திரும்பும்போது, எதிரில் தென்பட்ட குள்ளம்மாவின் கணவரிடம்,

”நீயும் வாப்பா “என்றார். இருசம்மா எதிரில் வந்து நின்றாள். இருசம்மாவும் குள்ளம்மாவும் அக்கா தங்கச்சிங்க, ஒரே குடும்பத்துல அண்ணன் தம்பிங்கள கட்டிகிட்டாங்க. ”இருசம்மா நீயும் வந்துடு. நீங்க ரெண்டுபேரும் இருந்து செய்திடுங்க” என்று சொன்னதும், குள்ளம்மாவின் முகம் சுருங்கியது.

இருசம்மாவின் கணவர் அம்மாவாசையோடு ராமசாமி. உழவுமாடு பிடிக்கச் சந்தைக்குச் செல்லும்போது ஏற்பட்ட மனக்கசப்பில், குள்ளம்மாவிடம் அறுவடைக் ஆள் ஏற்படுச் செய்யச் சொன்னதும், இருசம்மாவின் தவிப்பு அதிகமானது, கருக்கா நெல்மணிகள் கண்முன் தோன்றி மறைந்தது.

“ஏம்பா, களத்த சுத்தம் பண்ணிடு. எந்த வழியா நெல்லுக் கட்டு களத்துக்குப் போகணும்னுகுள்ளம்மாகிட்ட சொல்லிடு” எனக் கூறிவிட்டு “அம்மாவாசை எங்கப்பா? போன மாசம் மாட்ட ஒட்டிக் கொடுத்தன். இன்னும் சொச்ச பணத்த தரல. நானும் பொறுமையா இருக்கன். பழகிட்டோம். சரி, நீயாவது எடுத்துச் சொல்லு” என்று வீடு வந்து சேர்ந்தார்.



வெள்ளிக்கிழமை காலை, கழனியில் பெண்கள் நெல் அறுத்துக்கொண்டிருந்தனர். வரப்பில் நின்று ”அடியிலப் போடுங்கம்மா” எனச் சொன்னபடி நின்றிருந்தார். சூரியன் மெல்ல மேலெழுந்து வந்தது. வேலை செய்யும் ஆட்களுக்குக் கேழ்வரகு கூழ் பாத்திரத்தைத் தலையில் சுமந்து நடந்துவந்தாள் ராமசாமியின் மனைவி சரசு. ”இருசம்மா, கொஞ்சம் வா, இத எறக்கு” எனக் கூப்பிட்டதும் இறுக்கமான முகத்தோடு தலையிலிருந்த சுமையை இறக்கிவைத்தவள்” பல்லத்த மேடாக்கனது என் புருஷன், பலன அனுபவிக்கிறது இன்னொருத்தி” எனப் புலம்பினாள் இருசம்மாள்.

அறுவடை நேரத்தில் சிதைந்த நெற்கதிர்களைக் கொத்தித் தின்னும் சிட்டுக்குருவிகள், வலைக்குள்ளிருந்து சட்டென்று ஓடும் எலிகள் எனப் பரபரப்பாக இருந்தது கழனி.

சூரியன் நடுவானில் வருவதற்குள் அறுவடை முடிந்து. களத்து மேட்டில் நெல் கட்டுகள் சீராக அடுக்கப்பட்டது.

அன்று இரவு களத்து மேட்டுக் காவலுக்கு குள்ளமாவின் கணவர் படுத்துக் கொள்வதாகக் குள்ளமாவே சொல்ல, ”ஒப்புடிக்கு ஆளுங்க சொல்லுமா, ஆண் ஆளுங்க அதிகமா இருக்கட்டும். வராம விட்டுடப் போறாங்கமா, மறக்காம சொல்லிடு” என மறுநாள் ஒப்பிடி செய்வதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் செய்து முடித்துவிட்டு, ”குள்ளமா, உங்க ரெண்டு மாடு போதும். வேற மாடு இருந்தா, ரெண்டுச் சொல்லு” என ஞாபகப்படுத்திவிட்டு வீடுவந்து சேர்ந்தார்.

மறுநாள் அதிகாலை, தன் மனைவியிடம் ஆட்களுக்குச் சாப்பாடு சொல்லிவிட்டு களத்துமேட்டுக்குப் புறப்பட்டார்.

அதிகாலையில் கலத்துமேடு பரபரப்பானது. மாடுகள் பொனையைச் சுற்றின. நெல் கட்டுகள் பிரிக்கப்பட்டு, நெற்கதிர்களை அடித்து, வைக்கோல்கள் கோபுரமாக வீசப்பட்டன. குவிக்கப்பட்ட வைகோல் மாற்று இடத்தில் உலர்த்தப்பட்டது.

குள்ளம்மா, வேலை செய்யும் ஆட்களை அதட்டி வேலை வாங்கினாள்.

”புது தொடப்பம். ஆரம்பத்துல அழகாதன் பெருக்கும்” என மற்றவர்கள் கிண்டலடித்தனர்.

மெல்ல சூரியன் மேற்கில் நகர்ந்தது.

காற்றின் வேகம் சீரானது. காற்று வீசும் திசைக்கு ஏற்பப் பதருகள்தூற்றப்பட்டு, நெல்மணிகளை கோணி சாக்குப் பையில் கட்டினர்.

இதுவரை இயல்பான மனநிலையிலிருந்த குள்ளமா, கோபுரமான நெல்மணிகளிலிருந்து, கருக்கா நெல்லைக் கழிக்க தொடப்பத்தை எடுத்தாள்.

“எறக்கித் தள்ளுமா” என்று ராமசாமி சொன்னதை, குள்ளமா காதில் வாங்காமல் தொடப்பத்தைச் சற்று சீராக ஏற்றித் தள்ளி முடித்தாள். சுத்தம் செய்த நெல்மணிகள் சாக்கு மூட்டையில் கட்டப்பட்டது.

வேலையெல்லாம் முடித்த குள்ளம்மா, ஓரமாகக் குவித்துவைத்த கருக்கா நெல்லை காற்றில் தூற்றி, இரண்டு மூட்டையில் கட்டி முடித்தாள்.

கருக்கா நெல் மூட்டையைப் பார்த்த இருசம்மாவின் முகம் சோகமானது.

”இந்த வருடம் குள்ளமாவுக்கு கொண்டாட்டம்தான்” என்று வருத்தம் இல்லாமல் சொல்லிச் சிரித்தார் ராமசாமி. சிரித்த முகத்தோடு கருக்கா நெல் முட்டையை வண்டியில் ஏற்றினாள் குள்ளமா.

ரெண்டு மூட்டைக் கருக்கா நெல்லைப் பார்த்து ராமசாமியின் மணைவி “இருசம்மா இருசம்மாதான் “என்றதும், தனது அருமையை உணர்ந்த சரசுவைப் பார்த்து“ வரம்மா...” என மன இருக்கத்தோடு புறப்பட்டாள் இருசம்மா.



- கயப்பக்கம் இரா.இரமேஷ்

# ஔவைக் குறளும் 4,5



▪Banumathi Nachiyar

தர்மம் பொருள் காமம் வீடெனு
நான்கு முருவத்தா லாய பயன்

விளக்கம்

தருமம், பொருள், காமம், வீடு என்னும் நான்கும் உருவத்தால் உண்டான பயன் ஆகும்.

இக்குறளில் புருஷார்த்தங்களைப் பற்றிக் கூறுகிறார். புருஷார்த்தம் என்பது வடமொழிச் சொல்.

புருஷஅர்த்தம் மனித நோக்கம். இந்து தத்துவத்தின் படி, மனித வாழ்க்கையின் நான்கு முக்கிய நோக்கமாகிய தர்மம், பொருள், காமம், வீடு பேற்றினை அர்த்தமுள்ளதாகவும் முழுமையாகவும் வாழ வழிகாட்டும் அடிப்படை இலக்குகளே இந் நான்கு புருஷார்த்தங்களும். அதன் சிறப்பினைக் கூறுவது போல் அமைந்துள்ளது இக்குறள்.

தர்மம் என்பது 32. வகை தர்மங்கள் அன்றியும் பிரம்மச்சாரி, வானரப்ரஸ்தன், சன்னியாசி இவர்கள் மூவருக்கும் இல்லறத்தில் இருப்போர் செய்ய வேண்டிய தர்மமும் சேர்த்து என்றும் பொருள் உண்டு.

இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும் நல்லாற்றி னின்ற துணை என்பது வள்ளுவம்.

பொருள் என்பது நல்வழியில் சேர்க்கும் பொருளால் அன்றோ தர்மம் செய்ய இயலும்.பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லை காமம் என்பது ஆசை காமம்.. தர்மம் செய்வதற்கு இல்லற வாழ்க்கை அமைவதற்கு அடிப்படை அல்லவா?

எனவே இம்மூன்று தர்மங்களையும் செவ்வனே செய்து வீடு பேற்றினை அடைவது மனித உயிர்களின் நோக்கமாக இருக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறது இக்குறள்.

ஔவையின் தனிப்பாடல் ஒன்று..

ஈதலறம் தீவினை விட்டு ஈட்டல்பொருள்
எஞ்ஞான்றும் காதலிருவர்
கருத்தொருமித்
தாதரவு பட்டதே இன்பம்
பரனைநினைந் திம்மூன்றும்
விட்டதே பேரின்ப வீடு.

நிலமைந்து நீர்நான்கு நீடங்கி மூன்றே
யுலவையிரண் டொன்று விண்

விளக்கம்

பஞ்சபூதங்கள் மாயையின் வெளிப்பாடு.

படைப்பின் துவக்கத்தில் ஐம்பூதங்களும் ஒன்று இரண்டு மூன்று நான்கு ஐந்து குணங்களால் பிரபஞ்சம் தோன்றியது என்கிறது சாங்கிய சாஸ்திரம்.

இதிலும் ஔவையார் அததன் குணங்களையே வலியுறுத்துகிறார்.

நிலம்... ஐந்து
நீர்... நான்கு
தீ நீடங்கி..மூன்று
காற்று உலவை.. இரண்டு
விண்.. ஒன்று
என்கிறார்.

திருவிளையாடல் புராணத்தில் சிவபெருமான் ஐந்து பூதங்களைப் பற்றி சொல்லியது இங்கு நினைவு கூறுகிறேன்.

முதலில் விண்வெளி என்னும் ஆகாயம் ஒலி என்னும் ஒரே குணத்துடன் தோன்றியது. இது தன்னில் அனைத்து ஜட பொருள்களுக்கும் இடமளிக்கும் தன்மை உடையது. ஆகாயம் உலக படைப்புகளுக்குக் காரணமாக இருப்பதால் இது தங்க முட்டை என்கிறது வேதம்.

இதிலிருந்து தோன்றியது தான் மற்ற நான்கு பூதங்கள்.

அடுத்து காற்று ஆகாயத்தின் சொந்தகுணமான ஒலியுடன், தொடு உணர்வு கொண்டது. இதன் இயல்பு பொருளை உலர்த்தும் சக்தி. ஜீவனைக் காக்கும் பிராணவாயு இருப்பதால் பிரம்ம தத்துவமாகக் கருதப்படுகிறது.

இதன் நிறம் நீலம் என்கிறது சாஸ்திரம்.

ஆகாயம் காற்று இவற்றின் குணத்துடன் அதாவது, ஒலி, தொடு உணர்வு ஆகியவற்றுடன் தன் குணமாகிய உருவம் என்னும் குணத்துடன் மூன்று குணங்கள் சேர்ந்தது. இதன் நிறம் சிவப்பு. ஆகாயம் காற்று தீ ஆகியவற்றுடன் நீர் தன் குணம் ஆகிய சுவையை உடையது. ஒலி தொடு உணர்வு உருவம் இவற்றுடன் தன் குணமாகிய சுவையையும் உடையது. இதன் தன்மை பொருட்களைத் தூய்மை செய்வது.



நிலம் ஆகாயம், காற்று, தீ, நீர் குணங்களுடன் வாசனை என்னும் தன் குணத்தையும் பெறுகிறது. ஒலி, தொடு உணர்வு, உருவம், சுவை, நாற்றம் என ஐந்து குணங்களுடன் அமைகிறது. இது தன்னில் உயிர்களைத் தழைக்கச் செய்ய உதவுகிறது.

குறளில் ஔவையார் நிலம் ஐந்து என்றும் நீர் நான்கு என்றும் நீடங்கி என்பது தீ என்று கொண்டால் மூன்று என்றும் உலவை என்பது காற்று என்று கொண்டால் இரண்டு என்றும் விண் ஒன்று என்றும் கூறுகிறாள்.

தன் ஏழு சொற்களில் ஐம்பூதங்களையும் அடக்கி குறளைத் தந்துள்ளார் ஔவையார்.

அருமை................

"இந்தக் குறள் உடலைப் பற்றிய அறிவின் மூலம் உலகியல் பற்றுகளை நீக்கி, ஆன்மாவின் உண்மையான நிலையைக் கண்டறியும் ஞான மார்க்கத்திற்கு அடித்தளமிடுகிறது"..."இவை அனைத்தும் சேர்ந்து உருவான இந்த உடலானது, இறைவனை உணர்ந்து, பற்றுகளை நீக்கி, நிலையான பேரின்பத்தை அடைவதற்கான கோயில் போன்றது; வெறும் உடலைப் போற்றுவதை விட, ஆன்மாவை உணர்ந்து இறைவனை அடைவதே வாழ்க்கையின் குறிக்கோள் என ஔவையார் வலியுறுத்துகிறார். " சிறப்பாக எடுத்துச் சொன்னமை மனதில் நிற்கின்றது.

வாழ்த்துகள்.

(தொடரும்).

# அக்ஷதை (அட்சதை) மகிமை



நாம் பூஜைகளின் போது பயன்படுத்துகின்ற மங்கல "அக்ஷதை"யைப் (அட்சதை) பற்றியும் அதன் மகத்துவங்களைப் பற்றியும் அறிந்து கொள்வோம் வாருங்கள்.

"அப்படி என்ன விசேஷம் இருக்கிறது இந்த அக்ஷதைக்கு" ?

இறை பூஜைகளிலும், திருமணங்களிலும், சுப நிகழ்வுகளிலும், இதற்கென ஏன் ஒரு தனியிடமே அளிக்கப்பட்டிருக்கிறது? இதன் "தாத்பர்யம்" (அர்த்தம்) என்ன? என்பதையெல்லாம் சற்று புரிந்து கொள்ள முற்படுவோமா?

"க்ஷதம்" என்ற வார்த்தைக்கு "குத்துவது" அல்லது "இடிப்பது" என்று பொருள். "அக்ஷதம்" என்றால் இடிக்கப்படாதது என்று பொருள். உலக்கையால் இடிக்கப்படாத, முனை முறியாத அரிசி "அக்ஷதை" எனப்படுகிறது. முனை முறிந்த அரிசியைக் கொண்டு "அக்ஷதை" தயாரிப்பது உசிதமல்ல என்பது பெரியோர்களின் வழக்காகும். இப்படி முனை முறியாத அரிசியோடு மஞ்சளை இணைப்பது ஏன்? பூமிக்கு மேல் விளையும் பொருள் அரிசி. பூமிக்குக் கீழ் விளையும் பொருள் மஞ்சள். இவை இரண்டையும் இணைக்கப் பயன்படுவது தூய பசுநெய் என்கிற ஊடகம். எதற்கு இப்படிச் செய்கிறார்கள்? சந்திரனின் அம்சம் கொண்ட அரிசி, குருவின் அம்சம் கொண்ட மஞ்சள், மஹாலக்ஷ்மியின் அருள்கொண்ட நெய் இவை யாவும் ஒன்று சேரும்போது, அங்கே நல்ல அதிர்வு உண்டாகி, அந்த இடமே சுபிட்சமாகும் என்பது நம்பிக்கை.

வெள்ளை அரிசியோடு மஞ்சள் நிறம் சேர்ந்து நெய்யின் மினுமினுப்போடு விளங்கும் இந்த அக்ஷதை, பெரியோர்களின் ஆசிகளைச் சுமந்து வரும் வாகனமாகவே உணரப்படுகிறது. அதன்றியும், அரிசியை உடலாகவும், மஞ்சளை ஆன்மாவாகவும், நெய்யை தெய்வ சக்தியாகவும் ஆன்றோர்கள் குறிப்பிடுகிறார்கள். இப்படி, "உடல், ஆன்மா, தெய்வசக்தியோடு இணைந்து வாழ்த்துகிறோம்" என்ற பொருளிலேயே அக்ஷதை தூவப்படுகிறது என்று சொல்வோரும் உண்டு.

திருமணங்களில், மணமக்களை வாழ்த்துவதற்கு, மலர்களை விட, அக்ஷதைக்கே முக்கியத்துவம் ஏன் வழங்கப்படுகிறது?

சற்றே யோசித்தால், பூமிக்கு மேலேயும், பூமிக்கு கீழேயும் விளைகின்ற அரிசியையும் மஞ்சளையும் போன்றே மணமக்கள் இரு மாண்பினர். வெவ்வேறு குணநலன்கள் கொண்டவர்கள்.. ஒருமித்து வாழ விழைபவர்கள். அரிசியும் மஞ்சளுமான மணமக்களை இணைக்கும் பசுநெய்யாகப் பாசமிகு உற்றார் உறவினர்கள் உள்ளனர். இதுவே தத்துவம். ஆகவே, உற்றார் உறவினர்கள், பெரியோர்கள், நண்பர்கள் என அனைவரும் மணமக்களை வாழ்த்தும்போது, மணமேடைக்கு அருகே வந்து, ஒருவர் பின் ஒருவராக, மணமக்கள் சிரசில் அக்ஷதை தூவி வாழ்த்துவதே சாஸ்திர ரீதியாகச் சிறந்தது என்பர் பெரியோர். இதை வீசி எறிவது தவறான விஷயம். திருமணக் கூடங்களில் எங்கோ இருந்து கொண்டு, வீசி எறிவதைப் பார்க்கிறோம். அது ஆகாத செயலாகும். அக்ஷதையைப் போல முழுமையாக எல்லா நிகழ்வுகளும், திருமணம் கண்டவர்களின் வாழ்விலும் நடைபெற வேண்டும் என்பதே அக்ஷதையின் குறியீடு. இப்படிப்பட்ட அக்ஷதையை இறைவன் திருவடிகளில் வைத்து வணங்கிய பின்னர், மணமக்களை ஆசீர்வதித்து அவர்கள் சிரசில் தூவுவதே, அவர்களுக்கு நன்மையான பலன்களைக் கொடுக்கும். அதே போன்று புதிதாகத் தொழில் துவங்கும் போதும், சந்திரன் சக்தி அதிகம் அமைந்த அரிசியும், குருபகவானின் சக்தி அதிகம் அமைந்த மஞ்சளும், மஹாலக்ஷ்மியின் பரிபூரண சக்தி கொண்ட நெய்யினால் சேர்த்து, பெரியோர்களால் அக்ஷதையாகத் தூவப்பட்டு ஆசி வழங்கப்படும் பொழுது, அந்தப் புதிதாகத் தொடங்கப்பட்ட தொழில் வாழையடி வாழையாக அவர்களுக்கு அதிர்ஷ்டத்துடன் கூடிய நன்மைகளை விளைவிக்கும் என்பது சாஸ்திர ரீதியான உண்மையாகும்.



ப.கோபிபச்சமுத்து
புதுப்பேட்டை,
கிருஷ்ணகிரி - 1

## தினம் ஒரு தலைவர்கள்

# மூவலூர் ராமாமிர்தம் வரலாறு



மூவலூர் ராமாமிர்தம் (1883 1962) தமிழகத்தைச் சேர்ந்த ஓர் பெண் சமூக சீர்திருத்தவாதி, எழுத்தாளர், முன்னாள் தேவதாசி ஒழிப்பு இயக்கம் மற்றும் திராவிட இயக்கத்தைச் சேர்ந்த அரசியல் செயற்பாட்டாளர்.

இவர் திருவாரூர் மாவட்டம் கீரனூர் என்ற இடத்திற்கு அருகில் உள்ள "பாலூர்" என்ற கிராமத்தில் பிறந்தார். இவர் வளர்ந்தது மூவலூர் கிராமம் இதனால் இவர் மூவலூர் இராமாமிர்தம் என்று அழைக்கப்படுகிறார்.

இவர் சென்னை மாகாணத்தில் தேவதாசி முறையை ஒழிக்கப் பாடுபட்டவர். 1936 இல் வெளியான இவரது சுயசரிதப் புதினமான தாசிகளின் மோசவலை அல்லது மதி பெற்ற மைனர், தாசிகளின் அவலநிலையை வெளிச்சத்துக்குக் கொண்டுவந்தது. முதலில் இந்திய தேசிய காங்கிரசின் ஆதரவாளராக இருந்த இவர் 1925 இல் பெரியார் (ஈ. வெ. ராமசாமி) காங்கிரசிலிருந்து விலகியபோது பெரியாரின் சுயமரியாதை இயக்கத்தில் சேர்ந்தார். 1930 இல் சென்னை மாகாணத்தில் தேவதாசிமுறை ஒழிப்பை சட்டமாகக் கொண்டுவர டாக்டர். முத்துலட்சுமி ரெட்டி முயன்றபோது அவருக்குத் துணை நின்றார். ஆனால் அச்சமயம் அந்த முயற்சி வெற்றிபெறவில்லை. 1937 முதல் 1940 வரை நடந்த இந்தி எதிர்ப்புப் போராட்டங்களில் கலந்து கொண்டார். நவம்பர் 1938 இல் அதற்காக ஆறு வாரங்கள் சிறையிலடைக்கப்பட்டார். அவரது புதினம் மக்களிடையே ஏற்படுத்திய விழிப்புணர்வும் தேவதாசி முறையை ஒழிக்க அவர் மேற்கொண்ட தொடர் பிரச்சாரங்களும் சென்னை தேவதாசி முறை ஒழிப்புச் சட்டம் நிறைவேற வழிவகுத்தன. அச்சட்டம் 1947லிருந்து தேவதாசி முறையை ஒழித்தது. 1949 இல் பெரியார் மணியம்மை திருமணம் காரணமாக ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக அண்ணாத்துரை திராவிடர் கழகத்தை விட்டு விலகும் போது அவருடன் இராமாமிர்தம் அம்மையாரும் திராவிடர் கழகத்தை விட்டுவிலகினார். அதன்பிறகு சி. என். அண்ணாத்துரை ஆரம்பித்த திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆதரவாளரானார். 27.06.1962 இல் அவர் காலமாகும்வரை தி.மு. க ஆதரவாளராகவே இருந்தார். 1989-ஆம் ஆண்டு கலைஞர் திரு. மு.கருணாநிதி தலைமையிலான தமிழக அரசு 8-ஆம் வகுப்பு வரை படித்த இளம் பெண்களின் திருமண நிதி தொகை ரூபாய் 5000-த்தை 15000 பெண்களுக்கு வழங்க முடிவு செய்தது அதற்கு அம்மையாரின் நினைவாக மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித்திட்டம் என்று பெயரிடப் பட்டது

# மறக்க முடியாத முதல் காதல்.. ‘96’ பாணியில் ஒரு படம் ‘With love’ விமர்சனம்



குடும்ப சூழ்நிலை காரணமாக திருச்சியில் இருந்து சென்னைக்கு வந்த நாயகன் அபிஷன் ஜீவிந்த் மேட்ரிமோனி மூலம் ஒரு பெண்ணை ரெஸ்டாரண்டில் பார்க்க செல்கிறார். அங்கு சென்று பார்க்கும் போது தேடி வந்த பெண் தனது பள்ளி தோழி அனஸ்வரா ராஜன் என தெரிய வருகிறது. தொடர்ந்து திருமணம் குறித்து அபிஷனும், அனஸ்வரா ராஜனும் பேசிக் கொண்டிருக்கும் போது அனஸ்வரா ராஜன் திருமணத்துக்கு அபிஷனிடம் ஒரு நிபந்தனை விதிக்கிறார்.

திருச்சியில் இருவரும் ஒரே பள்ளியில் படித்த போது அபிஷனுக்கு- காவ்யா அனிலுடனும், அனஸ்வராவுக்கு வேறு ஒரு மாணவருடனும் ஒருதலைக் காதலாக மலர்ந்து காதல் கைகூடாமலேயே பள்ளி வாழ்க்கை முடிந்து விடுகிறது. தங்களது பழைய காதலனையும், காதலியையும் தேடி சென்று சந்திப்போம். அப்புறம் நம் திருமணத்தை பற்றி பேசலாம் என்று சொல்லி, இருவரும் முதல் காதலை தேடி செல்கிறார்கள்.

இறுதியில் அபிஷன், அனஸ்வரா ராஜன் இருவரும் முதல் காதலர்களை சந்தித்தார்களா? இருவருக்கும் திருமணம் நடைபெற்றதா? என்பதே படத்தின் மீதிக்கதை.

படத்தில் நாயகனாக நடித்து இருக்கும் அபிஷன் ஜீவிந்த் சிறப்பான நடிப்பை வெளிப்படுத்தி இருக்கிறார். ஒரு இளம் இளைஞனின் குழப்பம், கோபம், பொறாமை, தவிப்பு ஆகியவற்றை மிக எளிமையாக வெளிப்படுத்துகிறார். முன்னாள் காதலி காவ்யா குழந்தையுடன் அபிஷனை சந்திக்கும் போது அபிஷன் அவரிடம் காதலை சொல்லும் போது ரசிக்க வைக்கிறது.

நாயகியாக நடித்து இருக்கும் அனஸ்வரா ராஜன் அழகான முகபாவனைகளை வெளிப்படுத்தி இருக்கிறார். சின்ன சின்ன குறும்பு, சேட்டைகள், கோபம் என கண்களாலேயே அதிகம் பேசி ரசிக்க வைத்து இருக்கிறார்.

பள்ளி வாழ்க்கையில் நடந்த முதல் காதலை மையமாக வைத்து படத்தை இயக்கியிருக்கிறார் இயக்குனர் மதன். உணர்வோடு மட்டுமின்றி கலகலப்போடும், ரசனையோடும் சொல்லி இருக்கிறார். பள்ளிப்பருவ காதலை இளம் தலைமுறையினரை மட்டுமின்றி அனைவரையும் பள்ளி பருவத்திற்கு அழைத்து செல்லும் விதமாக படத்தை கொடுத்து இருக்கிறார்.

சான்ரோல்டன் இசையில் பாடல்கள் கேட்கும் ரகம். 'அவள் வருவாளா' பாடல் மீண்டும் திரையில் ஒலித்தது இனிமை. ஷ்ரேயாஸ் கிருஷ்ணா ஒளிப்பதிவு ரசிக்க வைக்கிறது.

மாலைமலர் ரேட்டிங்: 3.5 / 5



கயாடு லோஹர் தற்போது தமிழ் சினிமாவில் இளசுகளை அதிகம் கவர்ந்த ஹீரோயின்களில் ஒருவர். டிராகன் படத்தின் மூலம் பிரபலம் ஆன அவருக்கு தற்போது தெலுங்கு, மலையாளம் போன்ற மற்ற சினிமா துறைகளிலும் வாய்ப்புகள் குவிந்திருந்தது.

படுபிஸியாக அவர் படங்களில் நடித்து வரும் நிலையில் தற்போது கயாடு லோஹர் ப்ரோமோஷன் நிகழ்ச்சி ஒன்றிற்கு சேலையில் அழகாக வந்திருந்தார்.

அந்த சேலையில் அவர் அழகாக போஸ் கொடுத்திருக்கும் புகைப்படங்கள் தற்போது ரசிகர்களை கவர்ந்து வருகிறது.

# “லட்சுமி-லாரன்ஸ் காதல்” படத்திற்கு தடை- சென்சார் போர்டு விளக்கம்



சமூக நல்லிணக்கத்தை குலைக்கும் வகையில் எடுக்கப்படும் திரைப்படங்களுக்கு தணிக்கை சான்று வழங்க முடியாது என்று சென்சார் போர்டு தெரிவித்துள்ளது.

லட்சுமி- லாரன்ஸ் காதல் படத்திற்கு தணிக்கை சான்று மறுக்கப்பட்டதை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கில் சென்சார் போர்டு விளக்கம் அளித்துள்ளது.

லட்சுமி-லாரன்ஸ் காதல் திரைப்படத்தில் குறிப்பிட்ட பிரிவினரை இழிவுபடுத்தும் வகையில் காட்சிகள் சித்தரிக்கப்பட்டுள்ளதாக வாரியம் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சமூக அமைதியின்மையை தூண்டக்கூடிய படைப்புகளை கருத்து சுதந்திரம் என அனுமதிக்க முடியாது என நீதிமன்றத்தில் விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

மத்திய தணிக்கை வாரியம் தரப்பு வாதத்தை கேட்ட சென்னை உயர்நீதிமன்றம் விசாரணையை 11ம் தேதிக்கு ஒத்திவைத்தது.

# ‘ரெட் லேபிள்’ திரைவிமர்சனம்




கல்லூரி பின்னணியில் அமைந்த கிரைம் சஸ்பென்ஸ் திரில்லர் கதையை, பல திருப்பங்களுடன் சுவாரஸ்யமாக எழுதியுள்ளார்.

கல்லூரி காலத்தில் அடிதடி, போலீஸ் வழக்குகள் என பிரச்சனைகளில் சிக்கியிருந்த நாயகன் லெனின், கல்லூரி முடிந்த பிறகு அந்த வாழ்க்கையை முழுமையாக விட்டு விட்டு, தொழில் மற்றும் அமைதியான வாழ்க்கை வாழ்ந்து வருகிறார். இந்நிலையில், தனது பழைய கல்லூரியில் நடைபெறும் மாணவர் தலைவர் தேர்தல் காரணமாக மீண்டும் கல்லூரிக்குள் செல்ல வேண்டிய சூழ்நிலைக்கு தள்ளப்படுகிறார்.

அடிதடியை தவிர்த்து அமைதியான முறையில் செயல்பட வேண்டும் என்ற முடிவுடன் கல்லூரிக்குள் வரும் லெனின், எதிர்பாராத விதமாக கல்லூரி வளாகத்திற்குள் ஒருவரை கொலை செய்து விடுகிறார். ஏற்கனவே சில குற்ற வழக்குகள் இருப்பதால், இந்த கொலை குற்றம் அவரது எதிர்காலத்தை முற்றிலும் பாதிக்கும் என்பதால், அதிலிருந்து தப்பிக்க தனது காதலியின் உதவியுடன் ஒரு திட்டத்தை உருவாக்குகிறார். இதற்கிடையில், கொலை செய்யப்பட்டவரை தேடி போலீசும், அவரது ஆதரவாளர்களும் கல்லூரி வளாகத்திற்குள் நுழைகிறார்கள்.

இறுதியில் லெனின் தனது திட்டத்தை வெற்றிகரமாக செயல்படுத்தி தப்பித்தாரா? அவர் யாரை, எதற்காக கொலை செய்தார்? என்பதே படத்தின் மீதிக்கதை.

நாயகனாக நடித்திருக்கும் லெனின், அறிமுக நடிகர் என்ற அடையாளம் தெரியாத அளவுக்கு இயல்பான நடிப்பை வெளிப்படுத்தியிருக்கிறார். கல்லூரி மாணவர் காலகட்டமும், அதன் பிந்தைய வாழ்க்கையும் என இரண்டு விதமான மனநிலைகளை தோற்றத்திலும் நடிப்பிலும் வேறுபடுத்திக் காட்ட முயன்றிருப்பது திரையில் தெரிகிறது.

நாயகியாக நடித்துள்ள அஸ்மின், தோற்றத்தில் பெரிதாக ஈர்க்காதபோதிலும், அளவான நடிப்பின் மூலம் தனது கதாபாத்திரத்தை நேர்மையாக செய்திருக்கிறார். திரைக்கதையில் முக்கிய பங்கு வகிக்கும் அவரது கேரக்டர், இறுதியில் கவனம் ஈர்க்கிறது.

காமெடி கலந்த வில்லத்தனத்துடன் திரையில் தோன்றும் ஆர்.வி.உதயகுமார், தனது நடிப்பால் படத்திற்கு கூடுதல் பலம் சேர்த்திருக்கிறார். முனீஷ்காந்த், அனுமோகன் ஆகியோர் குறைந்த காட்சிகளில் வந்தாலும், தங்களுக்கான இடத்தை சரியாகப் பிடித்துள்ளனர்.

கல்லூரி பின்னணியில் அமைந்த கிரைம் சஸ்பென்ஸ் திரில்லர் கதையை, பல திருப்பங்களுடன் சுவாரஸ்யமாக எழுதியுள்ளார் பொன். பார்த்திபன். குறிப்பிட்ட பட்ஜெட்டில், புதுமுகங்களை வைத்து எந்த இடத்திலும் தொய்வின்றி படத்தை நகர்த்தியுள்ள இயக்குநர் கே.ஆர். வினோத், இரண்டாம் பாதியை எதிர்பாராத திருப்பங்களுடன் பரபரப்பாக கையாண்டிருக்கிறார்.

ஒரே கல்லூரி வளாகத்தை மையமாகக் கொண்டு கதை நகர்ந்தாலும், வெவ்வேறு கேமரா கோணங்கள் மூலம் காட்சிகளுக்கு விறுவிறுப்பை கூட்டியுள்ளார் ஒளிப்பதிவாளர் சதீஷ் மெய்யப்பன். கைலாஷ் மேனின் இசை, பாடல்களாகவும் பின்னணி இசையாகவும் கதைக்கு துணையாக பயணிக்கிறது.

மாலைமலர் ரேட்டிங்: 2.5 / 5

# தன்னை பற்றிய விமர்சனங்களுக்கு பிரியா வாரியர் காட்டம்



‘ஒரு அடார் லவ்’ என்ற மலையாள படத்தின் மூலமாக அறிமுகமாகி, இந்திய ரசிகர்களை தன் வசப்படுத்தியவர் பிரியா வாரியர். மலையாளம் தாண்டி இந்தி, கன்னடம், தெலுங்கு படங்களிலும் நடித்துள்ளார். தமிழில் ‘நிலவுக்கு என் மேல் என்னடி கோபம்’, ‘குட் பேட் அக்லி’ போன்ற படங்களிலும் நடித்துள்ளார்.

படங்களில் ஓரிரு காட்சிகளில் மட்டுமே தலை காட்டி வரும் பிரியா வாரியர் குறித்து இணையத்தில் சில கமெண்ட்டுகள் வெளியானது. ‘பிரியா வாரியர் சின்ன ரோல்களில் நடித்தே காலத்தை தள்ளப் பார்க்கிறார். கவர்ச்சி தான் அவரை காப்பாற்றுகிறது. ஜூனியர் ஆர்டிஸ்ட். கூட்டத்தில் ஒருவர் என்றெல்லாம் விமர்சிக்கப்பட்டு வருகிறார்.

இதையடுத்து தன் மீதான விமர்சனங்களுக்கு பிரியா வாரியர் காட்டம் தெரிவித்துள்ளார். “உண்மைக்கு புறம்பான செய்திகள் கமெண்ட்டுகள் என்ற பெயரில் சுற்றுகின்றன. இதுபோல மோசமான பேர்வழிகளை எதுவுமே செய்யமுடியாது. லைக்குகளுக்காக இப்படி செய்வதால் என்ன ஆகிவிட போகிறது. இந்த நிலை மாறத்தான் வேண்டும்”, என்று குறிப்பிட்டுள்ளார்.



நடிகை பிரக்யா நக்ரா மலையாளம், தமிழ் சினிமாவில் வளர்ந்து வரும் நடிகைகளில் ஒருவர். அடுத்து அவர் அதர்வாவின் இதயம் முரளி படத்தில் நடித்து இருக்கிறார்.


பிரக்யா நக்ரா இன்ஸ்டாவில் வெளியிட்டு வரும் போட்டோஷூட் புகைப்படங்கள் தொடர்ந்து ரசிகர்களை கவர்ந்து வருகின்றன.

தற்போது சேலையிலும் தாராள கவர்ச்சி காட்டி அவர் எடுத்து இருக்கும் போட்டோஷூட் ஸ்டில்கள் ரசிகர்களை கவர்ந்து வருகிறது.




Landbazzar
பகுதி நேர வேலைவாய்ப்பு
PART TIME JOB
SALARY
20,000/- Rs
NO SALES TARGET
- Retired person's / VRS
- Self Employee / Busniess Man
- Extra Income Needers / House wifes

5 APPOINTMENTS ONLY
97900 21367




WANTED
CNC & VMC OPERATOR, SETTER
LINE INSPECTOR
SHIFT SUPERVISOR
HI-TEK ENGINEERING INDUSTRIES
Survey No. 472/2A, SPH Road, Sengadu
Ayakolathur, Thiruvallur. - 602 105
99419 11817 / 99416 98979




PHARMACIST REQUIRED
Diploma in Pharmacy with Tamilnadu Pharmacy Council Registration Certificate with 3 yrs exp.
Maya Nursing Home
Ashoknagar, Chennai
Call: 98413 83989

ஆட்கள் தேவை
மருத்துவமனையில் பராமரிப்பு வேலைக்கு
40 வயதுக்குள் உள்ளவர்கள் அணுகவும்
RK சிறப்பு மருத்துவமனை
93457 81110

அசோக்நகரில் உள்ள
மாயா நர்சிங் ஹோம்க்கு
அருகில் வசிக்கும்
வார்டு பாய்
ஆயாக்கள் தேவை
சம்பளம் ரூ.18,000
ஆண் / பெண் • வயது: 35க்குள்
9361390688 / 9841383989

MOUNT HOSPITAL
@ Adambakkam & Thoraipakkam Req.
- HOSPITAL ADMIN
  with Insurance Experiance
- STAFF NURSES
- RECEPTIONIST
- LAB TECHNICIAN
- PHARMACIST
- DRIVERS

730 530 5231

அசோக்நகரில் உள்ள
மாயா நர்சிங் ஹோம்க்கு
அருகில் வசிக்கும்
வார்டு பாய்
ஆயாக்கள் தேவை
சம்பளம் ரூ.18,000
ஆண் / பெண் • வயது: 35க்குள்
9361390688 / 9841383989

POWERCARE SOLUTIONS PVT. LTD
(Manufacturer of Diesel Generator)
Requires
BDM, AREA, SALES MGR
(Exp. min 3yrs.Good Sal + Inc)
Fresh/ Exp ITI/ DIP/ ENGG
(MECH, EEE)
Ct: 89259 93101, 91766 85440

கேரளாவில் உள்ள
பிரபல
ஹோட்டலுக்கு
அனுபவமுள்ள
தோசை மாஸ்டர் &
டீ மாஸ்டர் தேவை
உணவு, தங்குமிடம் இலவசம்
விருப்பமுள்ளவர்கள்
ஆதார் கார்டு / அடையாள சான்றுடன் நேரில் வரவும்
8711 808080

சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மாவட்டங்களில்
பூச்சி மருந்து அடிக்க ஆட்கள் தேவை.
உணவு, தங்குமிடம் மற்றும் ESI, PF உண்டு
சம்பளம் அனுபவத்திற்கேற்ப
பள்ளி சான்றிதழ், 2 போட்டோ, ஆதார் எடுத்துவரவும்,
சிட்டி பெஸ்ட் கன்ட்ரோல் சர்விஸஸ்
2/7, வேலாயுதம் காலனி, சாலிகிராமம்
Ct: 9994843057 / 9384725836

SHANMUGA PRIYA
TOURS & TRAVELS
Porur, Chennai
நிறுவனத்திற்க்கு அனுபவமுள்ள
TELE CALLERS
பெண்கள் தேவை
Salary: 15,000/- TO 20,000/-
99412 44226

ST COURIER®
The People's Choice
Domestic-International-Cargo-E commerce
சென்னை போரூரில் பணிபுரிய கீழ்கண்டவர்கள் தேவை
- நைட் / மார்னிங் - டியூட்டி
  Full / Part Time ஆட்கள் தேவை.
  (ஸ்கேனிங், லோடிங், அன்லோடிங்)
- வேன் டெலிவரி ஆட்கள்
  (குறிப்பு: பைக் தேவையில்லை)

தகுதி: 10 வது, 12 வது, டிகிரி.
சம்பளம்: Upto Rs. 20,000 + Perks
Ct: 99406 11849

Aruvi
SUPERMART
Shop Smart, Shop Smiles.
ACCOUNTANT
STOCK INVENTORY
DELIVERY BOY
Min 3 yrs Experience
SF No. 138/9A2, Kundrathur Main Rd, Mangadu, Chennai-122.
9087411008, 9087982000

Breaking NEWS Card.com
www.breakingnewscard.com
BREAKING NEWS
We Create Professional
Breaking News Cards
Daily 4 Cards Plus
get News Portal FREE
Call: 7789951009
₹999 ONLY






### யானை !

உருவத்தில் பெரியது உண்ணவில்லை அசைவம் யானை !

கரிய நிறம் கொண்ட வெள்ளை உள்ளம் !
கரும்பு தந்தால் விரும்பி நன்றாய் உண்ணும் !

உருவத்தில் பெரியது கண்கள் மட்டும் சிறியன !
உணவில் சைவம் மட்டுமே என்றும் உண்ணும் !

பூச்சிகள் செல்லாமலிருக்க காதுகளை ஆட்டும் !
பூவுலகில் அனைவரும் விரும்பிடும் அற்புத விலங்கு!

நின்றாலும் அழகு நடந்தாலும் அழகு !
நினைத்தாலும் அழகு பார்த்தாலும் அழகு !

மதம் பிடிக்காதவரை குழந்தையாக இருக்கும் !
மதம் பிடித்தாலோ மதம் பிடித்த மனிதனாகிவிடும் !

மிகப்பெரிய யானையை கோவில் பாகன்
மிக மோசமாக பிச்சை எடுக்க வைப்பான் !

வாங்கிய பணத்தை வாங்கிக் கொண்டு !
வாகனமாய் அமர்ந்து அங்குசத்தால் குத்துவான் !

பெரிய சங்கிலியை இழுத்து தோற்ற யானை !
சிறிய கயிற்றை இழுக்க முயற்சிக்கவில்லை !

காடுகளில் கூட்டமாக கூடி வாழும் !
கோவில்களில் தனியாக வாடி வாழும் !

குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை !
குவளயத்தில் அனைவரும் அதிசயிக்கும் யானை !



மணி ஓசை வந்து விடும் முன்னே !
மணியாக நடந்து வரும் பின்னே !


நிலவும் யானையும் காதலியும் ஒன்று !
எத்தனை முறை பார்த்தாலும் சலிப்பதே இல்லை !

**கவிஞர் இரா .இரவி !**



தகப்பனின் கையதில்–
அடக்கமாக படுத்து–
முகத்தை சுழிக்கையில்

என் அப்பா!!அவரின்
கவலையை மறக்க–
எனக்கெங்கே விளையாட்டு
பொம்மை– என பொய்

கோபம் காட்ட– ஓடி வந்து

இருவரையும்
கிளப்பி
விடுகிறாள்–
அம்மா!!!

**பானுஸ்ரீ**
பாண்டிச்சேரி



எனக்கு தான்
சொந்தமாகுமென
அதிகமாக நேசித்து
விட்டேன் மாற்றான்
தோட்டத்து மல்லிகை?!

சத்தியமாக நான் தோற்று
விட்டேன் உன்னை போல
ஒரு அழகான கவிதையை
என்னால் படைக்கவே
முடியவில்லை!

மேகங்கள் கூட
உன் அழகை கண்டு தான்
கண் மூடுகிறதோ?!

இன்னும் ஆயிரம் கண்கள்
வேண்டும் உன்னை
அணு,அணுவாய் இரசிக்க
இரு விழிகள் போதுமா
என்ன?!

காதலை இன்னும் என்னுள்
ஏற்றிக்கொள்கிறேன் கொஞ்ச
நேரம் இரு விழிகளால்
இப்படியே பார்!

**லி.நௌஷாத் கான்**

### புத்தம்

சூதாட்டத்தில் அதிக முதலீடு
கொழுத்த லாபம் வரும்போது
சொர்க்கம் வேறெங்கு
உண்டு என ஆனந்தக்
கூத்தாடுகிறது

அதற்கிணையாய்
எதிர்பாராமல் இழப்பு
அரவமாய் கொத்தும்போது
நாடித் துடிப்பு அடங்கிப்
போகாதா என்கிற யோசனை
உதயமாகிறது

ஆசையே துன்பத்தின்
ஆணிவேர் எளிமையே

ஏற்றத்தின்
திறவுகோல்
சிறுகக் கட்டி
சிறப்பாய்
வாழ்வோம்

**பி. பழனி,**
சென்னை.

1. யாரை ரொம்ப நம்புறீங்க
என்று கேட்டால் ரொம்ப
நேரம் யோசிப்போம்
ஆனால் நம்மைப் பற்றி
ஒரு நொடியும் யோசிக்க
மாட்டோம் அதுதான் நமது
முதல் தோல்வி


2.அமைதி என்பது சத்தம்
இல்லாத இடத்தில்
இருப்பது அல்ல எவ்வளவு
சத்தங்களுக்கு நடுவிலும்
உங்கள் மனதைஅமைதியாக
வைத்து இருப்பதே
உண்மையான நிம்மதி

3. வாழத் தெரிந்தவனிடம்
வாழ்க்கை இருப்பதில்லை
பாசம் தெரிந்தவன் இடம்
உறவுகள் இருப்பதில்லை
உழைக்கத் தெரிந்தவனிடம்
பணம் இருப்பதில்லை

4.வானமும் பூமியும்
இறைவன் சொத்து இன்பமும்
துன்பமும் மனிதனின்
சொத்து அன்பு ஒன்றே
நட்பின் சொத்து

5. நன்றாக பேசி
பழகுபவன் எல்லாம் நமக்கு
நல்லது செய்வான் என
நினைக்காதே தேளின்
கொடுக்கில் மட்டுமல்ல
தேனியில் கொடுக்கிலும்
விஷம் உள்ளது

**நடேஷ் கன்னா**
கல்லிடைக்குறிச்சி



### புல்லாங்குழல்!

புல்லினமே புல்லினமே
புல்லாங் குழலே!
நல்லிசையைக்கொண்டோமே
நாளும்தான்...மெல்லிசையை
நல்கிடுவாய் நன்றாக
எந்நாளும் இன்பாக
பல்லிசைத் தந்திடுவாயே
பார்!

இறையின் புகழை
இனிதாகப் பாடி நிறைப்பாய்
மனத்தையே நேர்ந்து..
பொறுப்பாய் இசையை

எழிலாக
ஈடின்றி நல்கித்
திசையெட்டும்
உன்புகழ்
தேர்ந்து!

**முனைவர்
இராம.
வேதநாயகம்**
திருவண்ணாமலை.

### கொடுமையை எதிர்த்துநில்!

நேரிசை ஆசிரியப்பா!

கொடூரத் தனத்தைக்
கூட்டுச்சேர்க் காதே
படுமோ சம்தான்
பாதகச் செயலே!

மனத்தின் கோட்டமே
மாண்பிலாக் கொடூரம்
இனத்திற் குள்ளே
ஏன்கொடு மையே!

கொடிய செயல்கள்
கொள்ளும் வஞ்சம்
நெடிது நாள்தான்
நெஞ்சம் கொல்லும்!

எதிர்த்து நிற்போம்
கொடுமையை...
இதயம் வைப்போம்
இனிதாய் என்றுமே!

**முனைவர்
இராம.வேதநாயகம்.**



### சிதறல்கள் ...

பேரம் படிந்தது //
நிறம் மாறும் அணிகள் //
தேர்தல் திருவிழா //

அரண்மனை ஓவியம் //
போட்டியில் முதல்பரிசு
பெற்றான் //
குடிசைவாழ் சிறுவன் //

முற்றிய கதிர்கள் //
சொக்கிப் போய் நிற்கிறது //
சோளக்காட்டு பொம்மை //

நடுரோட்டில் பூசணிக்காய் //
விபத்தில் ஒருவர் மரணம் //
திருஷ்டி கழிந்தது //

இன்று பந்த் // சங்கிலியால்
பிணைக்கப்பட்டு உள்ளன //
வாடகை வண்டிகள் //

துளிர்க்கும் நம்பிக்கையில் //
சுமந்து கொண்டிருக்கிறது
பூமி// பட்டுப்போன மரம் //

குயில் முட்டை //
காக்கை அடைகாக்கிறது //
வாடகைத் தாய் //
சேற்றில் எருமை //
நின்றபடி அசை போடுகிறது //
முதுகில் நாரைகள் //

முதல் குழந்தைக்கு //
காதலனின் பெயரைச்
சூட்டினாள் //
பாவ விமோசனம் //

மழை பெய்யுமா //
தண்ணீரைத்
தேடும் வேர்கள்//
பாழும் கிணறு //

**பா.செந்தில்குமார்,** கோவை

### ஆட்டுமந்தை மனிதர்கள்

ஊர்நடுவே அகன்றதெரு எல்லோர் கண்கள்
உறுத்துகின்ற படியுயர்ந்த கட்டடத்தில்
பார்போற்றும் எழுத்தாளர் உலகம் உய்யப்
படைத்தளித்த நூல்களுள்ள நூலகம்தான்
தேர்போலப் பெயர்பொறித்த பலகையோடு
தெளிவாக இருந்தபோதும் இளைஞரெல்லாம்
நேர்கொண்ட பார்வையொடு கடக்கின் றார்கள்
நின்றதனைப் பார்ப்பதற்கும் நேர மின்றி !

கண்களிலே யாருக்கும் பட்டிடாமல்
கடந்தூரின் எல்லையிலே தெருவின் ஓரம்
மண்டியுள்ள முட்புதர்கள் மறைவுக்குள்ளே
மண்பூச்சுக் கட்டடத்தில் மதுக்கடைதாம்
வண்ணவொளிப் பெயர்பலகை ஏதுமின்றி
வாடியுள்ள மலர்ச்செடிபோல் இருந்த போதும்
வண்டுகள்தாம் பூநாடிச் செல்லல் போன்று
வரிசையாகச் செல்கின்றார் இளைஞரெல்லாம் !



அறிவொளியைப் பாய்ச்சுதற்கே ஓங்குயர்ந்தே
அழைத்தபோதும் கண்ணெடுத்துப்பார்த்திடாமல்
அறிவிருந்தும் கூற்றுவன்தான் எதிரில் நின்று
அழையாமல் இருந்தாலும் செல்கின் றார்கள் !
குறக்கோளே இல்லாத அரசினாலே
குற்றுயிராய் இளைஞர்தம் வாழ்வோ இன்று
குறிப்பாகப் பாழ்ப்பட்டுப் போதல் பார்த்தும்
குனிந்திங்கே மக்களெல்லாம் இருத்தல் நன்றோ !

**பாவலர் கருமலைத்தமிழாழன்**




# நூல் அறிமுகம்:

**உயிரில்கலந்த சொற்கள்**

மனித உணர்வுகளை மொழியின் அழகியலோடு தகுந்த சொற்களை கொண்டு உருவாக்கப்பட்ட பெரிய அறத்தையும் அன்பையும் வெளிப்படுத்தும் படைப்பு தான் கவிஞர் #மீ_யூசுப்_ஜாகிர் எழுதிய உயிரில் கலந்த சொற்கள்.

நல்ல சொற்கள் ஆறுதல் அளித்து நிம்மதியை ஏற்படுத்தும், கசப்பான சொற்கள் வலியையும், மன உளைச்சலையும் உண்டாக்கும். கவிஞரின் ஒவ்வொரு சொற்களும் புத்தகத்தின் தலைப்பைப் போலவே உயிரில் கலக்கிறது, ஒவ்வொரு கவிதைகளும் வெளிப்படுத்தும் உணர்வுகள் நம்மை வேறொரு நிலைக்கு உந்திச் செல்கிறது.

இரண்டு முறை வாசித்தேன், வாசிக்க வைத்தது நம் வாழ்வில் மறைந்து போன பழைய நினைவுகளை மீட்டெடுக்கும் அற்புதமான ஒரு கருவி தான் இந்த #உயிரில்கலந்த சொற்கள்.

**மயிலிறகு**

மயிலிறகின் சிறு இழைகளை பறித்து வெள்ளை காகிதத்தில் சுற்றி மயில் இறகு குட்டிப் போடும் என்று சொல்லி அதற்கு தீனியாய் பென்சில் சீவலை கொடுத்து அனுப்பும் நண்பரின் மகள் மீண்டும் எனது பள்ளி நாட்களை திறந்து வைக்கிறாள்.

அடடா ! நம் பால்யத்தை நினைவு படுத்துகிறது எத்துணை முறை இப்படி நாம் மயிலிறகை புத்தகத்தின் நடுவே வைத்து பார்த்து இருப்போம்.

**மழைக்காலம்**

நின்று சீராக பெய்கிறது வெளியே மழை, மனதிற்குள் தான் புரட்டிப்போடுகிறது நினைவுகள். சிறு வயதில் மழைக்காலங்களில் நாம் தெருக்களில் காகிதங்களை கொண்டு செய்யப்பட்ட சாதா கப்பல், கத்திக்கப்பல் என பல கப்பல்களை செய்து நீரில் விட்டு மகிழ்ந்து இருப்போம். அதில் பயணிக்க பயணிகளாய் எறும்புகளை பிடித்து அதில் அனுப்பி வைத்து இருப்போம்.

இந்த கவிதை வாசித்தப்பின் அது போல பல நினைவுகள் கொப்பளித்துக் கொண்டு மேலெழுகிறது.

**மருந்து**

ஆணின்எத்தனைஎத்தனையோ வலிகளுக்கு மருந்தாகிறாள்! பெண் அவளுக்கு எத்தனையோ வலிகள் இருந்தபோதும். ஆம் எனக்கு ஆகச் சிறந்த மருந்து என் அம்மாவின் தாய்மடி தான், இந்த உலகில் எத்துணை துன்பம் வந்தாலும் அதனை எதிர்கொள்ள ஐந்து நிமிடம் தாயின் மடிமேல் படுத்தால் உலகை வெல்லும் பலம் கிடைக்கும். என் தாய் சொல்லுவாள் எதுவா இருந்தாலும் பாத்துக்கலாம் கண்ணுனு ...


இப்படி இந்த கவிதை தொகுப்பு முழுவதும் நம் நினைவுகளை கிளறி விடும் சொற்கள் தான் நிறைந்து இருக்கிறது. அனைத்து கவிதைகளும் சரியான சொற்களை கொண்டு கவிஞர் சிறப்பாக எழுதி இருக்கிறார்.. நிச்சயம் இந்நூல் ஒரு அருமையான வாசிப்பனுபவத்தை தரும். நூலின் கூடுதல் சிறப்பு ஒவ்வொரு கவிதைக்கும் ஒவ்வொரு ஓவியங்கள் தான். நூலின் அட்டைப்படம் மிக அழகு, நூலின் வடிவமைப்பு #மௌவல்_பதிப்பகம் சிறப்பாக உருவாக்கி இருக்கிறார்கள். கவிஞரின் சிந்தனைக்கு அவர்களும் ஒத்திசைந்து அழகான முறையில் நூலை கொண்டு வந்து இருக்கிறார்கள். நிச்சயம் அவர்களையும் நாம் பாராட்டிட வேண்டும். அனைவரும் வாங்கி வாசியுங்கள் நண்பர்களே! உங்களையும் வெல்ல உங்கள் மனங்களை ஆட்கொள்ள பல சொற்கள் காத்துக் கொண்டு இருக்கிறது.

கவிஞருக்கு என் அன்பின் வாழ்த்துக்களும் பாராட்டுக்களும்..

கவிஞர்.அ.சுந்தரசெல்வன்
திருவண்ணாமலை

**நூலை பெற:**

நூல்: உயிரில் கலந்த சொற்கள்
ஆசிரியர்:மீ.யூசுப் ஜாகிர்
பதிப்பகம்:மௌவல் பதிப்பகம்
பக்கங்கள்:142 விலை:150
தொடர்புக்கு:9787709687,7010219221



### அந்தி மஞ்சள் நிறத்தழகி

வானத்தின் நெற்றியில்
மெதுவாகப் பூசும்
குங்குமாகச் சிரிக்கும்
அந்தி மஞ்சள் நிறத்தழகி

ஒளியும் இருளும்
ஒரே நொடியில்
கைபிடிக்கும் தருணம்...

காற்று அவள் கூந்தலைக்
கலைத்து விளையாட...

பறவைகள் அவள்
பெயரை இசைக்க...

நாளின் சத்தங்கள்
நயமாய் ஒடுங்க...

இதயம் மட்டும்
அவள் நினைவில்
விழித்திருக்க

அந்தி மஞ்சள் நிறத்தழகி...
நாளின் முடிவல்ல...

இனிமையான இரவின்
மென்மையான தொடக்கம்

முடிவென்று தோன்றும்

எல்லா
தருணங்களிலும்
தொடக்கமாய்
நிற்கும்
அவள்.

**நா.பத்மாவதி**
கொரட்டூர்



### சிருங்காரம்

நீ சிணுங்கும் போதெல்லாம்
அழகிய சிருங்காரம் வந்து
ஒட்டிக் கொள்கிறதடி
அன்பே உனதழகில்!

### அதிகாரம்

எனது கவிதைகளில்
உட்கார்ந்து கொள்ளும்
அதிகாரத்தை உனக்கு
மட்டும் யார் கொடுத்ததடி?
என் இனிய உயிர்க்காதல்
அன்பே!

### கேள்வி

உன்னை அமர வைக்க
என் இதயத்தைத் தவிர
வேறு எந்த இடமடி
அழகாக இருந்து விட
முடியும்? சொல்லடி என் ப்ரிய
அன்பே!

### தருணம்

உன் அன்பை உணரும்
தருணத்திலெல்லாம்
இறக்கைக் கட்டிக் கொண்டு
பறக்கிறதடி அன்பே
என் காதல்!

### ரசம்

நீ எந்த ரசம்
வைத்தாலும்
அதில் தவறாமல்
காதல் ரசத்தின் ருசி
இடம் பெற்று விடுகிறதடி
என் ஆருயிர் அன்பே!

### கவிதை

கோபத்திலிருக்கும் போதும்
கூட உன் கண்கள் என்னிடம்
கவிதை சொல்லத்
தவறுவதில்லை அன்பே!

### தெரியும்

என் கவிதைகளுக்கும் கூடத்
தெரிந்திருக்கிறது
பார் அன்பே கோபத்தில் கூட
நீ அழகு என்று!

### உண்மை

உன் கண்கள் சொல்லும்
கவிதைகளைப் போல்
என் கவிதைகள் அழகாய்
இருப்பதில்லை அன்பே!

### கவிதை

உன்னைப் பற்றி
என்ன எழுதினாலும்
அது கவிதையாகி
விடுகிறதே! அது எப்படியடி
என் இனிய உயிர்க்காதல்
அன்பே?!

### நடிப்பு



காதல் இல்லாதது போல்
நடிக்க உன்னால்
மட்டும்
எப்படியடி முடிகின்றது?
என் ப்ரிய வசந்தமே!

**முத்து ஆனந்த்,**
வேலூர்






என் அன்பே....
I Phone ஆருயிரே!
உன்னுடன் நீண்ட
நாட்களாகப் பழகியிருந்தாலும்
உன்னைச் சந்திக்கும்
ஒவ்வொரு முறையும்
ஒரு புதிய ஐ போனைக்
கா த லா க க்கரத்தில்
எடுப்பது போல் தான்
இருக்கிறது எனக்கு!
என் விரல் தொடும் போதும்
படும் போதும் கலைப்
பொக்கிஷமாய் மாறி
மகிழ்ச்சியில் என்னைப்
பறக்க வைப்பது எனக்குப்
பிடித்த நீ மட்டுமல்ல அன்பே!
நீ எனக்குப்பரிசாக வழங்கிய
ஆண்ட்ராய்டு போனும்தான்!
என்னைப்போலவே என்
டிஸ்ப்ளேவும் பெருமை
பெறட்டும் என்று தான்
தினமும் உன் புகைப்படத்தை
அதில் பதிவிடுகிறேன்!
---------------------
I Phone ஆருயிரே!
புலனத்தில் நீ அனுப்பும்
உன் சுயமிப் புகைப்படங்களில்
என்ன அழகாய்
அமர்ந்திருக்கிறது
உன் மீதிருக்கும் என் கா தல்!
நீ எனக்கு வழங்கிய
அலைபேசிக் கருவி
செல்லிடக் கைபேசி என்றால்
நீயோ எனக்கு
மெல்லிடைப் பேசி!
அருகிருந்து நீ பேசுவது
எனக்கு அணைப்பென்றால்
அலைபேசியில் நீ பேசுவது
எனக்கு சிலிர்ப்பு!
உன்னுடன் வாழ்வதற்கு
மட்டுமே அனுமதி
அளித்திருக்கிறது என் அன்பு!

அன்பே....
என் I Phone ஆருயிரே!

உன் அலைபேசித்
தொடுதிரையி(ல்)ன்
முகப்பாக என்
புகைப்படத்தைப் பதிய
வைத்திருக்கும் என்
அ ன் பு க் கா த லி நீ!
நீ தமிழாசிரியையாக
இருக்கலாம்!
அதற்காக நீ எனக்கு
அனுப்பும் எல்லாக்
குறுஞ்செய்திகளிலும் உன்
தனித்தன்மையான
குறும்பை
அமர வைக்க
வேண்டுமா என்ன?! என்
கன்னங்களில் மட்டுமல்ல
எனக்காக
எழுதும் கவிதைகளிலும்
கூடத் தவறாமல் மு த் த ம்
வைப்பவள் நீ!
எனக்குத்தவறிய அழைப்புகள்
வரும் போது(ம்)கூட
நீயாகத்தானிருக்குமோ
என்று ஆவலுடன்
எதிர்நோக்குகிறேன்!
நீயே என் கா த லி!
நீ மட்டுமே என் கா த லி!

என் அன்பே....
I Phone ஆருயிரே!
ஊர்க் கண்ணெல்லாம்
உன் மேலே(யே)யிருக்கிறது!
உன் கண்ணோ என்
மேலிருக்கிறது!
நீ என் ஆப்பிள் போன்
மட்டுமல்ல எனக்கு
ஆப்பிள் பெண்ணும் நீ தானடி!
உன் ஒரே ஒரு
குறுஞ்செய்தியில் நான்
காண்கிறேன் ஆயிரம் காதல்
கனவுக(ள்!)ளை! என்
வீட்டு வாயிற்படியும் கூடத்
தவமிருக்கத் தொடங்கி
விட்டதடி உன் கோலாகல
வருகைக்காக!
நான் வாங்கும் ஐ போன்கள்
பழசாகலாம்!
ஆனால் நீ எப்பொழுதும்
என்றென்றும் எனக்குப்
புதுசுதான் என்
அந்தப்புரத்துத் தேவதையே!

அன்பே....
என் I Phone ஆருயிரே!

ஊர் உலகமே ஐ போனைத்
தடவிக் கொண்டிருக்க நீயோ
மிகவும் விதிவிலக்காகப்
புத்தகப் பிரியை!
ஆயிரம் ஆயிரமாய்
லட்சம் லட்சமாய் கோடியோ
கோடியான பெண்கள்
ஆண்ட்ராய்டைத் தடவுவது
மட்டுமே லட்சியமாகக்
கொண்டு நடை போட நீயோ
வாழ்வியல் கலைகளைச்
செயல்படுத்தும் லட்சியத்தரசி!
பித்தலாட்ட மங்கைகள்
சுற்றிலுமிருக்க நீயோ
அவர்களிடமிருந்து என்னைத்
தனியாகப்பிரித்துக்காப்பாற்றிய
அன்னப்பறவை!
நீ வழங்கினால் ஆலகால
விஷம் கூட எனக்கு
ஆவின் பாலாக
மாறி விடும் என்
இனிய உயிர்க்காதல்
அன்பே!



**முத்துஆனந்த்**
வேலூர்



## அவள் மேனி

" அவள் மேனி பனியை விட
வழவழப்பானது .... "

மயிலிறகு கூட கனமாக
இருக்கும் அவள் பொன்
மேனி மிருதுவானது ..."

பூ போல் அவள் மேனி
தொட்டால் உதிர்ந்து
விடுவாள் ..."

சந்தனம் போல் அவள் மேனி
உரசினால் மணம் தருவாள் .."

மழைத்துளி போன்றது அவள்
மேனி நெருங்கினால்
மண்வாசனை தருவாள் ..."

நெருப்பை போன்றது அவள்
மேனி அனுமதி இல்லாமல்
நெருங்கி விட்டால்
அனலை கக்கிடுவாள் ..."

நிழலைப் போன்றது
அவள் மேனி நெருங்கினால்
மறைந்திடுவாள் ....."

கவிதை போன்றது அவள்
மேனி வாசிக்க வாசிக்க
பொருள் தருவாள் .... "



நிலவைப் போன்றது
அவள் மேனி
கவிஞர்கள்
என்றும் விடுவதாக
இல்லை அவளை ..."

**ஆர். சீதாராமன்**
சீர்காழி



## அவள்

இப்பொழுது என்பது
நான் உன்னை
நினைக்கும் நேரம். பொழுது



என்பது
எப்பொழுதும்
இப்பொழுதாகவே
இருக்கிறது.

**கே. பி. ஜனார்த்தனன்**



துளிர் விட்ட தளிர் இலைகள்
குளிக்க ஆசைப்பட,
மழை வேண்டிக்
காத்திருக்கிறது வேப்ப மரம்.

**கே. பி. ஜனார்த்தனன்**

1. கடவுள் படைத்த உலகில்
மனிதன் வாழ்கிறான்
மனிதன் வடித்த சிலையில்
கடவுள் வாழ்கிறார்

2.படிப்பு என்பது மூளைக்குள்
தகவல்களை திணிப்பது
அல்ல அது மூளையை
சிந்திக்க வைக்கும் ஒரு
கருவி

3.சில இடத்துக்கு நாம
போறது புண்ணியம் சில
இடத்துக்கு நாம போகாமல்
இருப்பது கண்ணியம்

3.நடிக்கத் தெரியாத அன்பு
கோபமாகத்தான்
வெளிப்படும்


4.மாஸ்க் கொரோனாவில்
இருந்து நம்மளை காப்பாற்றும்
மௌனம் மனைவியிடம்
இருந்து நம்மளை காப்பாற்றும்

5.எப்பொழுதெல்லாம்
விமர்சனங்கள்
எழுப்பப்படுகிறதோ
அப்போதெல்லாம் நீ



கடமையை
சரியாக
செய்கிறாய்
என்று அர்த்தம்
மற்றவர்களின்
வயிற்றெரிச்சல்
தன்
விமர்சனம்

**நடேஷ் கன்னா**
கல்லிடைக்குறிச்சி



## தூய்மைப் பணியாளர்!

நேரிசை வெண்பா!

தூய்மைப்பணியாளர்
தேர்ந்த பணியாளர்
வாய்மைஉயிராகப்பாவிப்பர்!--
ஏய உணர்வோடே
உன்னதமாகப்பணிசெய்வர்
தணிப்போம்
அவர்துயரைத்தான்!

சிறந்தநல்தொண்டினைச்
செய்தே உயர்வர்
பொறுப்புமிகு நல்ல
பொலிவும்.. திறமையும்
கண்டேதான்
தூய்மைப்பணியாளர்
தம்கடமை கொண்டிடுவார்
என்றேதான் கொள்!

**முனைவர்**
**இராம.வேதநாயகம்.**

சிறைகள் ஏதுமின்றி
சிறகுகள் விரிக்கிறேன்...

கட்டுக்கள்.. இல்லாமல்...
காற்றோடு கலக்கிறேன்..

வண்ணங்களில் குளித்து...
வாழ்வை ரசிக்கிறேன்...

எண்ணங்கள் பாடலாய்...
மனதோடு இசைக்கிறேன்...

**தே.சௌந்தரராஜன்**
கல்யாணம் பூண்டி

## தேடினாலும் கிடைக்காது

கூடி வாழ்ந்தோம் துயரத்தை
மறந்தோம்...

உறவை உயிராய் மதித்தோம்
உண்மையாய் இருந்தோம்...

காகித பணம் இல்லாத
காலத்தில் பண்டத்தை
கொடுத்தோம்...

செல்வங்களாக ஆடு, மாடு ,
கோழி வளந்தோம்
பெரும் செலவுக்காக விற்று
கடனில்லாமல் வாழ்ந்தோம்...

வீட்டுக்கோர் நாய்
வளர்த்தோம் களவு
போகாமல் காத்து
வைத்தோம்...

விழா காலம் வந்து விட்டால்
ஊரே கூடிகும்மியடித்தோம்...

அத்தனையும் இப்போ எங்கே
போச்சு கைபேசிக்குள்ளே
அனைத்தும் புதைந்து
போச்சு...

வரும் காலம் நமக்கில்லை
வாழ நமக்கு நல்ல
பூமியில்லை...



தேடி தேடி
போனாலும்
அது கிடைக்கப்
போவதில்லை...!!

**பொன். கருணா**
நவி மும்பை



## "மனநிலை மங்கிய சிறுமியடா"

அவளுக்கு உலகமே
இன்னும் விளையாட்டு
பொம்மை,அதை
வேட்டைக்காடாக மாற்றி
விட்ட நீ நடமாடும் நரகம்!

மனநிலை மங்கிய
சிறுமியடா.. அவளிடம்
“ஆம்” இல்லை...
“இல்லை” கூட இல்லை...
அதுவே உனக்கு
வசதியான மௌனமாகிப்
போனதடா!

அந்த மௌனத்தை
சம்மதமென மொழிபெயர்த்த
உன் மொழி மனிதக்
குரலல்ல...மிருகத்தின் குரல்!

அவள் வயிற்றில்
வளரும் குழந்தை
காதலின் சாட்சி அல்ல
உன் காமத்தின்
குற்றச்சான்று!

இனி உன்னை ஆணென்று
சொல்லிக் கொள்ளாதே..
உன் ஆண்மை
அங்கே இறந்து போனது!

சட்டம் தாமதிக்கலாம்,



ஆனால்
வரலாறு
மறக்காது!
காமுகனென்று
கல்வெட்டில்
பதிக்கும் உன்
பெயரை!

**முகில் தினகரன்**
கோயமுத்தூர்



உன்னை கண்ட முதல் நாள்
இதயம் ஈகோ மறந்து
சொல்லியது இத்தனை நாள்
நீ கனவு கண்டது
இத்தனை நாள்
யாரோடு வாழ வேண்டும் என
கங்கணம் கட்டியது
புரியாத புதிரான வாழ்கையில்
விடையாக எண்ணியது
தேடல் நிறைந்த
வாழ்க்கையிலும்
பொக்கிஷமாக எண்ணியது
இவளை தான் இவளை
யாருக்காகவும் எதுக்காகவும்
விட்டு விடாதே
காதலோடு கெட்டியமாக
பிடித்து கொள்
இவள் உனக்கானவள்
இதுவரை நீ தேடி திரிந்த
தேவதை இவள் தான் என
சப்தமுடன் சொல்லியது!

ஈவு இரக்கமற்ற கடவுள்
ஏதோ ஒருநாளில்
இரக்கப்பட்டு என்ன
வேண்டுமென்றான்?
கனவில் தேடிய தேவதை
தேடாமலே என்
வாழ்வில் வரமாய் வர
வேண்டுமென்றேன்!

சோகம் நிறைந்த வாழ்விலும்
சொந்தமாக நீ மட்டும் தானடி
வர வேண்டும் சாபம் வரமாய்
கிடைக்குமென்றாலும்
பாவம் உன் காதல் மட்டும்
கடைசி வரை
என் துணை வர வேண்டுமடி!

என் வாழ்க்கை பதிவேட்டில்
உன் பெயரை அந்த கடவுள்
எழுதாமல் போனாலும்
என் காதலேட்டில் முதலிடம்
உனக்கு மட்டும் தானடி!
நீயே இல்லாத போது
உன் மீது கொண்ட
காதலேது என சிலர்
பரிகாசம் செய்கின்றனர்
உன் நினைவுகளை
இன்னமும் கருவாய் சுமந்து
கொண்டிருக்கிறேன் என்பதை
எப்படி சொல்ல?!

உன்னை போல் யாரையும்
இரசிக்கவும் தெரியவில்லை
காதலிக்கவும் தெரியவில்லை
இப்பிரபஞ்சத்தில்
எனக்கானவள் நீ மட்டுமே!
இன்னும் என் ஆராய்ச்சி
முடியவே இல்லை உன்
புருவங்களுக்கு கீழே
இருப்பது உண்மையிலேயே
கண்கள் தானா?
வசீகரிக்கும் அல்லது
கவிழ்க்கும் அந்த மாயத்துக்கு
என்ன பெயர் தான்
வைப்பதோ?!

எனக்கானவள் அவள் தான்
ஏனோ வந்த சுவடே
தெரியாமல் வந்தது போலவே
என் வாழ்வில்
வராமலே போய் விட்டாள்
ஒரு கனவை போல!

ஏ கடவுளே என் முடிவு
இப்படிதான் என தீர்ப்பெழுதிய
பிறகும் ஏன் அவளை
சந்திக்க வைத்தாய்?
நீ ஈவு இரக்கமுள்ளவன் என
என் கண் முன்னே
மீண்டும் ஒரு முறை
சொல்லாதே!

உன் கண்ணில் விழுந்த
என் வாழ்க்கை
ஈசலை போலாகி விட்டது!

தனிமை தான் பரிசாய்
கிடைக்குமெனதெரிந்திருந்தால்
உன்னை சந்தித்து இருக்கவும்



மாட்டேன் இப்படி
உயிர் உருகும்
படி நேசித்து
இருக்கவும்
மாட்டேன்!

**லி.நௌஷாத் கான்**

## நிற்காது எனது தாலாட்டு

உன்னைப்பற்றி எழுத நினைக்கும் ஒவ்வொரு நொடியும்
நானோ... தூள் தூளாய் உடைந்து போகிறேன்!
எதை எழுத? எப்படிச் சொல்ல?
கவிதையாய் வடிக்கவா? வரிகளாய் தீட்டவா?
காதலாய் மொழியவா? கோபமாய் எறியவா?
எதைச் சொன்னால் நான் உன்னை அடைய முடியும்?
நீ எப்போது என்னை வந்து சேரப் போகிறாய்?
உன் மீது நான் எத்தனை கோபக்கணைகளை வீசினாலும்,
என்னுள் உயிர் பெற்றவள் நீயல்லவா!
உன் பிடிவாதங்களுக்கு முன்னால் நான் என்றும்
சிறுபிள்ளைதான், ஆனாலும், எனக்கென்று ஒரு அங்கீகாரம்
உண்டல்லவா? ’அம்மா’ – அது வெறும் சொல் மட்டுமல்ல,
என் உயிர்! "பார்த்துப் போ... பார்த்துப் போ..."
சிறு வயதில் நான் சொன்ன அதே சொல்,
நீ வளர்ந்து தாயான பின்பும் மாறவில்லை எனக்கு.
வயது மாறினாலும் நீ என்றும் என் குழந்தைதான்!
ஆனால், மீண்டும் மீண்டும் நான் இதையே சொல்வதால்,
உன் கண்ணுக்கு நான் ஒரு பித்தியாகத் தெரிகிறேனோ?
அலைபேசி ஒலிக்கும் முன்னே ஏமாந்து போவதை விட,
நீ எடுத்துப் பேசும் ஓரிரு வார்த்தைகளில் மனம் உடைந்து
போகிறேன். என்னுடன் செலவழிக்க உனக்கு நேரமில்லை
அல்லவா? நீ என்னோடு இருக்கும் போதாவது உன்
அலைபேசி ஓயக்கூடாதா? மணிநேரங்களாய் நீ பேசும் அந்த
உரையாடல்கள், முடிந்த பத்து நிமிடத்திலேயே மீண்டும்
தொடர்கிறதே! அப்போது இந்தத் தாயின் ஏக்கம் உனக்குப்
புரியவில்லையா? நீ என்னிடமிருந்து ஏன் இவ்வளவு தூரம்
விலகிச் செல்கிறாய்? உன்னோடு இருக்க வேண்டும் என்ற
ஆசையில் நான் அழைத்தால், "மறுமுனையில் அழைப்பு
வருகிறது" எனத் துச்சமாய் நீ வைக்கும்போது,
என் இதயம் நொறுங்கிப் போகிறது மகளே!
வேலையில் இடையூறு செய்யக் கூடாதென நான் தயங்கி நிற்க,
என் மகள் எல்லாப் பணிகளையும் முடித்துவிட்டு அழைப்பாள்
என ஏக்கத்தோடு நான் அலைபேசியைப் பார்த்துக் காத்திருந்த
நாட்கள்... அவை என் ஆயுட்காலத்தின் பெரும் சுமைகள்!
சிறுவயதில் உன்னை நான் தூக்கிக் கொஞ்சிய போதெல்லாம்,
என் இதயத்தை எட்டி உதைத்து விளையாடினாய்!
அன்று அது மழலை விளையாட்டு...
இன்று அது எனக்கு தீராத வலி!
நீ எத்தனை முறை என் இதயத்தை எட்டி உதைத்தாலும்,
உன்னைத் தாங்கிப் பிடிக்கவே என் கரங்கள் துடிக்கின்றன.



பிள்ளையின் மனம் கல்லாக இருந்தாலும்
பெத்தவளின் மனம் இப்போதும் பித்து
தானே கனிவு குறையாத ஒரு தாயாகக்
காத்திருக்கிறேன், எப்போது வருவாய் என்
மடி தேடி? காத்துக்கொண்டே இருக்கிறேன்
உனக்காகத் தாலாட்டு பாடி!!

**கவிஞர் ஜானகி** துறையூர்

## நாளைய உலகும் இன்றைய நம் கடமையும்

விண்மீது பறப்பார்கள் வீதி தன்னில்
விரைந்திடுவர் நடையிலின்றி வாகனத்தில்
எண்ணற்ற தொழிற்சாலை வளர்ந்திருக்கும்
ஏழுமாடி அடுக்குகளில் குடியிருப்பர்
திண்ணையின்றி விசாலமான வீடு மின்றித்
திகழ்ந்தபச்சை வயலுமின்றி ஏரி யின்றிக்
கண்குளிரக் காட்சிதந்த மரங்களின்றிக்
கனிவுமின்றி எந்திரமாய் இருப்பர் மக்கள் !

தண்ணீர்க்கு வழியின்றித் தவித்துப்பேவர்
தகிக்கின்ற வெம்மைக்குப் பொசுங்கிப்போவர்
மண்ணெல்லாம் சத்தின்றிப் பயிர்களெல்லாம்
மருந்தாலும் உரத்தாலும் நஞ்சாய் மாறும்
உண்ணுகின்ற உணவைப்போல் மூச்சுக் காற்றும்
உயிரெடுக்கும் கூற்றாக மாசாய் ஆகும்
கண்முன்னே அவலமாக மழலையர்கள்
கண்குருடாய் ஊனமாகத்திரிவர் எங்கும் !



காடுகளை மலைநதியை இருந்த தாகக்
காட்சியப் படங்களாக மாட்டி வைத்தே
ஏடுகளில் படிக்கின்ற நிலையி லின்றி
ஏழிலான இயற்கையினைக் காப்ப தற்கும்
வாடுவோரைக் கண்டுமனம் இரங்கு தற்கும்
வயல்வெளிகள் ஏரிகுளம் காற்றைக் காத்தே
பாடுபட்டு வாழ்வதற்கும் பண்பொ ழுக்கைப்
பயிற்றுவிப்போம் இளைஞர்க்குக்கடமை என்றே !

**பாவலர் கருமலைத்தமிழாழன்**

## சத்தியமே இலட்சியம்!

உண்மைத் தன்மை
யேசத்தியம் உள்ளத்தில்
உருவாகும் சத்தியம்!
எண்ணம் அடிப்படையே
சத்தியம்!
ஏற்றம் நலமாகும்
சத்தியம்!

நல்ல நடத்தையே
சத்தியம் நாவில் உருவாகும்
சத்தியம்! சொல்லும்
மெய்யன்றோ சத்தியம்
செயலின் ஒழுங்கன்றோ
சத்தியம்!

வாக்கைக் காப்பாற்றல்
சத்தியம்
மாறாத்தன்மைதானே
சத்தியம்! தேக்கும்
இன்பத்தைச்சத்தியம்
தெளிவான இதயந்தான்
சத்தியம்!

மெய்யை உறுதியாக்கும்
சத்தியம் மேன்மை
கொண்டதன்றோ சத்தியம்



பொய்யின்
எதிர்மறையே
சத்தியம்
பொலிவு
நிறைந்ததுவே
சத்தியம்!

**முனைவர்**
**இராம.வேதநாயகம்**
திருவண்ணாமலை.

## ஊதாக்கண்ணீர்

அம்மா உன் பிரிவால்
என் கண்களில் வடிந்தது !
"இரத்தக்கண்ணீர்"

அம்மா என் கண்ணீரின் ஈரம்
என் சட்டைப்பையிலுள்ள
"பேனா"வை நனைத்தது !

அம்மா அப்போது என்
பேனாவும் கண்ணீர்
வடித்தது! அதான்
இந்த"வரிகள்"(மை)
ஊதாக்கண்ணீர்?

அம்மா உன் "கருவறையில்"
ஐம்பூதங்களின்
உணர்வுகளைக் கொடுத்து
சுமந்தாய்! "பத்துத்திங்கள் "

அம்மா இப்போது
ஐம்பூதங்களோடு நான்
வாழ்கிறேன் !

ஆனால் நீ இருப்பதோ
"கல்லறையில்"



அம்மா நீ
மீண்டும்
என்னைச்
சுமக்க! நான்
காத்திருக்க
வேண்டுமோ !
"எத்தனைத்திங்கள்"

**G.A.கோவிந்தராஜ்**
**(எ)சுரேஷ்குமார்**
திருப்புவனம் புதூர்


just499®
MLM SOFTWARE
All Types of MLM Software Solutions Available
Binary
Unilevel
Matrix
Board
Generation
ROI / Investment
ONLY
Rs. 499
Website:
just499.com
Phone/WhatsApp:
7789951009
Email:
orderjust499@gmail.com


WE'RE
HIRING!
A Passionate
Content Creator
94386 10756


CREATE YOUR
PROFILE
WITH US
& SCALE YOUR CAREER
SEND YOUR CV AT -
MKPLACEMENT@GMAIL.COM
FIND AMAZING JOB OPPORTUNITIES WITH US!!


6380139263
9952007563
9940010279
GERMANSILVER.RR
RATNARAJSILVER.COM
RAJ&RAJ
GERMANSILVER /
POOJA ITEMS RETURNGIFTS/
WEDDING GIFTS /HOME NEEDS



சம்பிரதாய தாம்பூல பாக்கு!
பூஜைக்கு உகந்த பாக்கு
AJANTHA
TRADITIONAL THAMBULA BETEL NUTS
அஜந்தா
பாக்கு
அனைவருக்கும்
தீபாவளி
நல்வாழ்த்துகள்!
అజంతా
அஜந்தா
பாக்குடன்
உங்கள்
தீபாவளியை
கொண்டாடுங்கள்!
RAVIKUMAR AND COMPANY


ஸ்ரீ கிருஷ்ணர்
உபாசகர் பரிகார புகழ்
ஆன்மிக செம்மல் த.பிரகாஷ்
CONTACT US
9597887308, 6380453463
EXPERT IN VEDIC ASTROLOGY
PREDICTION & SOLUTIONS
MONEY
LOVE
HEALTH
FAMILY
BUSINESS
CAREER
MARRIAGE


ST COURIER
The People's Choice
ISO 9001:2008 Certifed
DOMESTIC- INTERNATIONAL
Old No. 1/2, New No.3, Kesavan St.,
Tondiarpet, Chennai-600081.
Cell: 9176130601


Get Free Jobs Alert on Your
WhatsApp
Register Yourself on our
8122664699
WhatsApp Your Name, Age & Address
on Above Number
Josh Jobs Team Give u Daily Update of
Govt. as Well as Private Jobs


S.R
Call Drivers
Travels
24 Hours
Man Power & All Vehicle Available
Prop. S.SRIRAM
Contact: 95513 81576 / 86086 22056
True Work is Our Capital
No.89/49,E.H.Road,Cornation Nagar,K.Pet,Ch-21.


FINDING THE PERFECT HOUSE YOU CAN CALL HOME
PREMA ENTERPRISES
DO YOU WANT TO
BUY
OR
SELL
PROPERTY OR LAND?
+91 9884417843


ARG CONSTRUCTIONS
ARG
We Build Your
DREAM
HOME
Recently We Have Completed
Over 50+ Big Projects
SERVICES WE OFFER
Residential Construction
Commercial Construction
Customer Satisfaction
Contact Us
9710348377


Just 499
Visite Our Website
JUST499.COM
All type Of your
Website/App need
at one place
Small
Business
website
E - commerce
Website
Corporate
Website
Enterprise
website
Mobile App
Development
contact us at
9337501889


Euro Kids
Pre-School
Right Start, Flying Start!
Tondiarpet
9940661625
Introducing
HEUREKA
THE VISIBLE THINKING CURRICULUM
based on Harvard's Project Zero
Admissions Open
for AY 25-26
EuroTots | PlayGroup | Nursery | EuroJunior | EuroSenior
23+ Years of
Experience
TUV Nord
Safety Certified
1,600+
Pre-schools
No. 19/20, Kummalamman Koil Street, Tondiarpet, Chennai - 600 081


999 SITE
ARE YOU
LOOKING FOR JOB
JOB
Websites
CONTACT/WHATSAPP-7789951009


உலகளவில் தமிழர்கள் எதிர்பார்க்கும்
ஒரே தரமான நம்பர் 1 இ பேப்பர்
தமிழ்நாடு
இ பேப்பர்.காம்
www.tamilnaduepaper.com
உள்ளூர் செய்திகள் முதல்
வெளிநாட்டு செய்திகள் வரை
துல்லியமாக தரும்
ஒரே நாளிதழ்
ஆனந்த
பாஸ்கர்
www.anandabhaskar.com
தினம் தோறும்
உள்ளூர், உலக செய்திகள் வரை
தரும் தரமான
நாளிதழ்
பேப்பர்பாய்
www.paperboy.biz


ADVERTISE
WITH US
CONTACT US
9438610756


Call- 9438610756, 9337501889
News Portal Website Development
Only
Rs. 499/-
Just 499
www.just499.com

ANY MLM PLAN
INR PLAN
RS.20000
CRYPTO PLAN
RS.30000
NO HIDDEN OR EXTRA CHARGES
SOURCE CODE AVAILABLE
CALL 9853719337 / 7436914247

We Are Urgently Hiring!
Marketing Manager
Ad Sales (Print Media)
Package Rs. 4.8 LPA
Company : PADMA DIGITAL BROADCAST PRIVATE LTD
Location : Chennai
Padma Digital a leading name in print media, is looking for a Marketing Manager – Ad Sales to join our dynamic team.
Key responsibilities for Marketing Manager
• Minimum 5 years of experience in print media ad sales
• Proven experience in space selling
• Strong background in field sales and client acquisition
• Excellent communication and negotiation skills
• If you're a results-driven professional with a passion for media sales, we want to hear from you
If you are interested
Do send your resume and portfolio to
padmamediapublications@gmail.com
Call: 9337501889

SATHLOKHAR
SYNERGYS E&C GLOBAL LIMITED
Enduring Relationships
EPC & Infra Turnkey Contractors
CIVIL | PEB | MEP | INTERIORS | SOLAR
NSE Listed Company
We are looking for enthusiastic and self driven Engineers to join our growing team.
Vacancies
Civil | PEB | MEP Engineers
Qualification
Diploma or BE in Civil, Mechanical & EEE, Any degree / +2 passed
Experience
only 0 to 3 years
Apply Now
hr@sathlokhar.com
Contact: 98408 96529
Build your career with a company committed to construction engineering excellence.

Follow our WhatsApp Channel
Scan this QR code using the CAMERA to view or follow our Channel
PADMA DIGITAL BROADCAST
Tamilnadu Epaper
WhatsApp channel

WANTED
Job 1-SALES ENGINEER
Required Experience:
05-07 years in selling Acrylic Laminates (Decorative for Interiors) in Tamil Nadu
Job 1-SALES ENGINEER
Required Experience:
05-07 years in selling Metal Roofing for PEB Building in Tamil Nadu
ALP AEROFLEX INDIA PVT. LTD.
Contact details for Tamilnadu Location
Cell: 9884083322
Email: hari@alpoverseas.com

Vilambaram
WE HELP YOU TO BOOST YOUR BUSINESS
VISIT:VILAMBARAM.COM CONTACT: 8122798599

Just499
TOURS & TRAVELS WEBSITE
We Provide Complete Tours & Travels Website Solution
ONLY Rs. 499
Website: just499.com
Phone: 7789951009
WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com

தனியார் வாகன உதிரிபாகங்கள் உற்பத்தி செய்யும் நிறுவனத்தில் பணிபுரிய ஆட்கள் தேவை.
Quality Line Inspector
Fresher/Exp Male Only
Qualification - ITI/Diplomo/B.E
Final Quality Inspector
Fresher / Exp - Male/Female
Qualification: 10th/ 12th/ ITI
VMC Machine operator
Fresher/ EXP Male only
Qualif: 10th/12th/ITI/Diploma
Mr Prakesh : 8939 940 090
Mr.Neelavanan : 9884 001 253
SALARY BASED ON EXPERIENCE

Wanted REPORTERS
சட்டமன்ற தொகுதி வாரியாக நிருபர்கள் தேவை
PRGI No. TNBIL/25/A1564
வைகறையில் பேப்பர்பாய்
www.paperboy.biz vaigaraiyilpaperboy@gmail.com
8122664699

TAMIL TELECALLER JOB FOR
WORK FROM HOME
ALL OVER TAMILNADU
APPLY NOW
7789951009
PRINT MEDIA, DIGITAL MEDIA SOCIAL MEDIA
DAILY & MONTHLY SALARY
SALARY STARING FROM
Rs. 10000/- onwards
Whatsapp: 7789951009

UNIVERSAL ENGINEERS CHENNAI PVT LTD
உடனடி வேலை வாய்ப்பு திங்கள் முதல் வெள்ளி வரை காலை 10.00 மணிமுதல் மாலை 3.00 மணிவரை நேரில் வரவும்
அலுமினிய வெல்டர் - 5 நபர்கள்
டிக் (TIG) வெல்டர் - 5 நபர்கள்
ஹெல்பர்கள் - 25 நபர்கள்
பெண்டிங் மிஷின் ஆப்பரேட்டர்
Press Brake,Laser ஆப்பரேட்டர்
Turret ஆப்பரேட்டர்
5 - 6 வருடம் அனுபவம் உள்ளவர்கள் தேவை.
No. 72, North Phase, Ambattur Industrial Estate,Chennai - 600098
hr.executive@universalengineers.in
Ph: 8925928971

அருள்மிகு ஸ்ரீ மாலையம்மன் சமேத அருள்மிகு சுப்பிரமணியர் துணை
அருள்மிகு திருச்செந்தூர் முருகர் துணை
ஸ்ரீ ஹரி ஜோதிட மையம்
ஜாதகம், திருமணப் பொருத்தம், ஜாமக்கோள் , ஆரூடம் பார்க்கப்படும்.
தாம்பூல பிரசன்னம் , சோழி பிரசன்னம், அஷ்ட மங்கல பிரசன்னம்
மேலும் திருமணம், புத்திர பாக்கியம், கல்வி, தொழில் ஆகியவற்றில் ஏற்பட்ட தடைகளுக்கு ஜோதிடரீதியான தீர்வு செய்யப்படும்.
ஜோதிட நிபுணர் இராஜபாளையம் இராமமூர்த்தி MA Astro
81899 08040 / 93425 03572
harisudhan1968@gmail.com

முனிவர் துணை
கங்கோத்ரி எண்டர்பிரைசஸ்-ன்
BI NEW TEACHERS COLONY
பொன்னேரி அருகில் பழவேற்காட்டில்
RERA APPROVED
மனைகள் வழங்கப்படுகிறது.

GANGOTHARI ENTERPRISES
RG Rajendra Prasath
Proprietor
கங்கோதரி எண்டர்பிரைசஸ்
Buying & Selling
வீடு, மனை, வாங்க, விற்க இங்கு அணுகவும்.
97103 48377, 89254 08203
gangotharienterprises2018@gmail.com
No. 18, Dr. Radhakrishna Salai, Vivekananda Nagar, Kodungaiyur, Chennai-600 118.

Sri Manjal Mart
தரமான ஆன்மீக பூஜை பொருள்களை குறைந்த விலையில் நிறைவாக வாங்க
20% OFF
www.manjalmart.com
7789951009
order@manjalmart.com

ADVERTISE WITH US!
CONTACT US
9337501889

THINKING to BUY / SELL / RENT a PROPERTY
New / Resale... Residential / Commercial...
* Plots
* Flats
* House
* Villa
* Bungalows
* Farm Land
* Ware Houses
* Factory Sites
* Sheds
JOINT VENTURES INVITED
MK REAL ESTATE
Tell me your Budget => We Show Your Home
Call:7871617005

Just499
Pick Any Website
Just ₹499 Only!
Affordable Website Solutions for Every Business
Matrimonial Website | Real Estate Website | E. Commerce Website
Restaurant Website | Shopping Website | News Website
MLM Binary Website | MLM Level Website | MLM Gaming Website
Call: 7789951009 | WhatsApp: 7789951009

WE'RE HIRING
TELECALLERS
SALARY STARTING FROM RS.20000/- ONWARDS
+91 7871617005

Vilambaram
www.vilambaram.com
WE ARE Digital Marketing Agency
We are the LEADS GENERATION FACTORY
For Your REAL ESTATE BUSINESS
* Business Lead
* 100% Verified Lead
* Targeted Lead
GROW YOUR BUSINESS WITH US
for more details
+91 7789941009
+91 9337501889
vilambarampage@gmail.com
80 % OFF SPECIAL OFFER DISCOUNT
90 DAYS MONEY BACK GUARANTEE

just499
REAL ESTATE SOFTWARE
We Provide Complete Real Estate Software Solutions
ONLY Rs. 499
Website: just499.com
Phone: 7789951009
WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com

Just499
JOB WEBSITE SOFTWARE
We Provide Complete Job Portal Software Solution
ONLY Rs. 499
Website: just499.com
Phone: 7789951009
WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com

GREAT OPPORTUNITY AT ALL OVER TAMILNADU
Marketing Executive
SALARY Rs.15000/-
+ Incentive
+ Petrol Allowance
vilambarampage@gmail.com
7789941009

Telecaller Job
Apply Today
Mobile Calling !!!!
Rs 250-Rs500 per day
Work From Home Jobs
Rs 8000 - Rs 15000 per month
Ananda Bhaskar
9337501889
7789941009

WANTED
experienced candidates in
AUTO CAD
Chennai / Coimbatore
minimum 3 years experience
Cell: 9363084990

WANTED MALE/FEMALE
SALES ASSISTANT
PREFERABLE IN & AROUND ALANDUR
9962258000
Since 1953 SLJ
Sri Lakshmi Jewellery
ALANDUR, CHENNAI - 16.

WANTED
EXECUTIVES
Age Limit 40 Years
For Chennai, Tiruvallur, Chengalpattu
Attractive Salary Package, PF, ESI & Bonus with Allowances
999 BRAND
+91 893 999 7476
Email: 999lungies@kasz.in

WANTED
MARKETING HEAD
REAL ESTATE
Fixed Salary Rs.25000/- & Above + INCENTIVE
(Monthly up to - 1.5 Lakhs)
Age: 25 to 40 Experienced Only
Office @ Anna Nagar
9790021367

WANTED
COLLECTION EXECUTIVES
TELECALLERS
FOR MNC BANK.
Sal.23,000/-
161, Bells Road, Chennai - 05.
Ct.: 98410 38488 / 93848 17349


ஐஸ் கடை
வேலைக்கு ஆட்கள் தேவை (பெண்கள்)
10.00 - 7.00 மணி வரை
சௌகார்பேட்டை
9829571998

REQUIRED
Bank & Finance
LOAN CONSULTANCY
TELECALLER (F)
Age Below 30 | Fresh/Exp 2Yrs
Qual: +2 or Any Degree
Sal: 12 to 18K + Inc
West CIT Nagar, T.Nagar-35.
ct: 97907 88886

WANTED
Experienced candidate for Office Manager position.
Good salary offered.
Contact: 87544 55567
Email: requires2025@gmail.com



# பல்சுவை களஞ்சியம்




# சுதந்திர போராட்டம் பற்றிய அரிய தகவல்

1.மகாத்மா காந்தி தென்னாப்பிரிக்காவில் இருந்து மும்பை வந்தடைந்த நாள் ?
09-01-1915

2.விடுதலைப் போராட்டத்தின் ஒரு பகுதியாக காந்தியடிகள் சட்ட மறுப்பு இயக்கம் தொடங்கிய நாள்?
12.03.1930

3.சட்ட மறுப்பு இயக்கத்தின் தொடக்கமாக காந்தியடிகள் மேற்கொண்ட போராட்டம் எது?
உப்பு சத்தியாக்கிரகம்
(அ) தண்டி யாத்திரை

4.மாகத்மா காந்தி தனது போராட்டங்களில் சத்தியாகிரகம் என்ற தத்துவத்தை முறையாக அறிமுகப்படுத்திய நாடும் நாளும் எது? தென் ஆப்ரிக்கா, 11-09-1906

5.இந்திய அரசியல் நிர்ணய சபை முதன்முதலில் கூடிய நாள் எது?
09-12-1946

6.டாக்டர் அம்பேத்கர் தலைமையிலான இந்திய அரசியல் சாசன வரைவுக்குழு உருவாக்கிய அரசியல் சாசனத்தை தனது அழகிய கையெழுத்தால் எழுதியவர் யார்?
பிரேம் பெஹாரி நரேன் ரைஜடா

7."செய் அல்லது செத்து மடி" என்ற மாகத்மா காந்தியின் முழக்கம் இடம் பெற்ற இயக்கத்தின் பெயர் யாது?
வெள்ளையனே வெளியேறு இயக்கம்.

8.இந்திய தேசிய கோடியின் மைய பகுதியில் அமைந்துள்ள அசோக சக்கரம் எந்த நினைவு சின்னத்தில் இருந்து எடுக்கப்பட்டது?
சாரநாத்தில் உள்ள அசோகத்தூண்.



9.1931 ஆம் ஆண்டு காங்கிரஸ் கட்சியால் அமைக்கப்பட்ட கொடிக்குழுவின் தலைவர் யார்?
சர்தார் வல்லபாய் படேல்.

10.வட்டமேசை மாநாடுகள் எந்த அறிக்கை அடிப்படையில் நடைபெற்றது?
சைமன் குழு அறிக்கை

11."ஜெய்ஹிந்த்" என்ற முழக்கத்தை இந்திய விடுதலை வேள்வியில் முதன்முதலில் பயன்படுத்தியவர் யார்?
செண்பகராமன்

12.காந்தியடிகள், 1921 ஆம் ஆண்டு தமிழகத்தில் தனது உடை பழக்கத்தை அரை ஆடை நடைமுறைக்கு மாற்றிக்கொண்ட இடமும், நாளும் எது?
மதுரை, செப்டம்பர் 22

13.நாட்டின் விடுதலைக்கு முன்னர் இரட்டை ஆட்சி முறை எந்த அறிக்கையின் அடிப்படையில் அறிமுகப்படுத்தப்பட்டது?
மாண்டேகு செம்ஸ்ஃபோட் அறிக்கை

14.1922ல் மாகத்மா காந்தி, ஒத்துழையாமை இயக்கத்தை திரும்பப் பெற காரணமாக இருந்த நிகழ்வு எது?
சௌரி சௌரா நிகழ்வு

15.1927 ல் சைமன் குழுவை புறக்கணிப்பதென்று தீர்மானம் நிறைவேற்றப்பட்ட காங்கிரஸ் மாநாடு நடைபெற்ற இடம் எது?
சென்னை

16.உப்பு சத்தியாக்கிரகம் தமிழகத்தில் தொடங்கிய மற்றும் நிறைவடைந்த இடங்கள் யாவை?
திருச்சி முதல் வேதாரண்யம் வரை

17.பூரண சுதந்திரத்தை வலியுறுத்தி தீர்மானம் நிறைவேற்றப்பட்ட காங்கிரஸ் மாநாடு நடைபெற்ற இடமும் ஆண்டும் எது? லாகூர், 1929

18.1857 முதலாம் இந்திய சுதந்திர போராட்டத்தின் போது கவர்னர் ஜெனரலாக இருந்தவர் யார்?
சார்லஸ் ஜான் கானிங் பிரபு

19.இந்திய அரசியல் நிர்ணய சபையில் அரசியல் சாசனம் நிறைவேறிய நாள் எது? 26 -11 -1949

20.1946 ஆம் ஆண்டு அரசியல் நிர்ணய சபை உருவாக்கப்பட்ட நாள் எது?
டிசம்பர் 6

21.டாக்டர் B.R. அம்பேத்கர் தலைமையிலான அரசியல் சாசன வரைவு குழுவில் இடம்பெற்றிருந்த தமிழகத்தைச் சேர்ந்த உறுப்பினர்களில் இருவர் பெயரை கூறவும்.
அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர் & N. கோபாலசுவாமி ஐயங்கார்.

22.இந்திய அரசு சட்டம் 1919ன் வாயிலாக மதராஸ் மாகாண சட்டசபை தொற்றுவிக்கப்பட்டு முதலாவதாக கூடிய நாள் எது?
09.01.1921

23.இந்திய அரசியல் சாசனம் ஏற்றுக்கொள்ளப்பட்டபோது அதிலிருந்த மொத்த பிரிவுகள் எத்தனை?
395 பிரிவுகள்

24.சுதந்திர இந்தியாவின் முதலாவது நாடாளுமன்ற பொதுத்தேர்தல் என்று முதல் என்று வரை நடைபெற்றது?
25.10.1951 முதல் 21.02.1952 வரை.

25.இந்திய அரசியல் நிர்ணய சபையால், நாடாளுமன்றத்தின் செயல்பாடுகள் பற்றி ஆராய அமைக்கப்பட்ட குழுவின் தலைவர் யார்?
G.V.மாவ்லங்கார்.

- T.P.குமரன்,
முகவரி: மகர்நோம்புச்சாவடி,
தஞ்சாவூர் - 613001.

# மீம்ஸ்







# தேசிய பெண் குழந்தைகள் தினம்

பெண் குழந்தைகளின் உரிமைகள் பற்றிய விழிப்புணர்வை ஊக்குவிக்கவும், பாலின வேறுபாடுகளை அகற்றவும் ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி மாதம் 24ஆம் நாள் இந்தியாவில் தேசிய பெண் குழந்தைகள் தினம் கொண்டாடப்படுகிறது.

#இந்திய சமூகத்தில் பெண்கள் எதிர்கொள்ளும் ஏற்றத்தாழ்வுகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக 2008 ஆம் ஆண்டு பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகத்தால் தேசிய பெண் குழந்தைகள் தினம் தொடங்கப்பட்டது.

#பெண் குழந்தைகளுக்கான கல்வி, சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்தை மேம்படுத்துவதையும், அவர்களின் அடிப்படை உரிமைகளை நிலைநிறுத்தவும், மதிக்கவும் மக்களை ஊக்குவிப்பதையும் இந்த நாள் நோக்கமாகக் கொண்டுள்ளது.

#பெண் மாணவர்களுக்கு பிரகதி உதவித்தொகை, பேகம் ஹஸ்ரத் மஹால் தேசிய உதவித்தொகை மற்றும் ஒற்றைப் பெண் குழந்தைகளுக்கான முதுகலை இந்திரா



காந்தி உதவித்தொகை உட்பட பல்வேறு உதவித்தொகைகளை மத்திய அரசு வழங்குகிறது.


#இந்தியாவின் இளம் மக்கள்தொகையில் இன்றியமையாத அங்கமாக இருக்கும் பெண் குழந்தைகளுக்கு கல்வி மற்றும் அதிகாரம் அளிப்பதன் முக்கியத்துவத்தை இந்த நாள் எடுத்துக்காட்டுகிறது.

#சமூக அநீதிகளுக்கு எதிராக போராடிய மற்றும் பெண் கல்வியை ஊக்குவித்த பெண் சீர்திருத்தவாதிகளான சாவித்ரிபாய் ஃபுலே, பாத்திமா ஷேக் மற்றும் சந்திரபிரபா சைகியானி ஆகியோரை கவுரவிக்கும் விதமாகவும் தேசிய பெண் குழந்தைகள் தினம் கொண்டாடப்படுகிறது.




# விடுகதை

| | |
|---|---|
| ஒரு குற்றத்தை செய்ய முயற்சித்தால் தண்டனை உண்டு, ஆனால் குற்றத்தை செய்தால் தண்டிக்க முடியாது, அக் குற்றம் என்ன? | தற்கொலை |
| எப்போதும் காதருகில் ரகசியம் பேசிக் கொண்டிருப்பவள், அவள் யார்? | செல்போன் |
| ஓவென்று உயர்ந்த மலை, நடுவே உடன் பிறப்பு இருவர் ! ஒருவரை மற்றவர் பார்ப்பதுமில்லை; பேசுவதும் இல்லை. அவர்கள் யார்? | கண், மூக்கு. |



# ஜோக்ஸ்



**தத்துவம்**

ஏழு பரம்பரைக்கு உட்கார்ந்து சாப்பிடுற அளவுக்கு சொத்து இருந்தாலும் பாஸ்ட் புட்க்கு போனா நின்று தான் சாப்பிடணும்.

-------------------------

**தோழிகள் இருவர் பேசிக் கொள்கிறார்கள்**

ராதா: நேத்து உன் லவ்வரை பார்க்க கூஷநநஉh-க்கு போறதா சொன்னியே! என்ன ஆச்சு?

கீதா: அட! அத ஏண்டி கேக்குறா? வாத்தியாரை லவ் பண்ணது தப்பா போச்சு!

ராதா: ஏன்! என்ன ஆச்சு?

கீதா: கொஞ்ச நேரம் லேட்டா போனேன். அதுக்காக படகு மேல ஏறி நிற்க சொல்லிட்டாருடி!

ராதா: ஹா! ஹா! ஹா!

-------------------------

**முத்தம்**

கணவன்: டார்லிங்! நான் இந்த மாச சம்பளத்துக்கு பதிலா 500 முத்தம் தரலாம்-னு நினைக்கிறேன். என்ன டிம தானே?

மனைவி: எனக்கொன்னும் பிரச்சினை இல்லை. நானும் அப்படியே கேபிள் காரனுக்கு 30 முத்தம், பால்காரனுக்கு 50 முத்தம், பேப்பர் காரனுக்கு 20 முத்தம், மளிகை கடைகாரனுக்கு 150 முத்தம். அவுஸ் ஓனருக்கு 250 முத்தம் கொடுத்துடுறேன் என்ன? ஓ.கே. தானே?

கணவன்: ???

-------------------------

**தொலைக்காட்சி விளம்பரம்**

வரும் சனிக்கிழமை இரவு பத்து மணிக்கு... உங்கள் அபிமான தொலைக்காட்சியில்... அற்புதமான ஹாலிவுட் திரைப்படம்... தமிழில்

சிலந்தி அண்ணாச்சி (Spiderman)

உங்களின் விடுமுறை நாளை குதூகலமாக கொண்டாட ஞாயிற்றுகிழமை மதியம் 2 மணிக்கு

சூப்பர்ஹிட் ஹாலிவுட் திரைப்படம்

"அம்மாச்சி திரும்ப வந்தாச்சு" (Mummy Returns)

முற்றிலும் தமிழில்... காணத்தவறாதீர்கள்!!!

# வாழ்வு தரும் ஆரோக்கியம்



## அட்டகாசமான ஆலப்புழா மீன் குழம்பு! அடிபொலி சுவை!



கேரள மாநிலத்தின் ஆலப்புழா அதாவது அலப்பி நகரம் என்றால் நம் நினைவுக்கு வருவது அதன் எழில் கொஞ்சும் படகு வீடுகளும், கால்வாய்களும்தான். ஆனால், அங்கே கிடைக்கும் மீன் உணவுகளின் சுவையோ, அந்த இயற்கையின் அழகை விட ஒரு படி மேலானது. குறிப்பாக, தேங்காய் பாலில் தயாரிக்கப்படும் ஆலப்புழா மீன் குழம்பு அதன் தனித்துவமான சுவைக்காகவே மிகவும் புகழ் பெற்றது. ஆப்பம், சாதம், இடியாப்பம் என எதனுடன் சேர்த்து சாப்பிட்டாலும் தனித்துவமான ருசி கொண்ட இந்த குழம்பு ரெசிபியை செஃப் கதிர்வேல் நமக்காக செய்து காட்டியுள்ளார். அந்த வகையில் இந்த தொகுப்பில் 'ஆலப்புழா மீன் குழம்பு' ரெசிபியை எப்படி செய்வது என விரிவாக காணலாம்.

* ஒரு கடாயில் தேங்காய் எண்ணெயை ஊற்றி சூடாக்கவும்.
* எண்ணெய் சூடானதும், நறுக்கிய வெங்காயம், இஞ்சி, பச்சை மிளகாய் ஆகியவற்றைச் சேர்த்து சிறிது நேரம் வதக்கவும்.
* அடுப்பை சிம்மில் வைத்து, சிவப்பு மிளகாய் தூள் மற்றும் மஞ்சள் தூள் சேர்த்து, மசாலாவின் பச்சை வாசனை போகும் வரை ஒரு நிமிடம் வதக்கவும். (மிளகாய் தூள் கருகிவிடாமல் பார்த்துக்கொள்ளவும்.)
* பிறகு நறுக்கிய மாங்காய் துண்டுகள் மற்றும் தேவையான உப்பு சேர்த்து, சிறிது வதக்கிய பின், சுத்தம் செய்த மீன் துண்டுகளை மெதுவாகச் சேர்க்கவும்.(எலுமிச்சை சாறு, சிறிதளவு உப்பு சேர்த்து சுத்தம் செய்த மீன்).
* மீன் மற்றும் மாங்காயை வேகவைக்க தேவையான தண்ணீரை ஊற்றி, குழம்பு கொதிக்க ஆரம்பித்ததும், அடுப்பை மிதமான தீயில் வைத்து, மீன் 10 நிமிடங்கள் வேகும்வரை மூடி வைக்கவும்.
* மீன் வெந்த பிறகு, அடுப்பை முற்றிலுமாக அணைத்துவிடமால் மிக மிகக் குறைந்த தீயில் வைத்து, திக்கான தேங்காய் பாலை சேர்க்கவும்.
* தேங்காய் பால் சேர்த்த பின் அதிகம் கொதிக்க விடக்கூடாது (அதிக நேரம் கொதித்தால் குழம்பு திரிந்து போக வாய்ப்புள்ளது). சுவையை சரி பார்த்து, உடனடியாக மூடி வைக்கவும்.
* இப்போது அட்டகாசமான ஆலப்புழா மீன் குழம்பு தயார்!

## தவலைஅடை செய்யலாமா

தேவையான பொருட்கள் :புழுங்கல் அரிசி துவரை அல்லது துவரம் பருப்பு கடலைப்பருப்பு உளுத்தம் பருப்பு மிளகாய் கடுகு சிறிது எண்ணெய் கருவேப்பிலை பெருங்காயத்தூள் சிறிதளவு



செய்முறை :அரிசி ஒரு கப் ,துவரை அல்லது துவரம் பருப்பு அரை கப், கடலைப்பருப்புஅரைகப் ,உளுத்தம் பருப்புஅரை கப், எடுத்து தண்ணீரில் 2 மணி நேரம் ஊற வைக்க வேண்டும் தனித்தனியாகஊற வைக்க வேண்டும் பிறகு நன்றாக கழுவி மிக்ஸியில் சிறிது கெட்டியான அளவிற்கு மாவாக அரைத்துக் கொள்ள வேண்டும் வாணலியில் தாளிப்பதற்கு சிறிது எண்ணெயை ஊற்றி கடுகு நான்கு மிளகாய் கொஞ்சம் கருவேப்பிலை போட்டு தாளிக்கவும் சிறிது பெருங்காயத் தூளை போட்டு அரைத்து வைத்த மாவில் கொட்டவும் தேவையான அளவு உப்பு சேர்த்துநன்கு கலக்கவும் பிறகு கனமாக இருக்கக்கூடிய வாணலி அல்லது வெண்கலப் பானை எடுத்து அதில் கொஞ்சம் என்னை ஊற்றி மாவை அதில் கரண்டியால் ஊற்றவும் பிறகு மேலே தட்டை போட்டு மூடி வைக்கவும் தீயை மிதமான சூட்டில் வைக்கும் சிறிது நேரம் கழித்து மூடியை எடுத்து அடையை திருப்பி போடவும் மொறு மொறு என்று தவலை அடை ரெடி அதற்கு தேங்காய் சட்டினி அல்லது நாட்டுச் சர்க்கரை சேர்த்து பரிமாறலாம்குழந்தைகளும் விரும்பி சாப்பிடுவார்கள்
நன்றி

எம்.எல்.பிரபா
ஆதம்பாக்கம் சென்னை.

## மண்ணின் பொக்கிஷம் "பருப்பு கீரை"

நாம் தினந்தோறும் அன்றாட வேலைகளை செய்ய நம்மை சுறுசுறுப்பாகவும், புத்துணர்வோடும் வைப்பதற்கு நம் உடலில் உள்ள சத்துகளின் நிலை முக்கிய பங்கு வகிக்கிறது.

அந்த வகையில், நம் உடலில் சத்து குறைபாடு ஏற்படுவதை தடுக்க நாம் உண்ணும் உணவில் தினமும் காய்கறிகளுடன் கீரை சேர்த்துக் கொள்வது மிகவும் அவசியம்.

ஆம்.. அப்படி கீரைகளில் அதிக சத்து உள்ள பருப்பு கீரை பற்றி தான் இன்று பார்க்கப் போகிறோம்..!

கிராமங்களில் சாதாரணமாக வீட்டைச்சுற்றி பருப்பு கீரை வளர்ந்து கிடப்பதை பார்க்கலாம். இதற்கு கங்கா வள்ளி என்ற பெயரும் உண்டு. ஏராளமான சத்துக்கள் இந்த கீரையில் உள்ளன.

இதய ஆரோக்கியத்தை பாதுகாக்கும் ஒமேகா-3



சத்தானது பருப்பு கீரையில் ஏராளம். குழந்தைகளின் மூளை வளர்ச்சிக்கு ஒமேகா-3 தேவை. இது, ஆட்டிசம் போன்ற வளர்ச்சி குறைபாடுகளை தடுக்க உதவுகிறது. இது உடலில் இருக்கும் கெட்ட கொழுப்பை குறைப்பதுடன், இதயத்தை சுற்றி படியும் கொழுப்பையும் தடுக்கிறது.

வைட்டமின்-ஏ சத்தும் இருப்பதால் தோல் எப்போதும் பொலிவுடன் இருக்கவும், சருமம் தொடர்பான பிரச்சினைகளை குணப்படுத்தவும், கண் பார்வை தெளிவாக இருக்கவும் இந்த கீரை உதவுகிறது.

வைட்டமின்-சி, இரும்புச்சத்து, மக்னீசியம், பொட்டாசியம் போன்ற முக்கிய சத்துக்கள் நிறைந்துள்ளன. இந்த கீரையில் நார்ச்சத்து அதிகம் உள்ளதால் மலச்சிக்கல் தீரும். உடல் எடையை குறைக்கும் மற்றும் குடல் நோய்களை தடுக்கும் ஆற்றல் உள்ளது.

ஆஸ்டியோபோரோசிஸ், சொரியாசிஸ் போன்ற நோய்களுக்கு பருப்பு கீரை அருமருந்தாக உள்ளது, என்று நாட்டு மருத்துவ நூல்கள் கூறுகின்றன. எலும்புகள் மற்றும் தசைகளுக்கு வலிமை தரும் கால்சியமும் இந்த கீரையில் ஏராளம்.

உடல் எடையை குறைக்க விரும்புபவர்கள், நீண்ட நேரம் பசி உணர்வு இல்லாமல் தவிர்க்க இந்த கீரை உதவுகிறது. தமிழ்நாட்டில் சாதாரணமாக எங்கும் முளைத்து கிடக்கும் இந்த கீரை இந்த மண்ணின் பொக்கிஷம் என்றே உணவியல் நிபுணர்கள் கூறுகின்றனர்..!

## சருமத்தை பளபளப்பாக்க வீட்டுக்குள்ளேயே ஒரு பியூட்டி பார்லர்!

அழகு நிலையங்களுக்கு செல்ல இயலாதோர் பலரும் வீட்டில் உள்ள பொருட்களை வைத்தே தங்கள் சருமத்தை மெருகூட்ட நினைப்பார்கள். ஆனால் பலருக்கும் அவற்றை எப்படி பயன்படுத்த வேண்டும்? எந்த பொருளோடு சேர்த்து பயன்படுத்த வேண்டும்? என்பது தெரியாது. அவர்களுக்கான பதிவுதான் இது. நம் வீட்டில் இருக்கும் பொருட்களை எந்த அளவு, எதனோடு பயன்படுத்தினால் சருமத்தில் மாற்றம் நிகழும்? அதனுடைய விளைவுகள் என்ன? என்பதைப் பார்க்கலாம்.



**தேன், எலுமிச்சை**

ஒரு தேக்கரண்டி தேனில், இரண்டு அல்லது மூன்று சொட்டுகள் எலுமிச்சை சாறுவிட்டு, அதை நன்றாக கலந்து, அந்த கலவையை முகத்தில் தடவலாம். இதை நன்றாக முகம் மற்றும் கழுத்தில் தடவி 10 அல்லது 20 நிமிடங்கள் கழித்து முகத்தை கழுவுங்கள். முகத்தில் நல்ல பொலிவு உண்டாகும்.

**பக்கவிளைவுகள்:**

எலுமிச்சை சாறு சரும எரிச்சல், வறட்சி மற்றும் சூரிய ஒளிக்கு அதிக உணர்திறனை ஏற்படுத்தும். தேன் சிவத்தல் அல்லது அரிப்பையும் ஏற்படுத்தும். ஒவ்வாமை உள்ளவர்கள் ஆலோசனை செய்து பின்னர் பயன்படுத்தலாம்.

**கற்றாழை ஜெல்**

தினமும் முகத்திற்கு கற்றாழை பயன்படுத்தவும். இது சருமத்தை ஆற்றவும், எரிச்சலை குணப்படுத்தவும், சருமத்தை ஈரப்பதமாக்கவும் உதவும். முகத்தில் அதிகப்படியாக இருக்கும் எண்ணெய்ப்பசையை குறைக்கும்.

**பக்க விளைவுகள்:**

கற்றாழை முகத்திற்கு நல்லது. ஆனால் சிலருக்கு அரிப்பு, சிவத்தல் அல்லது எரியும் உணர்வு ஏற்பட வாய்ப்புகள் உள்ளன.

**மஞ்சள், தயிர்**

1 தேக்கரண்டி தயிரில் ஒரு சிட்டிகை மஞ்சள்தூள் இட்டு, அதனை நன்றாக பேஸ்ட் போல அரைத்து சாப்பிடவும். இது வீக்கத்தை குணப்படுத்தவும், பளபளப்பான மற்றும் தெளிவான சருமத்திற்கு உதவும். முகத்திற்கும் பயன்படுத்தலாம். பேஸ்ட்டை முகத்தில் தடவி 10-15 நிமிடங்கள் அப்படியே விடுங்கள். பின்னர் வெதுவெதுப்பான நீரில் முகத்தைக் கழுவுங்கள்.

**பக்க விளைவுகள்:**

அதிக மஞ்சள் பயன்பாடு சருமத்தில் வறட்சியை ஏற்படுத்தும். மேலும் எரிச்சல் மற்றும் சருமத்தில் நிறமாற்றத்தை ஏற்படுத்தும்.

உங்களது சருமத்திற்கு ஒவ்வாமையை ஏற்படுத்தாத பொருட்களை மட்டும் பயன்படுத்துங்கள்

**வெள்ளரிக்காய், ரோஸ் வாட்டர்**

1/2 வெள்ளரிக்காயை அரைத்து அதன் சாற்றை வடிகட்டி, ரோஸ் வாட்டருடன் கலக்கவேண்டும். இதனை வெள்ளை பருத்தி துணியால் எடுத்து முகத்தில் தடவலாம். அல்லது கைகளாலும் மெதுவாக தடவலாம். 10-15 நிமிடங்கள் அப்படியே விடுங்கள்.

**தேங்காய் எண்ணெய்**

உள்ளங்கையில் தேங்காய் எண்ணெய் ஊற்றி, முகம் மற்றும் கை, கால்களில் தடவி மசாஜ் செய்யுங்கள். தேங்காய் எண்ணெயில் உள்ள ஆக்ஸிஜனேற்ற பண்புகள் சரும சேதத்தை சரிசெய்யவும், இயற்கையான பளபளப்பை அதிகரிக்கவும் உதவும். முக வறட்சியை போக்கும்.

**பக்க விளைவுகள்:**

முகப்பரு உள்ளவர்கள் பயன்படுத்துவதை தவிர்க்கலாம். ஏனெனில் சருமத்துளைகளை அடைத்து முகப்பரு வெடிப்புக்கு தூண்டுகிறது.

**பப்பாளி, தேன்**

பழுத்த பப்பாளியை மசித்து, 1 டீஸ்பூன் தேன் சேர்க்கவும். இந்த பேஸ்ட்டை முகத்தில் கொஞ்சம் கொஞ்சமாக மெதுவாக தடவுங்கள். 10-15 நிமிடங்கள் அப்படியேவிட்டு, வெதுவெதுப்பான நீரில் முகத்தை கழுவுங்கள். பப்பாளியில் உள்ள நொதிகள் இறந்த சரும செல்களை நீக்கி, பளபளப்பான சருமத்திற்கு வழிவகுக்கும்.

## பளபளப்பான சருமத்திற்கான பழங்கள்!



பலரும் சருமத்தை பொலிவுடன் வைத்துக்கொள்ள பழங்கள் எடுத்துக்கொள்ள வேண்டும் என நினைப்போம். ஆனால் எந்தெந்த பழங்களை எடுத்துக்கொள்ள வேண்டும் என பெரிதாக தெரியாது. சரும பளபளப்புக்கு எப்போதும் வைட்டமின் சி மற்றும் ஆக்ஸிஜனேற்றிகள் நிறைந்த பழங்களை தேர்ந்தெடுப்பது நல்லப் பலனை தரும். சருமத்திற்கு ஊட்டமளிக்கும் பழங்கள் குறித்து காணலாம்.

**வாழைப்பழம்**

வாழைப்பழங்கள், வைட்டமின்கள் ஏ, பி மற்றும் ஈ ஆகியவற்றின் சிறந்த மூலமாகும். இவை சருமத்தின் ஈரப்பதத்தை பராமரிக்க உதவுகின்றன. வாழைப்பழத்தில் உள்ள பொட்டாசியம் வறண்ட சருமத்தை ஹைட்ரேட் செய்து புத்துயிர் பெறச் செய்கிறது. வாழைப்பழத்தில் உள்ள ஆக்ஸிஜனேற்றிகள் முன்கூட்டியே வயதாவதை எதிர்த்துப் போராடுகின்றன.

**பப்பாளி**

சருமத்தில் நன்மை பயக்கும் முக்கியப் பழம் பப்பாளி என பலரும் அறிவர். பப்பாளியில் உள்ள பப்பைன் நொதி, முகத்தில் உள்ள இறந்தசெல்களை அகற்ற உதவுகிறது. இது முகத்தை உள்ளிருந்து பிரகாசமாக்க உதவுகிறது. மேலும் பப்பாளியில் உள்ள வைட்டமின்கள் ஏ, சி மற்றும் ஈ சருமத்தை சேதமடையாமல் பாதுகாத்து ஊட்டமளிக்கின்றன.

**பெர்ரி**

ஸ்ட்ராபெர்ரி, ப்ளூபெர்ரி, ராஸ்பெர்ரி மற்றும் ப்ளாக்பெர்ரிகளில் ஆன்டிஆக்ஸிடன்ட்கள் நிறைந்துள்ளன. அவை உங்கள் சரும செல்களை சேதப்படுத்தும் ஃப்ரீ ரேடிக்கல்களை எதிர்த்துப் போராடுகின்றன. இந்த பழங்களில் வைட்டமின் சி அதிகமாக உள்ளது. இது கொலாஜன் உற்பத்திக்கு உதவுகிறது. இது உறுதியான மற்றும் இளமையான சருமத்திற்கு வழிவகுக்கிறது.

**ஆரஞ்சு**

ஆரஞ்சுகளில் வைட்டமின் சி நிறைந்துள்ளது. இது பளபளப்பான சருமத்திற்கு முக்கிய ஊட்டச்சத்து ஆகும். வைட்டமின் சி கொலாஜன் உற்பத்தியை அதிகரிக்கிறது. முக சுருக்கத்தை குறைக்கிறது. சூரிய ஒளியால் ஏற்படும் சேதத்தை எதிர்த்து போராடுகிறது.

**ஆப்பிள்**

ஆப்பிள்களில் வைட்டமின்கள் ஏ, பி மற்றும் சி, பொட்டாசியம் மற்றும் ஆக்ஸிஜனேற்றிகள் நிறைந்துள்ளன. இந்த ஊட்டச்சத்துகள் சருமத்திற்கு நீரேற்றத்தை அளிக்கும். சருமத்தின் இளமையான தோற்றத்தை பராமரிக்கவும் உதவும். மேலும் ஆப்பிளில் உள்ள நார்ச்சத்து நச்சு நீக்கியாக செயல்படுவதால் சருமத்திற்கு நன்மை பயக்கும்.

## தியானத்தில் இவ்வளவு நன்மைகளா...!

தியானம் பல நாடுகளில் பல்வேறு வடிவங்களில் பயிற்சியாக கற்று தரப்படுகிறது. இந்த தியானத்தால் ஒரு மனிதனின் உடலில் நல்ல மாற்றங்கள் ஏற்படுகின்றன என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். பல்வேறு நோய்களை போக்க தியானம் ஒரு சிறந்த வழி என்று மருத்துவர்கள் கூட பரிந்துரைக்கின்றனர்.

இது ஒரு புறம் இருக்க, ஒருவர் அல்லது ஒரு குழு செய்யும் தியானம் என்ன மாதிரியான விளைவுகளை சமூகத்தில் ஏற்படுத்துகிறது என்று ஆய்வு செய்ய அமெரிக்க ஆராய்ச்சியாளர்கள் முடிவு செய்தனர்.

ஆழ்நிலை தியானத்தில் பயிற்சி பெற்ற பலரை பல்வேறு நகரங்களில் குழுவாக தியானம் செய்ய வைத்தனர். பின்னர் இந்த தியான நிகழ்வு நடைபெற்ற நகரங்களில் அந்த தியான நிகழ்வுக்கு முன் பின் நடைபெற்ற சம்பவங்களை ஆய்வு செய்தனர். அதில், இந்த தியான நிகழ்வுக்கு பிறகு அந்த நகரங்களில் குற்றம், வன்முறை சம்பவங்கள், விபத்துகள், நோயாளிகள் எண்ணிக்கை குறைந்து காணப்பட்டது.


இது போன்ற மாற்றங்களுக்கு



காரணம் என்னவாக இருக்கும் என்று ஆராய்ச்சியாளர்கள் விவாதித்தனர். அதில், தோராயமாக ஒரு நகரில் வெறும் 1 சதவீத மக்கள் தொடர்ந்து தியானம் செய்தால், அந்த இடத்தில் இருந்து பரவும் கண்ணுக்கு தெரியாத அமைதி அலைகள் அந்த நகரைச் சுற்றி சுமார் 5 மைல் தொலைவுக்கு ஒரு வித அமைதியை அந்த பகுதியில் வாழும் மனிதர்களிடத்தில் ஏற்படுத்துகிறது. இது அந்த பகுதியில் வாழும் தியானத்தில் ஈடுபடாத மக்களின் மனதில் மாற்றத்தை உருவாக்கி அமைதியை உருவாக்குவதால் அந்த மக்களின் மன அழுத்தம் குறையத் தொடங்குகிறது. பொதுவாக மனிதர்கள் ஒருவரையொருவர் ஏதோ ஒரு வகையில் பாதிக்கின்றனர். ஒரு மனிதரிடம் நல்ல உணர்வுகள் வெளிப்படும் போது அது சக மனிதர்களை அமைதிப்படுத்துகிறது என்பது உண்மை. பொதுவாக தியானம் அமைதியை தருகிறது. அது ஒரு சமூகத்தில் பரவும் போது ஒட்டுமொத்த சமூகமும் அமைதிக்கு திரும்புகிறது என்றனர்.

இந்த பகுதியில் உங்கள் படைப்புக்கள் வரவேற்கிறோம்
whatsapp No
8122664699

## ஆன்மிகப் பயணம் மேற்கொண்ட பக்தர்களுக்கு மானியம்



இந்து சமய அறநிலையத் துறை சார்பில் கன்னியாகுமரி, புதுக்கோட்டை,தஞ்சாவூர் திருக்கோயில்களின் நிர்வாகம் மற்றும் பராமரிப்பிற்காக ரூ.36 கோடி மற்றும் முக்திநாத் ஆன்மிகப் பயணம் மேற்கொண்ட பக்தர்களுக்கு தலா ரூ.30,000 வீதம் ரூ.1.17 கோடி அரசு மானியத்தை முதல்வர் ஸ்டாலின் வழங்கினார். உடன் அமைச்சர்கள் மனோ தங்கராஜ், சேகர்பாபு, தலைமைச்செயலாளர் முருகானந்தம், இந்து அறநிலையத்துறை ஆணையர் ஸ்ரீதர் உடன் உள்ளனர்.

## கலெக்டர் அழகுமீனா கலந்துரையாடல்



குமரி மாவட்டத்தில் வரைவு வாக்காளர் பட்டியல் குறித்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகள்,சட்டமன்ற தொகுதி வாக்குப்பதிவு அலுவலர்கள் மற்றும் உதவி வாக்குப்பதிவு அலுவலர்களுடன் கலெக்டர் அழகுமீனா கலந்துரையாடினார்.

## தந்தை பெரியார் சமத்துவபுரத்தில் பயனாளிகளுக்கு வீட்டு சாவி



தென்காசி மாவட்டம் குருக்கள்பட்டியில் தந்தை பெரியார் சமத்துவபுரத்தில் பயனாளிகளுக்கு வீட்டு சாவியை கலெக்டர் கமல் கிஷோர், ராஜா எம்எல்ஏ ஆகியோர் வழங்கினர்.

## பத்ரகாளியம்மன் கோயில் திருவிளக்கு வழிபாட்டில் பெண்கள்



காரைக்கால் அம்பகரத்தூர் பத்ரகாளியம்மன் கோயில் திருவிளக்கு வழிபாட்டில் பெண்கள் திரளாக பங்கேற்றனர்.

## இலவச வீட்டு மனைப்பட்டா



வாலாஜபாத்தில் இலவச வீட்டு மனைப்பட்டா, நலத்திட்ட உதவிகளை கலெக்டர் கலைச்செல்வி, சுந்தர் எம்எல்ஏ வழங்கினர்.

## பள்ளி மேலாண்மை குழு கூட்டம்

**பென்னாகரம், பிப்.07:**



பென்னாகரத்தை அடுத்துள்ள செங்கனூர் ஊராட்சிக்கு உட்பட்ட சின்னப்பள்ளத்தூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளிகள் பள்ளி மேலாண்மைக்குழு கூட்டம் தலைமை ஆசிரியர் மா. பழனி தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் பள்ளி மாணவர்களின் கற்றல் அடைவுகள் சார்ந்து விவாதிக்கப்பட்டது. பள்ளியில் நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் திறன், எண்ணும் எழுத்தும் திட்டம், பள்ளி மானியம் பற்றி விரிவாக விவாதிக்கப்பட்டது. கூட்டத்தில் பள்ளி மேலாண்மை குழு தலைவி கங்கா, துணைத் தலைவி ராஜேஸ்வரி, அஜய் அன்னக்கிளி, அம்பிகா, சாலம்மாள், இராஜலட்சுமி பள்ளி ஆசிரியர்கள் வளர்மதி, பழனிச்செல்வி கல்பனா, கலைச்செல்வி உட்பட பள்ளி மேலாண்மை குழு உறுப்பினர்களும் ஆசிரியர்களும் கலந்துக் கொண்டார்கள்.

## சண்முககுமாரபுரம் ஊராட்சி ஒன்றிய தொடக்கபள்ளியில் பள்ளி மேலாண்மைக் குழுக் கூட்டம்!

**இராமநாதபுரம், பிப்.07:**



இராமநாதபுரம் மாவட்டம் கடலாடி ஒன்றியம் சண்முககுமாரபுரம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் பள்ளி மேலாண்மைக் குழு கூட்டம் நடைபெற்றது.

பள்ளி மேலாண்மைக் குழு கூட்டம் தலைவி முத்துக்கனி தலைமையிலும், துணைத்தலைவி கவிதா மற்றும் உறுப்பினர்கள் முன்னிலையிலும் நடை பெற்றது.

கூட்டத்திற்கு வருகை புரிந்த உறுப்பினர்களை பள்ளித் தலைமையாசிரியர் ச.கிறிஸ்து ஞான வள்ளுவன் வரவேற்றார். பள்ளியின் செயல்பாடுகள் பற்றி தலைமையாசிரியர் பேசினார். கூட்டப் பொருள்களாக எண்ணும் எழுத்தும், உயர்கல்வி வழிகாட்டி, அனைத்து குழந்தைகளும் பள்ளியில், உள்ளடக்கிய கல்வி, முன்னாள் மாணவர்கள் கல்வி சாரா மன்றச் செயல்பாடுகளில் பங்கேற்றல் போன்ற தலைப்புகள் எடுத்துக் கொள்ளப்பட்டு விவாதிக்கப்பட்டு ஒருமனதாக தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

நிறைவாக தலைமையாசிரியர் நன்றி கூற பள்ளி மேலாண் மைக்குழு கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

## அங்கன்வாடி பணியாளர்களுக்கு ஆதரவு



கோவையில் 4வது நாளாக நேற்று போராட்டம் நடத்திய அங்கன்வாடி பணியாளர்களுக்கு வானதி சீனிவாசன் எம்எல்ஏ ஆதரவு தெரிவித்தார்.

## என்டிஏ கூட்டணி மாநாடு ஆய்வு



மதுரையில் பிரதமர் மோடி பங்கேற்கும் என்டிஏ கூட்டணி மாநாடு திடலை பாஜக மற்றும் அதிமுக நிர்வாகிகளுடன் பாஜக தலைவர் நயினார்நாகேந்திரன் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

## இலவச வீட்டுமனை பட்டா



பொன்னேரியில் நேற்று திருவள்ளூர் மாவட்ட கலெக்டர் பிரதாப் முன்னிலையில், இலவச வீட்டுமனை பட்டாக்களை அமைச்சர் நாசர் வழங்கினார்.

## அகஸ்தீஸ்வரர் கோயிலில் தேர் வெள்ளோட்டம்



நாகை மாவட்டம் வெளிப்பாளையம் அகஸ்தீஸ்வரர் கோயிலில் நேற்று தேர் வெள்ளோட்டம் நடந்தது.

## நாராயண சாமி நாயுடுவின் சிலைக்கு கலெக்டர் மரியாதை



விவசாயிகள் சங்கத் தலைவ நாராயண சாமி நாயுடுவின் பிறந்த தினத்தை முன்னிட்டு , வையம்பாளையத்தில் அவரது நினைவிடத்தில் உள்ள திருவுருவச் சிலைக்கு கோவை கலெக்டர் பவன்குமார் கிரியப்பனவர் மரியாதை செலுத்தினார்.

## அதிக புத்தகங்கள் வாங்கிய மாணவர்களுக்கு நினைவுப்பரிசு



ராமநாதபுரத்தில் புத்தகத் திருவிழா நிறைவு நாளில், அதிக புத்தகங்கள் வாங்கிய மாணவர்களுக்கு கலெக்டர் சிம்ரன்ஜீத்சிங் காலோன் நினைவுப்பரிசு வழங்கினார்.

## கலெக்டர் பிரியங்கா பங்கஜம் ஆலோசனை



தஞ்சை மாவட்டத்தில் வாக்குச்சாவடி மறுசீரமைப்பு பணிகள் தொடர்பாக அலுவலர்கள், அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகளுடன் கலெக்டர் பிரியங்கா பங்கஜம் ஆலோசனை நடத்தினார்.

## தேமுதிக சார்பில் விருப்பமனு தாக்கல்



தமிழக சட்டசபைத் தேர்தலில் தேமுதிக சார்பில் விருப்பமனு தாக்கல் நேற்று துவங்கியது. பொதுச் செயலாளர் பிரேமலதாவிடம் விருப்ப மனுக்களை அளித்தனர்.

## தவெக சார்பில் விருப்ப மனு தாக்கல்



தவெக சார்பில் சட்டசபைத் தேர்தலில் போட்டியிட விருப்ப மனு தாக்கல் நேற்று துவங்கியது

## 6 மாணவர் அணிகளுக்கு சான்றிதழ்



சிஐஐ நடத்திய நீலகிரி இம்பாக்ட் சேலஞ்ச் 2026-ல் குமரகுரு கல்வி நிறுவனத்தின் 6 மாணவர் அணிகளுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டது.

## ரவுசு மணி

பிடித்ததை அடிக்கடி நினைத்துப் பாருங்கள் சந்தோஷம் கிடைக்கும் ....

வெறுப்பதை மறக்க முயலுங்கள் நிம்மதி



V. முத்து ராமகிருஷ்ணன்

## பள்ளி மேலாண்மை குழுக் கூட்டம்

**ஈரோடு, பிப்.07:**



ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சி வட்டம் கஸ்பாபேட்டை ஊராட்சி செல்லப்பம்பாளையம் தொடக்கப் பள்ளியில், 06.02.2026 வெள்ளிக்கிழமை மாலை 3.00 மணியளவில் "பள்ளி மேலாண்மை குழுக் கூட்டம்" நடைபெற்றது. "கூட்டத்தில் உதவி ஆசிரியை திருமதி M.வசந்தா, முன்னாள் மாணவர் திரு S.கிருஷ்ணன், மேலாண்மைக் குழு உறுப்பினர்கள், பெற்றோர்கள் கலந்து கொண்டனர்."

**தீர்மானங்கள்:**

"பள்ளியில் படிக்கும் மாணவ மாணவிகளின் வாசிப்பு திறனை மேம்படுத்தவும், பொது அறிவில் சிறந்து விளங்கிடவும், நூல்களை படிக்கப் பழக்க, ஆசிரியரும் பெற்றோரும் இணைந்து செயல்படுவோம்."

"மூன்றாம் வகுப்பு மற்றும் ஐந்தாம் வகுப்பு மாணவ மாணவிகளுக்கு அரசு சார்பில் நடைபெறும் தேர்வுக்கு மாணவச் செல்வங்களை தயார் படுத்துவோம்".

"அறிவாளிகள், பெரிய விஞ்ஞானிகள், பேராசிரியர்கள், வாழ்க்கையில் மேல் இடத்துக்கு வந்துள்ள அனைத்து பெரியோர்களும், தலைவர்களும் சிறுவயதில் இருந்தே அதிகாலையில் எழுந்தவர்களாக இருந்திருக்கிறார்கள் என்ற எண்ணத்தை குழந்தைகள் மனதில் நன்கு பதிய வைத்து, அவர்களை அதிகாலையில் நேரமே எழுந்து கொள்ள பழக்கப்படுத்துவோம்".

"குழந்தைகள் செய்யும் குறும்புகள், கோபங்களை தனித்தனியே அவர்களைக் குறிப்பிட்டு சொல்லி அவர்களை குற்ற உணர்வுக்கு ஆளாக்காமல், அனைவரும் கூடியிருக்கும் போது அவர்கள் பெயரைக் குறிப்பிட்டுச் சொல்லாமல் பொதுவாகச் சொல்லி, மேற்கொண்டு அதே தவறுகள் செய்யாமல் இருக்க அவர்களை திருத்தவோம்".

"அரசு நடத்தும் தேர்வு முடிந்த பின்னர் இந்த ஆண்டு பள்ளியில் விளையாட்டு விழா மற்றும் ஆண்டு விழா சிறப்பாக நடத்தலாம்."

மேற்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. நன்றி! வணக்கம்!

## நீச்சல் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு தங்கப்பதக்கமும், வெள்ளிப்பதக்கமும் மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் விழா

**திருவண்ணாமலை, பிப்.07:**





திருவண்ணாமலை மாவட்டம் கீழ்பென்னாத்தூர் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் பள்ளி கல்வித்துறை சார்பாக நடைபெற்ற நீச்சல் போட்டிகளில் கீழ்பென்னாத்தூர் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி மாணவர்கள் பங்கு பெற்று 13 தங்கப் பதக்கங்களும் 19 வெள்ளி பதக்கங்களும் 10 வெண்கல பதக்கங்களும் வென்றார்கள் .இதில் பத்து மாணவர்கள் மாநில அளவில் கலந்து கொண்டார்கள்.

வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்களையும், பதக்கங்களையும் கீழ்ப்பென்னாத்தூர் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் முனைவர் மு. பிரசன்னா அவர்கள் வழங்கினார். உடன் உதவி தலைமை ஆசிரியர் இ. ராமமூர்த்தி மேல்நிலை மற்றும் திரு.கேசவன் இடைநிலை மற்றும் உடற்கல்வி இயக்குனர் திரு. முகமது நபி, உடற்கல்வி ஆசிரியர்கள் திரு. ஆரிமுத்து, திருமதி ஜெரினா , திரு வடிவேல் உடற்கல்வி ஆசிரியர் மற்றும் அனைத்து ஆசிரியர்களும் மாணவர்களுக்கு சான்றிதழையும், பாராட்டுகளையும் வழங்கினார்கள்.சில மாணவர்கள் மூன்றுக்கும் மேற்பட்ட பதக்கங்களையும், சான்றிதழ்களையும் பெற்றார்கள். தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

# சுற்றுலா: மதுரையில் ஒரு நாளில் எவ்வளவு இடம் சுற்றிப் பார்க்கலாம் தெரியுமா?

தமிழ்நாட்டின் கலாச்சார தலைநகரமாக விளங்கும் மதுரை இந்தியாவின் மிகப் பழமையான நகரங்களில் ஒன்றாக இருப்பதுடன், மதுரை பல அழகிய சுற்றுலாத் தலங்களை கொண்டுள்ளது. அரை அல்லது ஒரு நாளில் சென்று வரக்கூடிய அளவில் மதுரையில் ஏகப்பட்ட இடங்கள் உள்ளன.

### மதுரை மீனாட்சியம்மன் கோயில்

எத்தனை முறை சென்றாலும் கூட சலிக்காத ஒரு கோயில் என்றால் அது மதுரை மீனாட்சியம்மன் கோயில் தான். 1623 மற்றும் 1655 க்கு இடையில் கட்டப்பட்ட இந்த இடத்தின் அற்புதமான கட்டிடக்கலை உலகளவில் புகழ்பெற்றது. கோவிலின் மிகவும் குறிப்பிடத்தக்க அம்சம் அதன் நேர்த்தியான முகப்பில் உள்ளது, இது சுவர்கள் மற்றும் தூண்களில் இணைக்கப்பட்ட சிறந்த கலைத் துண்டுகளுடன் மிக நுணுக்கமான விவரங்களைக் கொண்டுள்ளது. இது கட்டாயம் நீங்கள் பார்க்க வேண்டிய இடமாகும்.

### திருமலை நாயக்கர் மஹால்

திருமலை நாயக்கர் அரண்மனை கி.பி 1636 இல் மதுரை நகரில், மன்னர் திருமலை நாயக்கரால் கட்டப்பட்டது. இந்த அரண்மனை திராவிட மற்றும் ராஜபுத்திர பாணிகளின் சரியான கலவையை சித்தரிக்கிறது. சுதந்திரத்திற்குப் பிறகு, இந்த அரண்மனை தேசிய நினைவுச்சின்னமாக அறிவிக்கப்பட்டது மற்றும் இன்றுவரை தென்னிந்தியாவின் கண்கவர் நினைவுச்சின்னங்களில் ஒன்றாகத் தொடர்கிறது.



### அழகர் கோயில்

அழகர் மலையில் அமைந்துள்ள இந்த அழகர்கோவில் தென்னிந்தியாவில் உள்ள தனித்துவமான கோயில்களின் சிறந்த வடிவமாகும். கள்ளழகரை காவல் காக்கும் 18 படி கருப்புசாமி கோவிலும் அழகர் கோவிலுக்கு கீழே அமைந்திருக்கிறது. கள்ளழகர் ஆற்றில் இறங்கும் திருவிழாவைப் பற்றி தமிழர்கள் அனைவருக்குமே தெரியும். மதுரை சென்றால் கட்டாயம் பார்க்க வேண்டிய இடங்களில் இதுவும் ஒன்று.

### சமணர் மலை

மதுரைக்கு அருகிலுள்ள கீழக்குயில்குடி கிராமத்தில் அமைந்துள்ள சமணர் மலை என்பது தமிழ் சமணத் துறவிகள் வாழ்ந்த அழகிய மலைப்பாறை வளாகமாகும். மலைக் குகைகள் சுற்றுலாவின் பிரபலமான இடமாகும், மேலும் உட்புறச் சுவர்களில் துறவிகளின் விரிவான செதுக்கல்கள் மற்றும் வரைபடங்கள் உள்ளன. இந்த இடத்தில் ஒரு அழகான தாமரை கோயில் வளாகத்தில் அமைந்துள்ளது.

### காந்தி அருங்காட்சியகம்

காந்திநினைவு அருங்காட்சியகம் நமது சொந்த தேசத் தந்தையான மகாத்மா காந்தியின் முயற்சிகளுக்கு நினைவாகவும் அஞ்சலியாகவும் செயல்படுகிறது. அவரது மறைவுக்குப் பதினோரு ஆண்டுகளுக்குப் பிறகு, அவரது நினைவாக 1959 இல் நிறுவப்பட்டது, இது நாட்டிலுள்ள சில காந்தி அருங்காட்சியகங்களில் ஒன்றாகும்.



### தெப்பக்குளம்

விக்னேஷ்வரரின் நினைவாக கட்டப்பட்ட இந்த தெய்வீக கோவில் மீனாட்சி கோவிலில் இருந்து சுமார் 5 கிமீ தொலைவில் அமைந்துள்ளது. கோவிலின் வளாகத்தில் ஒரு பெரிய குளம் உள்ளது மற்றும் தமிழ்நாட்டின் மிகப்பெரிய குளம் என்ற பெருமையைப் பெற்றுள்ளது.

### பழமுதிர்சோலை

பழமுதிர் சோலை என்பது தமிழ் கடவுளான முருகனின் அறுபடை வீடுகளில் ஒன்றாகும். இது பலரால் வழிபடப்படும் சுப்பிரமணியப் பெருமானின் நினைவாக உருவாக்கப்பட்ட அழகிய ஆலயமாகும். மரம் மற்றும் பளிங்குக் கற்களால் செதுக்கப்பட்ட சுப்பிரமணிய சுவாமியின் பெரிய சிற்பங்கள் மற்றும் அதன் முன்புறத்தில் ராட்சத படிகள் கொண்ட அற்புதமான கோவிலாகும்.

### திருப்பரங்குன்றம்

முருகப்பெருமான் திருமண கோலத்தில் காட்சி தரும் அறுபடைவீடுகளில் ஒன்றான திருப்பரங்குன்றம் மதுரையில் நீங்கள் கட்டாயம் பார்க்க வேண்டிய இடமாகும். இது திருமணங்களுக்கான புனித ஸ்தலமாக பார்க்கப்படுகிறது மற்றும் புறநகர் பகுதிகளில் உள்ள பெரும்பாலான திருமணங்கள் இந்த கோவிலில் தான் நடைபெறுகின்றன. இக்கோயிலில் சுப்ரமணியரின் திருமஞ்சனம் கொண்டாடப்படுவது வழக்கம!

## வேலைவாய்ப்பு கார்னர்

### 10-ம் வகுப்பு தேர்ச்சி போதும்..!! ரயில்வேயில் 22,000 வேலை.!

அரசு வேலையில் பணிபுரிய வேண்டும் என்பது இளைஞர்கள் பலருடைய கனவாகும். தமிழ்நாட்டில் டிஎன்பிஎஸ்சி நடத்தும் தேர்வுகளுக்கு அடுத்து, ரயில்வே ஆட்சேர்ப்பு வாரியத்தால் (RRB) நடத்தப்படும் தேர்வுகள் அதிக முக்கியத்துவம் பெறுகின்றன. இந்நிலையின் தற்போது 22,000 குரூப் டி காலிப் பணியிடங்களை நிரப்புவதற்கான அறிவிப்பை வெளியிட்டுள்ளது ஆர்ஆர்பி.

இந்த வேலையில் சேர்வதற்கு 10 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருந்தால் மட்டுமே போதும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ரயில்வே துறையில் உள்ள காலிப் பணியிடங்களை ரயில்வே ஆட்சேர்ப்பு வாரியம் (RRB) அவ்வப்போது நிரப்பி வருகிறது. அவ்வகையில் RRB Group D பணியிடங்களை நிரப்ப ரயில்வே வாரியம் அறிவிப்பை வெளியிட்டுள்ளது. கல்வித் தகுதி: 10 ஆம் வகுப்பு தேர்ச்சி அல்லது ITI முடித்திருந்தால் போதுமானது.

வயது வரம்பு: ரயில்வே துறை விதிகளின்படி குரூப் டி பணியிடங்களுக்கு விண்ணப்பிக்க 18 முதல் 33 வயதுக்குள் இருக்க வேண்டியது அவசியம். இருப்பினும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு வயது வரம்பில் மூன்று ஆண்டு தளர்வுகளும், தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின வகுப்பினருக்கு 5 ஆண்டுகள் தளர்வுகளும் அளிக்கப்படும்.

காலிப் பணியிடங்களின் எண்ணிக்கை: 22,000

காலிப் பணியிடங்களின் விவரம்: தண்டவாள பராமரிப்பாளர், பாயின்ட்ஸ்மேன், உதவியாளர்

விண்ணப்பிக்க அவகாசம் தொடங்கும் நாள்: 31-01-2026 விண்ணப்பிக்க கடைசி நாள்: 02-03-2026

விண்ணப்பிக்க வேண்டிய இணையதளம்: https://www.rrbchennai.gov.in/ or https://www.rrb.gov.in/

விண்ணப்பக் கட்டணம்:

பொதுப் பிரிவினர் ரூ.500-ஐ விண்ணப்பக் கட்டணமாக செலுத்த வேண்டும். தேர்வை எழுதிய பிறகு ரூ.400 திருப்பி அளிக்கப்படும்.

எஸ்சி/எஸ்டி பிரிவினருக்கு ரூ.250 கட்டணமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தேர்வை எழுதிய பிறகு அவர்களுக்கு இந்த கட்டணம் முழுமையாக திருப்பி அளிக்கப்படும்.

## ஆர்டர்லி முறை ஒழிப்பு: ஐகோர்ட்டில் தமிழக அரசு பதில் மனு தாக்கல்

**சென்னை, பிப்.7:**

கோயில் நிலத்திற்கும், தனக்கும் பாதுகாப்பு வழங்கக் கோரி சேலத்தை சேர்ந்த ராதாகிருஷ்ணன் என்பவர் தாக்கல் செய்திருந்த வழக்கில், தமிழ்நாட்டில் ஆர்டர்லி முறை முற்றிலுமாக ஒழிக்கப்பட வேண்டுமென கடந்த 2022ம் ஆண்டு பிறப்பிக்கப்பட்ட உத்தரவு முழுமையாக பின்பற்றப்பட்டதா? என சென்னை ஐகோர்ட் கேள்வி எழுப்பியிருந்தது. ஆர்டர்லி முறையை ஒழிக்கும் வகையில் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஆட்சியர் தலைமையில் குழு அமைக்கலாம் என ஐகோர்ட் யோசனை தெரிவித்திருந்தது.

இந்நிலையில் இந்த வழக்கு நீதிபதிகள் எஸ்.எம். சுப்ரமணியம், சி.குமரப்பன் அமர்வில் விசாரணைக்கு வந்தது. அப்போது, தமிழ்நாடு அரசு தலைமை வழக்கறிஞர் பி.எஸ்.ராமன் ஆஜராகி, ஆர்டர்லி முறையை ஒழிப்பது குறித்து ஒவ்வொரு மாவட்டத்திலும் குழு அமைப்பது தொடர்பாக அரசாணை பிறப்பிக்கப்பட்டு உள்ளதாக கூறி அதற்கான அரசாணையை தாக்கல் செய்தார். மேலும், அரசாணையை ஆக்கப்பூர்வமாக செயல்படுத்தியது தொடர்பாக அறிக்கை தாக்கல் செய்ய அவகாசம் அளிக்க வேண்டுமென கேட்டுக்கொண்டார். இதனை ஏற்றுக்கொண்ட நீதிபதிகள், விசாரணையை நான்கு வாரங்களுக்கு தள்ளிவைத்தனர்.

## கோவில் நிர்வாக பராமரிப்பு செலவுக்கு ரூ.36 கோடி மானியம் வழங்கல்

**சென்னை, பிப். 7:**

கன்னியாகுமரி, புதுக்கோட்டை மற்றும் தஞ்சாவூர் தேவஸ்தான கோயில்களின் நிர்வாகம் மற்றும் பராமரிப்பு செலவிற்கான உயர்த்தப்பட்ட அரசு மானியம் ரூ.36 கோடிக்கான காசோலைகள், இதேபோல முக்திநாத் ஆன்மிகப் பயணம் மேற்கொண்ட 389 பக்தர்களுக்கு அரசு மானியமாக ரூ.1.17 கோடிக்கான காசோலைகள் வழங்கினார். இதேபோல ஆன்மிகப் பயணம் மேற்கொண்டவர்களுக்கு அரசு மானியம் தலா ரூ.30,000 வீதம் 1.17 கோடி ரூபாய் வழங்கிடும் அடையாளமாக 10 நபர்களுக்கு அதற்கான காசோலைகளை வழங்கினார். கடந்த 57 மாதங்களில் 12,803 திருக்கோயில்களில் 8,607 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 29,149 திருப்பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு அதில், 4,992 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 16,595 திருப்பணிகள் நிறைவுபெற்றுள்ளன. இதுவரை 4,087 திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு நடத்தப்பட்டுள்ளதோடு, 8,347.56 கோடி ரூபாய் மதிப்பிலான 8,082.70 ஏக்கர் நிலங்கள் ஆக்கிரமிப்பிலிருந்து மீட்கப்பட்டுள்ளன.

இந்த அரசு பொறுப்பேற்றபின், 9.94 கோடி ரூபாய் அரசு நிதியில் அறுபடை வீடுகளுக்கு 4,015 பக்தர்களும், இராமேஸ்வரம் காசி ஆன்மிகப் பயணத்திற்கு 1,520 பக்தர்களும், ஆடி மாதத்தில் அம்மன் திருக்கோயில்களுக்கு 3,004 பக்தர்களும், புரட்டாசி மாதத்தில் வைணவ திருக்கோயில்களுக்கு 3,014 பக்தர்களும் கட்டணமில்லாமல் ஆன்மிகப் பயணமாக அழைத்துச் செல்லப்பட்டுள்ளதோடு, முக்திநாத் ஆன்மிகப் பயணம் மேற்கொண்ட 1,034 பக்தர்களுக்கு 2.36 கோடி ரூபாய் அரசு மானியம் வழங்கப்பட்டுள்ளது.

## ரூ.3511 கோடியில் 183 முடிவுற்ற திட்டங்கள்: ஸ்டாலின் திறந்தார்; ரூ.1267 கோடி திட்டங்களுக்கு அடிக்கல்




**சென்னை, பிப்.7:**

முதலமைச்சர் ஸ்டாலின் இன்று தலைமைச் செயலகத்தில், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் சார்பில் 2378.30 கோடி ரூபாய் செலவில் 9 முடிவுற்ற பணிகளையும், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் சார்பில் 635.30 கோடி ரூபாய் செலவில் 22 முடிவுற்ற பணிகளையும்,

நகராட்சி நிருவாக இயக்குநரகத்தின் சார்பில் 237.04 கோடி ரூபாய் செலவில் 62 முடிவுற்ற பணிகளையும், பேரூராட்சிகள் இயக்குநரகத்தின் சார்பில் 174.45 கோடி ரூபாய் செலவில் 27 முடிவுற்ற பணிகளையும், சென்னை மாநகராட்சி சார்பில் 86.04 கோடி ரூபாய் செலவில் முடிவுற்ற 63 பணிகளையும், திறந்து வைத்தார்.

மேலும், சென்னை மாநகராட்சி சார்பில் 335.62 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 8 புதிய திட்டப் பணிகளுக்கும், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் சார்பில் 932 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 2 புதிய திட்டப் பணிகளுக்கும் அடிக்கல் நாட்டி, சென்னை குடிநீர் வாரியத்தின் அலுவலகப் பயன்பாட்டிற்காக 47 லட்சம் ரூபாய் மதிப்பிலான 5 வாகனங்களை அலுவலர்களுக்கு வழங்கினார்.

நாமக்கல் மாவட்டம், ராசிபுரம் கூட்டுக் குடிநீர் திட்டத்தின் கீழ், ராசிபுரம் நகராட்சி 8 பேரூராட்சிகள் மற்றும் இராசிபுரம், வெண்ணந்தூர், நாமகிரிப்பேட்டை, புதுச்சத்திரம், எலச்சிப்பாளையம், மல்லசமுத்திரம், பரமத்தி ஆகிய 7 ஒன்றியங்களுக்குட்பட்ட 1070 ஊரகக் குடியிருப்புகள் மற்றும் 11 ஊராட்சிகளுக்கு 1138.41 கோடி ரூபாய் செலவிலான 2 கூட்டுக் குடிநீர் திட்டங்ளைள திறந்து வைத்தார்.

மேலும், கோயம்புத்தூர் மாநகராட்சி குறிச்சி மற்றும் குனியமுத்தூர் பகுதிகளுக்கு 591.14 கோடி ரூபாய் செலவிலான பாதாள சாக்கடை திட்டம், திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி நகராட்சிக்கு 62.82 கோடி ரூபாய் செலவிலான பாதாள சாக்கடை திட்டம் என மொத்தம் 653 கோடியே 96 லட்சம் ரூபாய் செலவில் 4 லட்சத்து 49 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையிலான 2 பாதாள சாக்கடைத் திட்டங்களை முதலமைச்சர் தொடங்கி வைத்தார்.

மணலி, ஆலந்தூர் (முகலிவாக்கம்), பெருங்குடி (பள்ளிக்கரணை), மற்றும் சோழிங்கநல்லூர் (உத்தண்டி, ஒக்கியம்-துரைப்பாக்கம்) ஆகிய மண்டலங்களில் 188 கோடியே 7 இலட்சம் ரூபாய் செலவில் பாதாள சாக்கடை திட்டப்பணிகள்.

மாதவரம், தண்டையார்பேட்டை, அம்பத்தூர் மற்றும் அண்ணாநகர் மண்டலங்களில் உள்ள நீர் நிலைகளில் கழிவுநீர் கலப்பதை தடுக்கும் பொருட்டு 106 கோடி 42 லட்சம் செலவில், பாடி மேம்பாலத்திலிருந்து கொடுங்கையூர் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் வரை மாற்றியமைக்கப்பட்ட பிரதான கழிவுநீர் உந்து குழாய்கள் உட்பட மொத்தம் 635 கோடியே 31 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 22 முடிவுற்ற திட்டப் பணிகளை முதலமைச்சர் தொடங்கி வைத்தார்.

புதிய திட்டங்களுக்கு அடிக்கல்

சர்தார் பட்டேல் சாலை-வேளச்சேரி பிரதான சாலை சந்திப்பிலிருந்து குருநானக் கல்லூரி சந்திப்பு வரை 200 அடி சாலையில் 310 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய மேம்பாலம், மணலி மண்டலம், செட்டிமேடு பகுதியில் 6.75 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உள்ளரங்க கபடி மைதானம் மற்றும் திறந்தவெளி கால்பந்து மைதானம், மாதவரம் மண்டலம், சி.எம்.டி.ஏ. டிரக் டெர்மினல் பகுதியில் 4.63 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய விளையாட்டு வளாகம், மாதவரம் மண்டலம், திருவள்ளுவர் தெரு, புத்தகரத்தில் 4.70 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள முதல்வர் படைப்பகங்கள், ரூ.9.54 கோடி மதிப்பீட்டில், மாதவரம், தண்டையார்பேட்டை, கோடம்பாக்கம் மற்றும் சோழிங்கநல்லூர் மண்டலங்களில் மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கான பிரத்யேக வசதிகளுடன் கூடிய 2 பூங்காக்கள் என 4 பூங்கா மேம்பாட்டு பணிகள்

என மொத்தம் 335.62 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 8 புதிய திட்டப்பணிகளுக்கு முதலமைச்சர் அடிக்கல் நாட்டினார்.

ஆக மொத்தம் 932 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 2 புதிய திட்டப் பணிகளுக்கு முதலமைச்சர் அடிக்கல் நாட்டினார்.

## சிந்திக் கல்லூரி நடத்திய 'புற்றுநோய் விழிப்புணர்வு'

**சென்னை, பிப்.7:**

சென்னை சிந்தி கல்லூரியில் என்எஸ்எஸ் சார்பில் புற்றுநோய் விழிப்புணர்வு நிகழ்ச்சி கல்லூரியின் மாநாட்டு மண்டபத்தில் நடந்தது. 110 மாணவர்கள் பங்கேற்றனர். டாக்டர் அன்பரசி குமரேசன் (மூத்த ஆலோசகர் கதிர்வீச்சு புற்றுநோய் நிபுணர்) சிறப்புரையாற்றினார்.

மாணவர்களிடையே புற்றுநோய் தடுப்பு மற்றும் ஆரம்ப கட்ட கண்டறிதலின் முக்கியத்துவத்தைப் பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்துதல், புற்றுநோயின் பொதுவான அறிகுறிகள், ஆபத்துக் காரணிகள் மற்றும் எச்சரிக்கை அடையாளங்கள் குறித்து கல்வியளித்தல், முறையான சுகாதார பரிசோதனைகள் மற்றும் சரியான நேரத்தில் மருத்துவ ஆலோசனை பெறுவதின் அவசியத்தை வலியுறுத்துதல், சமச்சீர் உணவு, உடற்பயிற்சி மற்றும் புகையிலை/மது தவிர்ப்பு போன்ற ஆரோக்கியமான வாழ்க்கை முறைகளை ஊக்குவித்தல் ஆகியவை இந்நிகழ்ச்சியின் நோக்கம்.

சிந்திக் கல்லூரியின் தேசிய சேவை திட்டம் உள்ளக தர உறுதி குழு மற்றும் எம்ஜிஎம் கேன்சர் இன்ஸ்டிடுட் இணைந்து நிகழ்ச்சியை வெற்றிகரமான நடத்தினர். கல்லூரி முதல்வர் டாக்டர் டி. பிரஹலாதன் தலைமை உரையாற்றினார். கல்வி நிறுவனங்களின் சுகாதார விழிப்புணர்வு நிகழ்ச்சிகன் அவசியத்தை வலியுறுத்தினார். துணை முதல்வர் டாக்டர் எஸ். ஷோபனா சிறப்புரையாற்றி மாணவர்கள் சமூக நலத் திட்டங்களில் பங்கேற்க வேண்டும் என ஊக்கமளித்தார்.

## தூத்துக்குடி துறைமுகத்தின் ரூ.15 ஆயிரம் கோடி விரிவாக்க திட்ட ஒப்பந்தம்:

**தூத்துக்குடி, பிப்.7:**

தூத்துக்குடி துறைமுகத்தின் ரூ.15 ஆயிரம் கோடி விரிவாக்க திட்டத்திற்கான ஒப்பந்தம் மத்திய அமைச்சர் சர்பானந்தா சோனோவால் முன்னிலையில் கையெழுத்தானது.

தூத்துக்குடி வ.உ.சி. துறைமுகத்தில் ரூ.15 ஆயிரம் கோடி மதிப்பீட்டில் வெளித்துறைமுக அமைக்க திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. இதற்கான நிதி ஏற்பாடு செய்வதற்காக இந்திய ரெயில்வே நிதிக்கழகம் மற்றும் சாகர்மாலா நிதிக் கழகம் ஆகியவற்றுடன் வ.உ.சி. துறைமுக ஆணையம் முத்தரப்பு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து உள்ளது.

புதுடெல்லியில் உள்ள மத்திய துறைமுகங்கள், கப்பல் மற்றும் நீர்வழி போக்குவரத்து அமைச்சகத்தில் அமைச்சர் சர்பானந்தா சோனோவால் முன்னிலையில், வ.உ.சி. துறைமுக ஆணையம் சார்பில் அதன் தலைவர் சுசாந்த குமார் புரோகித், இந்திய ரெயில்வே நிதிக்கழகம் லிமிடெட் நிர்வாக இயக்குனரும், தலைவருமான மனோஜ் குமார் டுபெய், சாகர்மாலா நிதிக்கழகம் லிமிடெட் நிர்வாக இயக்குனர் எல்.வி.எஸ்.சுதாகர் பாபு ஆகியோர் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.

நிகழ்ச்சியில் மத்திய ரெயில்வே, தகவல் ஒளிபரப்புத்துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ், துறைமுகங்கள், கப்பல் மற்றும் நீர்வழி போக்குவரத்து துறை இணை அமைச்சர் சாந்தனு தாக்கூர், துறை செயலர் விஜய் குமார் மற்றும் அமைச்சகத்தின் மூத்த அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இந்த ஒப்பந்தம் நிதி அமைப்பை வடிவமைத்தல், நிதி ஆதாரங்களை அடையாளம் காணுதல், திட்ட செயலாக்கம், திறன் மேம்பாடு மற்றும் அறிவுப் பகிர்வு போன்றவற்றை நோக்கமாக கொண்டுள்ளது.

இந்த திட்டத்தின் கீழ் துறைமுகத்தில் அலை தடுப்புச்சுவர் கட்டுமானம், ஆழப்படுத்தும் பணிகள், நில மீட்பு மற்றும் அதனுடன் தொடர்புடைய பிற துணை பணிகள் மேற்கொள்ளப்படும்.

இதேபோன்று மத்திய அரசின் 'ஆத்மநிர்பர் பாரத்' முயற்சியின் கீழ் உருவாக்கப்பட்ட கூட்டு நிறுவனமான பாரத சரக்குப் பெட்டக கப்பல் சேவை நிறுவனத்தில் பங்குதாரராக சேருவதற்கான மற்றொரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் வ.உ.சி. துறைமுக ஆணையம் கையெழுத்திட்டு உள்ளது.

# "என் நல்ல கருத்தை மறுப்போர் விவாதித்து உண்மை அறியலாம்" - கமல்ஹாசன் எம்.பி.

**சென்னை, பிப்.7:**

"தமிழனாக நான் நல்ல கருத்தை பேசியிருப்பதாக எனக்கு தோன்றுகிறது. அதை மறுப்பவர்கள், விவாதிக்க வேண்டும்" என நாடாளுமன்றத்தில் தனது முதல் பேச்சு குறித்து மக்கள் நீதி மய்யம் தலைவரும், எம்.பி.யுமான கமல்ஹாசன் தெரிவித்துள்ளார்.



இது குறித்து அவர் செய்தியாளர்களிடம் பேசும்போது, "நல்ல கருத்து விவாதத்துக்கு உள்ளாக வேண்டும். தமிழனாக நான் நல்ல கருத்தை பேசியிருப்பதாக எனக்கு தோன்றுகிறது. அதை மறுப்பவர்கள், விவாதிக்க வேண்டும். விவாதித்து உண்மை என்னவென்று தெரிந்துகொள்ள வேண்டும்.

ஒட்டுமொத்த இந்தியா உடன்தான் எனது கூட்டணி. இந்தியாவே எனது நலன், உங்களது நலனும் கூட. கூட்டணியெல்லாம் ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை வருவது, கொள்கையே முக்கியம். அதை நோக்கி தான் சென்று கொண்டிருக்கிறேன்" என்று அவர் தெரிவித்துள்ளார்.

முன்னதாக, "மாநிலங்களவையில் கமல்ஹாசன் என்னென்னமோ பேசினார். கமல் பேச்சு எனக்கு புரியவே இல்லை. அவர் பேச்சு புரிந்தால் எனக்கு சொல்லுங்கள்.

ஏற்கெனவே கோவையில் கடந்த சட்டப்பேரவைத் தேர்தலில் கமல்ஹாசன் போட்டியிட்டபோது அவர் பேச்சு புரியாததால்தான் மக்கள் அவரைத் தோற்கடித்து இங்கிருந்து அனுப்பி வைத்தனர். ஆனால், அவர் எதற்காக நிறுத்தப்பட்டாரோ அந்த முதலாளிகள் அவரை இப்போது டெல்லிக்கு அனுப்பி இருக்கின்றனர். அவர்களுக்காவது கமல் நியாயம் செய்யக் கூடாதா?" என்றார் பாஜக மகளிரணி தேசிய தலைவர் வானதி சீனிவாசன் எம்எல்ஏ.

கமல்ஹாசன் பேசியது என்ன?

தமிழ் மொழி குறித்து மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்த கருத்துக்கு பதிலளிக்கும் வகையில், மாநிலங்களவையில் கமல்ஹாசன் எம்.பி பேசும்போதும். "இன்று தமிழை, தமிழரைப் பார்த்து பிச்சை எடுக்கக்கூட தமிழ் உதவாது என்கிறீர்கள். ஓரளவு உண்மைதான். தமக்கென உங்கள் நிதியை திரட்ட ஆங்கிலத்தில், இந்தியில் பிச்சை எடுக்கலாமே! தமிழ்... பிச்சை எடுக்க உதவாது, திருடவும் உதவாது" என்றார்.

மேலும், "தங்கச்சி... ஓட்டையும் நாட்டையும் இந்த கமல்ஹாசன் விற்கவே மாட்டான். உங்கள் சாபங்களில் எங்களுக்கு நம்பிக்கை இல்லை. உங்களுக்கு இருக்கக்கூடும் என்ற நம்பிக்கையில், நீங்கள் உணர என் திட்டத்தை சாபமாய் போடுகிறேன், கருணையுடன் நீங்களே ஏற்பீர்.

உங்கள் இஷ்ட தெய்வங்களை வேண்டிக்கொள்ளுங்கள். பகுத்தறிந்த தமிழ்ச் சித்தன் கூற்று இது 'உம் வினை உம்மை சுடுக'. எங்கள் நாடு நீடூழி வாழும், உம் வினை உம்மைச் சுடுக, ஓட்டப்பம் வீட்டைச் சுடுக. 'வந்தீர் வென்றீர் செல்வீர்' இது உலக நியதி, அரசியல் நியதியும்கூட. வீழ்க வளமுடன். தமிழ் என்றும் வாழும் நலமுடன்" என்று கமல்ஹாசன் எம்.பி. பேசியது குறிப்பிடத்தக்கது.

## விளையாட்டு செய்திகள்

### தீவிர காய்ச்சலுடன் விளையாடி கோப்பையை வென்ற ஸ்மிருதி மந்தனா

**பெங்களூரு, பிப்.7:**

5 அணிகள் பங்கேற்ற 4-வது மகளிர் பிரீமியர் லீக் (டபிள்யூ.பி.எல். டி20 ) கிரிக்கெட் தொடர் கடந்த மாதம் 9-ந் தேதி தொடங்கியது. இந்த தொடரின் இறுதிப் போட்டி நேற்று குஜராத் மாநிலம் வதோதராவில் உள்ள கோடாம்பி ஸ்டேடியத்தில் நடைபெற்றது. இதில் பெங்களூரு ராயல் சேலஞ்சர்ஸ் மகளிர் அணி மற்றும் டெல்லி கேப்பிட்டல் மகளிர் அணி மோதின. டாஸ் வென்ற டெல்லி கேப்பிட்டல் அணி முதலில் பேட்டிங் செய்து, 20 ஓவர்கள் முடிவி 4 விக்கெட்டுகள் இழப்பிற்கு 203 ரன்கள் எடுத்தது. அந்த அணியின் வீராங்கனைகள் அதிரடியாக விளையாடி உயர்ந்த இலக்கை நிர்ணயித்தனர். இதனைத் தொடர்ந்து களமிறங்கிய பெங்களூரு ராயல் சேலஞ்சர்ஸ் அணி தொடக்கம் முதலே தாக்குதலான ஆட்டத்தை வெளிப்படுத்தியது. ஆட்டத்தின் கடைசி ஓவரில் வெற்றிக்கு 10 ரன்கள் தேவைப்பட்ட நிலையில், ராதா யாதவ் மற்றும் நாடின் டி கிளார்க் ஜோடி பொறுப்புடன் விளையாடி 4 பந்துகளில் இலக்கை எட்டியது. இதன் மூலம் பெங்களூரு அணி 6 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் டெல்லி அணியை வீழ்த்தி சாம்பியன் பட்டம் வென்றது. ஆர்சிபி அணியின் கேப்டன் ஸ்மிருதி மந்தனா 87 ரன்கள் எடுத்து ஆட்டநாயகி விருதை வென்றார். மேலும் நடப்பு ஐபிஎல் தொடரில் அதிக ரன்கள் எடுத்ததற்கான ஆரஞ்சு தொப்பி ஸ்மிருதி மந்தனாவிற்கு வழங்கப்பட்டது. இந்நிலையில் இறுதிப்போட்டிக்கு முந்தைய இரவு, ஸ்மிருதிக்கு 103 டிகிரி பாரன்ஹீட் காய்ச்சல் இருந்ததாக ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு அணியின் பயிற்சியாளர் பயிற்சியாளர் மாலோலன் ரங்கராஜன் தெரிவித்தார். கடுமையான காய்ச்சல் பாதிப்பு இருந்தபோதிலும், அணியின் வெற்றிக்காக விளையாடிய அவருக்கு ரசிகர்கள் உள்பட விளையாட்டு வீரர்களும் பிரபலங்களும் வாழ்த்து தெரிவித்து வருகின்றனர்.

### சிஎஸ்கேதிருவள்ளூர் டிசிஏ இன்டர் காலேஜ் டி20 கிரிக்கெட் போட்டி

**திருவள்ளூர், பிப். 7:**

சிஎஸ்கேதிருவள்ளூர் டிசிஏ இன்டர் காலேஜ் டி20 கிரிக்கெட் போட்டியின் கால் இறுதி போட்டிகள் நடைபெற்றது. முதல் போட்டியில் ஸ்ரீஹெர் மார்க் கிரிகோரியஸ் கல்லூரி வேல்டெக் மல்டி டெக் அணிகள் மோதின. முதலில் பேட் செய்த ஸ்ரீஹெர் அணி 20 ஓவர்களில் 6 விக்கெட்டுக்கு 178 ரன்கள் குவித்தது. எஸ். ஸ்ரீச்சரண் 80 ரன்கள் (அவுட் இல்லை) எடுத்து அணியின் முதுகெலும்பாக விளங்கினார். தொடர்ந்து விளையாடிய வேல்டெக் மல்டி டெக் அணி 90 ரன்களில் சுருண்டது. மார்க் கிரிகோரியஸ் கல்லூரி வேல்டெக் டாக்டர் சங்குந்தலா அணிகளுக்கு இடையேயான 2வது போட்டி சுவாரஸ்யமாக நடைபெற்றது. முதலில் மார்க் கிரிகோரியஸ் அணி 142 ரன்கள் அடித்தது. 143 ரன் இலக்குடன் களம் இறங்கிய வேல்டெக் அணி 126 ரன்களில் ஆல் அவுட்டானதால் மார்க் கிரிகோரியஸ் வெற்றியை உறுதி செய்தது. மற்றொரு போட்டியில் இந்து கல்லூரி அணி, வேல்டெக் ஹை டெக் அணியை எதிர்த்து விளையாடியது. இந்து கல்லூரி அணி 120 ரன்கள் அடித்த நிலையில் அதன்பின் களம் இறங்கிய வேல்டெக் ஹை டெக் கல்லூரி 84 ரன்களில் வெளியேறியது. அடுத்த களம் இறங்கிய ஜெயா கல்லூரி அணி 10.2 ஓவர்களில் 86 ரன்கள் அடித்து அரை இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

# பாரத் டாக்சி செயலி: அமித் ஷா தொடங்கி வைத்தார்

**புதுடெல்லி, பிப்.7:**

'பாரத் டாக்சி' செயலியை மத்திய உள்துறை மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சா அமித் ஷா வியாழக்கிழமை தொடங்கி வைத்தார்.



ஓலா, உபா, ரேபிடோ ஆகிய நிறுவனங்கள் செயலி மூலம், நாடு முழுவதும் டாக்சி, ஆட்டோ, பைக் சேவையை அளித்து வருகின்றன. இதேபோல், 8 கூட்டுறவு அமைப்புகள் மூலம் காா, ஆட்டோ, பைக் சேவை வழங்குவதற்கு பாரத் டாக்சி செயலி தொடங்கப்பட்டுள்ளது. இதில் இதுவரை 3 லட்சம் ஓட்டுநாகள் இணைந்துள்ளனா. ஒரு லட்சம் பயனாளாகள் பெயரைப் பதிவு செய்துள்ளனா.

ஓட்டுநாகள் அனைவரும் சாரதி என அழைக்கப்படுகின்றனா. அவாகளுக்கு மருத்துவக் காப்பீடு, விபத்துக் காப்பீடு, ஓய்வூதிய சேமிப்பு பலன்கள் உள்ளிட்டவை அளிக்கப்படுகின்றன.

தனியாா் நிறுவனங்களைப் போல, தேவை அதிகமிருக்கையில் அதிக கட்டணம் வசூலிக்கப்படுவதில்லை. ஓட்டுநாகளிடம் கமிஷன் தொகையும் பெறப்படுவதில்லை. கிடைக்கும் லாபம் ஓட்டுநாகளுக்குப் பகிா்ந்து அளிக்கப்படுகிறது. முதல்கட்டமாக இந்தச் செயலி மூலம், தேசிய தலைநகர பிராந்தியம், குஜராத் மாநிலத்தில் டாக்சி, ஆட்டோ, பைக் சேவை அளிக்கப்படுகிறது. பிறகு 3 ஆண்டுகளுக்குள் நாடு முழுவதும் சேவையை விரிவுபடுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இதுகுறித்து மத்திய அமைச்சா அமித் ஷா வெளியிட்டுள்ள பதிவில், 3 ஆண்டுகளில் பாரத் டாக்சி நாடு முழுவதும், காஷ்மீா முதல் கன்னியாகுமரி வரையிலும், துவாரகா முதல் காமாக்யா வரையிலும் இயங்கும் எனக் குறிப்பிட்டுள்ளாா.

# உள்நாட்டில் உருவான பாரத்ஜென் ஏஐ: விரைவில் 22 அலுவல் மொழிகளுக்கு விரிவாக்கம் : ஜிதேந்திர சிங்

**புதுடெல்லி, பிப்.7:**

உள்நாட்டில் உருவாக்கப்பட்ட பாரத்ஜென் பன்மொழி செயற்கை நுண்ணறிவு (ஏஐ) மாதிரியில் 22 அலுவல் மொழிகளிலும் உரை சார்ந்த சேவைகள் விரைவில் நிறைவடையவுள்ளதாக மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை அமைச்சர் ஜிதேந்திர சிங் வியாழக்கிழமை தெரிவித்தார்.




இதுகுறித்து பாஜக எம்.பி. புவனேஷ்வர் கலிதா எழுப்பிய கேள்விக்கு பதிலளித்து மாநிலங்களவையில் ஜிதேந்திர சிங் பேசுகையில், 'பாரத்ஜென் ஏஐ மாதிரியில் ஏற்கெனவே 15 அலுவல் மொழிகளின் உரை சார்ந்த சேவைகள் நிறைவுசெய்யப்பட்டன. மீதமுள்ள 7 மொழிகளிலும் இந்த மாத இறுதியில் இந்தப் பணிகள் முடிவடையும்.

15 மொழிகளில் உரை சார்ந்த சேவைகள் மட்டுமன்றி ஆடியோ, புகைப்படம் மற்றும் விடியோ வடிவில் ஏஐ மாதிரிகளும் நிறைவடையவுள்ளன' என்றார்.

உரை-பேச்சு, தானியங்கி பேச்சு அங்கீகாரம் என இந்திய மொழிகளுக்கான ஏஐ மாதிரிகளை உருவாக்க 2024, அக்டோபர் மாதம் பாரத்ஜென் திட்டத்தை மத்திய அரசு தொடங்கியது.

# ரூ.4 லட்சம் கோடியில் மேற்கு வங்க மாநில பட்ஜெட் தாக்கல்

**கொல்கத்தா, பிப்.7:**

மேற்கு வங்க சட்டப்பேரவையில் நிதியமைச்சர் சந்திரிமா பட்டாச்சார்யா ரூ.4 லட்சம் கோடியில் 2026-27 நிதியாண்டிற்கான இடைக்கால பட்ஜெட்டை தாக்கல் செய்தார்.



பேரவைத் தேர்தல் நடைபெற உள்ள நிலையில், பெண்களைக் குறிவைத்து, 'லக்ஷ்மிர் பந்தர்' திட்டத்தின் கீழ் மகளிருக்கு வழங்கப்படும் மாதாந்திர உதவித் தொகை ரூ.500 உயர்த்தப்பட்டுள்ளது.

வேலையில்லாத இளைஞர்களுக்காக யுவ சாத்தி திட்டத்தின் கீழ் 21 முதல் 40 வயதுக்குட்பட்ட வேலையில்லாத இளைஞர்களுக்கு வேலை கிடைக்கும் வரை மாதம் ரூ.1,500 உதவித் தொகை வழங்கப்படும் என பட்ஜெட்டில் கூறப்பட்டுள்ளது.

# சபரிமலை தங்க முறைகேடு வழக்கு: உன்னிகிருஷ்ணன் போற்றி ஜாமீனில் விடுவிப்பு

**திருவனந்தபுரம், பிப்.7:**

சபரிமலை ஐயப்பன் கோயில் தங்கக் கவச முறைகேடுடன் தொடா்புடைய இரண்டாவது வழக்கிலும் ஜாமீன் கிடைத்ததைத் தொடா்ந்து, வழக்கில் முக்கிய குற்றவாளியாக சோ்க்கப்பட்டுள்ள உண்ணிகிருஷ்ணன் போற்றி சிறையிலிருந்து வியாழக்கிழமை விடுவிக்கப்பட்டாா.



கடந்த 2019-இல் சபரிமலை ஐயப்பன் கோயிலின் கருவறைக் கதவுகள் மற்றும் துவார பாலகா சிலைகளின் தங்கக் கவசங்கள் புதுப்பிக்கப்பட்ட பிறகு, அவற்றின் எடை குறைந்ததாகப் புகாா எழுந்தது. இது தொடா்பாக இரு வழக்குகள் பதிவுசெய்யப்பட்ட நிலையில் விசாரணை மேற்கொள்ள கேரள உயா் நீதிமன்ற வழிகாட்டுதலில் சிறப்புப் புலனாய்வுக் குழு (எஸ்ஐடி) அமைக்கப்பட்டது.

இதையடுத்து, தங்கக் கவச புதுப்பிப்புப் பணிக்கான செலவை ஏற்ற பெங்களூரு தொழிலதிபா உண்ணிகிருஷ்ணன் போற்றி, திருவிதாங்கூா் தேவஸ்வம் வாரிய முன்னாள் தலைவா்கள் ஏ.பத்மகுமாா, என்.வாசு உள்பட 12 பேரை எஸ்ஐடி கைது செய்து விசாரித்து வருகிறது. இந்த முறைகேடு தொடா்பாக தன்மீதான 2 வழக்குகளிலும் ஜாமீன் கோரி உண்ணிகிருஷ்ணன் போற்றி தரப்பில் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. இதில், கருவறைக் கதவுகளின் தங்கக் கவச முறைகேடு வழக்கில் கொல்லம் ஊழல் தடுப்பு நீதிமன்றம் அண்மையில் ஜாமீன் வழங்கியது. ஆனால், துவார பாலகா சிலைகளின் தங்கக் கவசங்கள் முறைகேடு தொடா்பான வழக்கில் வழங்கப்படவில்லை. இதுதொடா்பான மனு கொல்லம் ஊழல் தடுப்பு நீதிமன்ற நீதிபதி சி.எஸ்.மோஹித் முன்னிலையில் வியாழக்கிழமை விசாரணைக்கு வந்தது. அப்போது, வழக்கை விசாரித்து வரும் சிறப்புப் புலனாய்வுக் குழு, 90 நாள்களுக்குள் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யத் தவறியதைச் சுட்டிக்காட்டிய நீதிபதி, இரண்டாவது வழக்கிலும் அவருக்கு ஜாமீன் வழங்கி உத்தரவிட்டாா. அதைத் தொடா்ந்து, மாலை 6.30 மணிக்கு திருவனந்தபுரம் சிறப்பு துணைச் சிறையிலிருந்து அவா விடுவிக்கப்பட்டாா.

## க்ரைம் கார்னர்

### பேருந்தை நிறுத்தி பிறந்த நாள் விழா: வழக்குப் பதிவு

**கிருஷ்ணகிரி, பிப்.7:**

வேப்பனப்பள்ளி அருகே அரசு நகரப் பேருந்தை மறித்து, சாலையின் நடுவே கேக் வெட்டிப் பிறந்தநாள் கொண்டாடியவர்கள் மீது போலீசார் வழக்குப் பதிவு செய்துள்ளனர். யானைக்கால்தொட்டி கிராமத்தைச் சேர்ந்த சந்தோஷ் (28) என்பவர் தனது நண்பர்களுடன் இணைந்து, நாச்சிகுப்பம் பிரிவு சாலையில் அரசுப் பேருந்தை வழிமறித்து மேளதாளங்களுடன் ரகளையில் ஈடுபட்டுள்ளார். இதனைத் தட்டிக்கேட்ட ஈஸ்வரராவ் என்பவரை அவர்கள் தாக்கியுள்ளனர். புகாரின் பேரில் வேப்ப னப்பள்ளி போலீசார் வழக்குப் பதிந்து, தலை மறைவாக உள்ளவர்களைத் தேடி வருகின்றனர்.

### 200 கிலோ குட்கா பறிமுதல் இருவர் கைது

**விழுப்புரம், பிப். 7:**

ஆந்திராவிலிருந்து கடத்தி வரப்பட்ட 200 கிலோ குட்கா மற்றும் கடத்தலுக்குப் பயன் படுத்திய கார் ஆகியவற்றை விழுப்புரத்தில் போலீசார் பறிமுதல் செய்து, இரு வரை கைது செய்தனர்.

ஆந்திராவிலிருந்து குட்கா பொருட்கள் கடத்தி வரப்படுவதாகக் கிடைத்த ரகசியத் தகவலின் பேரில், விழுப்புரம் மேற்கு காவல் நிலைய காவல் ஆய்வாளர் கல்பனா, உதவி ஆய்வா ளர்கள் லியோ சார்லஸ் நவநீதகிருஷ்ணன் மற்றும் காவலர்கள் அடங்கிய குழுவினர் செஞ்சி ரோடு சந்திப்பு அருகே வாகனத் தணிக்கையில் ஈடுபட்டிருந்தனர். அப்போது அவ்வழியாக அதிவேகமாக வந்த காரை மறித்துச் சோதனை செய்ததில், மூட்டை மூட்டை யாக குட்கா பொருட்கள் இருந்தது கண்டுபிடிக்கப் பட்டது. இதையடுத்து காரில் இருந்தவர்களைக் காவல் நிலையம் அழைத்து வந்து விசாரணை செய்ததில், ராஜஸ்தான் மாநிலம், தாலோவுன் மாவட்டம், போர்வாடா கிராமத்தைச் சேர்ந்த அமராராம் என்பவரின் மகன் ஹர்ஷன் குமார் (26) மற்றும் ராஜஸ்தான் மாநிலம், ஜல்லூர் மாவட்டம், கரரா கிரா மத்தைச் சேர்ந்த சபீர் கான் என்ப வரின் மகன் உசேன் (29) என்பது தெரியவந்தது. சுமார் 200 கிலோ எடையுள்ள குட்கா பொருட்கள் மற்றும் கார் பறிமுதல் செய்யப்பட்டன. பிடிபட்ட இருவர் மீதும் வழக்குப்பதிவு செய்யப் பட்டு நீதிமன்றக் காவலுக்கு அனுப்பப்பட்டனர். இச்சம்பவம் விழுப்புரத்தில் பரபரப்பை ஏற்படுத்தியது.

### பிரிந்து வாழும் மனைவி வீட்டில் நாட்டு வெடிகுண்டு வீசிய கணவர் கைது

**சென்னை, பிப்.7:**

மதுரவாயல், பாரதியார் தெருவைச் சேர்ந்தவர் வர்ஷா(20). இவர், கடந்த 3 ஆண்டுகளுக்கு முன்பு கும்மிடிப்பூண்டியைச் சேர்ந்த சக்திவேல்(20) என்பவரைக் காதலித்து திருமணம் செய்து கொண்டார். சில மாதங்களிலேயே இருவருக்குள் கருத்து வேறுபாடு ஏற்பட்டதால் கணவரைப் பிரிந்து மதுரவாயலில் உள்ள பெற்றோர் வீட்டுக்கு வர்ஷா சென்றார்.

இந்நிலையில், கடந்த ஆண்டு மேமாதம் மனைவி வர்ஷா வீட்டுக்குச் சென்ற சக்திவேல், தகராறில் ஈடுபட்டு மனைவியைக் கத்தியால் தாக்கியுள்ளார். மதுரவயல் போலீஸார் வழக்குப் பதிந்து சக்திவேலைக் கைது செய்து சிறையில் அடைத்தனர்.

பின்னர் ஜாமீனில் வெளியே வந்த சக்திவேல், தன் மனைவியை பழிவாங்கும் எண்ணத்தில் நேற்று அதிகாலை நண்பர் சதீஷ்(23) உடன் சென்று மனைவி வீட்டின் மீது 2 நாட்டு வெடிகுண்டுகளை வீசியுள்ளார்.

நாட்டு வெடிகுண்டு வெடித்த சத்தத்தைக் கேட்டு வர்ஷா மற்றும் குடும்பத்தினர் வெளியே ஓடி வந்தனர். அப்போது பைக்கில் தப்ப முயன்ற சக்திவேல் மற்றும் சதீஷை பொதுமக்கள் மடக்கி பிடிக்க முயன்றனர்.

ஆனால், கத்தியைக் காட்டி மிரட்டி, இருவரும் தப்பி ஓடி விட்டனர். இந்த விவகாரம் தொடர்பாக மதுரவாயல் காவல் நிலையத்தில் வர்ஷா புகார் அளித்தார். அதைத் தொடர்ந்து, தலைமறைவாக இருந்த சக்திவேல், சதீஷை போலீஸார் கைது செய்து விசாரித்து வருகின்றனர்.

## வணிகச் செய்திகள்

### தங்கம் விலையில் அதிரடி மாற்றம்!

**சென்னை, பிப்.7:**

உலக அளவில் தங்கத்தை இறக்குமதி செய்யும் நாடுகளில் இந்தியா முன்னணியில் உள்ளது. அதனால் சர்வதேச பொருளாதார மற்றும் அரசியல் சூழல், அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு, தங்கத்தின் மீதான முதலீடு அதிகரிப்பு, உலக பங்குச் சந்தைகளின் முதலீடுகள் உள்ளிட்டவற்றின் அடிப்படையில், தங்கத்தின் விலை நிர்ணயிக்கப்படுகிறது.

இந்த சூழலில் கடந்த சில நாட்களாகவே தங்கம் விலை உயர்ந்தும் குறைந்தும் வருகிறது. உலக நாடுகளுக்கு இடையிலான வர்த்தக ரீதியான உறவு இதற்கு காரணம் என துறை சார்ந்த வல்லுநர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

சென்னையில் ஆபரணத் தங்கத்தின் விலை கிராமுக்கு ரூ.130 உயர்ந்து ரூ. 14,250க்கு விற்பனை செய்யப்படுகிறது. அதேசமயம் சவரனுக்கு ரூ.1,040 உயர்ந்து ஒரு சவரன் ரூ.1,14,000க்கு விற்பனை யாகிறது.

தங்கம் விலை காலையில் சவரனுக்கு ரூ.1,600 குறைந்த நிலையில் மாலையில் ரூ.1,040 உயர்ந்துள்ளது.

மேலும் வெள்ளி விலை காலையில் கிராமுக்கு ரூ.20 குறைந்த நிலையில் மாலையில் மாற்றமின்றி ரூ.280க்கு விற்பனை செய்யப்படுகிறது.

சென்னையில் ஒரு கிலோ வெள்ளி விலை பிற்பகலில் மாற்றமின்றி ரூ.2,80,000க்கு விற்பனை செய்யப்படுகிறது.

# ரயிலில் ஆர்ஏசி பயணிகளுக்கு பாதி கட்டணம் மட்டுமே..! நாடாளுமன்றக் குழு பரிந்துரை!



**புதுடெல்லி, பிப்.7:**

ரயில்களில் முன்பதிவு செய்யும் பயணிகளுக்கு ஆர்ஏசி அடிப்படையில் பகுதியளவு படுக்கை மட்டுமே ஒதுக்கப்படும் பட்சத்தில், பாதி தொகையைத் திருப்பி வழங்க வேண்டும் என்று நாடாளுமன்றக் குழு பரிந்துரைத்துள்ளது.

நாடாளுமன்ற பொதுக் கணக்குக் குழு ரயில்வே துறை சம்பந்தப்பட்ட அறிக்கை ஒன்றை புதன்கிழமை தாக்கல் செய்தது.

அந்த அறிக்கையில், "ரயில்களின் பயணச்சீட்டு முன்பதிவு விவரங்கள் தயாரிக்கப்பட்ட பிறகும், முழுப் படுக்கை ஒதுக்கப்படாமல் பகுதியளவு மட்டும் ஒதுக்கப்படும் ஆர்ஏசி (Reservation against Cancellation -ரத்து செய்யப்படுவதற்கு எதிரான முன்பதிவு) பயணிகளுக்கு முழுத் தொகையை வசூலிப்பது நியாயமற்றது" என்று குறிப்பிட்டுள்ளது.

மேலும், ஆர்ஏசி பயணிகளுக்கு பாதி தொகையைத் திருப்பி செலுத்தும் விதிமுறைகளை ரயில்வே அமைச்சகம் உருவாக்க வேண்டும் என்றும் நாடாளுமன்றக் குழு பரிந்துரைத்துள்ளது.

தற்போதைய நடைமுறையின் படி, ஆர்ஏசி பிரிவின் கீழ் பயணச்சீட்டை முழு கட்டணம் செலுத்தி முன்பதிவு செய்யும் பயணி, இறுதி பயணச்சீட்டு விவரங்கள் தயாரிக்கப்பட்டும் ஆர்ஏசி பிரிவில் இருந்தால், மற்றொரு ஆர்ஏசி பயணியுடன் ஒரு படுக்கையை பகிர்ந்து கொள்வார். ஒரு படுக்கைக்கு இரண்டு பயணிகளிடமும் முழுத் தொகை வசூலிக்கும் நடைமுறை உள்ளது.

இத்தகைய பயணிகளுக்கு பகுதி கட்டணத்தைத் திரும்பச் செலுத்துமாறும், இதுதொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து தங்களுக்குத் தெரிவிக்குமாறும் அக்குழு ரயில்வே அமைச்சகத்துக்கு உத்தரவிட்டுள்ளது.

மேலும், அகலப் பாதையில் அதிவேக ரயில்களுக்கான குறைந்தபட்ச வேகமான மணிக்கு 55 கி.மீ. என்ற அளவுகோல்களை மறு ஆய்வு செய்யவும் ரயில்வே அமைச்சகத்துக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

# மேகாலயா சுரங்க வெடிவிபத்து வேதனை தருகிறது; ஜனாதிபதி இரங்கல்

**புதுடெல்லி, பிப்.7:**

மேகாலயாவின் கிழக்கு ஜைந்தியா ஹில்ஸ் மாவட்டத்தின் தங்க்ஸ்கை பகுதியில் நிலக்கரி சுரங்கம் ஒன்று செயல்பட்டு வருகிறது. சந்தேகத்திற்குரிய வகையிலான இந்த சட்டவிரோத நிலக்கரி சுரங்கத்தில் தொழிலாளர்கள் பலர் மிக குறுகிய பகுதியில் சுரங்க பணியில் ஈடுபட்டு இருந்தபோது, வெடிவிபத்து ஏற்பட்டதில் அவர்கள் சிக்கி கொண்டனர்.

நுழைவு பகுதியில் பாறைகள் விழுந்து மூடியதில், உள்ளே இருந்தவர்களால் வெளியே வர முடியவில்லை. இதில் பலர் உயிரிழந்தனர். இதுபற்றி போலீஸ் சூப்பிரெண்டு விகாஸ் குமார் கூறும்போது, 18 உடல்களை இதுவரை மீட்டுள்ளோம். ஒருவர் தீக்காயங்களுடன் மீட்கப்பட்டு உள்ளார். தொழிலாளர்கள் பலர் உள்ளே சிக்கி கொண்டுள்ளனர். மாநில பேரிடர் மீட்பு படை, போலீசார் மற்றும் அரசு நிர்வாகத்தினர் மீட்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர் என கூறினார். இந்த சம்பவத்தில், உயிரிழந்தோரின் குடும்பத்திற்கு பிரதமர் மோடி இரங்கல் தெரிவித்து உள்ளார்.

இந்த சம்பவம் பற்றி குறிப்பிட்டு ஜனாதிபதி திரவுபதி முர்மு இரங்கல் தெரிவித்து உள்ளார். மேகாலயாவின் கிழக்கு ஜைந்தியா ஹில்ஸ் மாவட்டத்தில், துரதிர்ஷ்டவசத்தில் ஏற்பட்ட விபத்தில் சிக்கி தொழிலாளர்கள் உயிரிழந்தது பற்றிய செய்தியை அறிந்து வேதனை அடைந்தேன். இந்த விபத்தில் பாதிக்கப்பட்டோரின் குடும்பத்திற்கு ஆழ்ந்த இரங்கல்களை தெரிவித்து கொள்கிறேன். காயமடைந்த நபர்கள் விரைவில் குணமடைய வேண்டி கொள்கிறேன் என்று தெரிவித்து உள்ளார்.

# மேற்கு வங்காள சட்டமன்ற தேர்தலில் தனித்து போட்டியிட காங்கிரஸ் முடிவு



**புதுடெல்லி, பிப்.7:**

மேற்கு வங்காளத்துக்கு வருகிற ஏப்ரல் மாதம் சட்டமன்ற தேர்தல் நடக்க உள்ளது. இந்த தேர்தல் தொடர்பான காங்கிரஸ் கட்சியின் உயர்மட்ட தலைவர்கள் மற்றும் மேற்கு வங்காள காங்கிரஸ் கமிட்டி மூத்த தலைவர்கள் கலந்து கொண்ட முக்கிய ஆலோசனை கூட்டம் புதுடெல்லியில் நடந்தது.

இந்த கூட்டத்தில் ராகுல்காந்தி, அகில இந்திய காங்கிரஸ் தலைவர் மல்லி கார்ஜூன கார்கே, பொதுச்செயலாளர் கே.சி.வேணுகோபால், மேற்குவங் காள மாநில காங்கிரஸ் பொறுப்பாளர் குலாம் அகமது மிர் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். இந்த கூட்டத்தில், மேற்குவங்காள தேர்தலில் 294 தொகுதிகளில் காங்கிரஸ் தனித்து போட்டியிட முடிவு எடுக்கப்பட்டதாக குலாம் அகமது மிர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார். கடந்த 2021 சட்டமன்ற தேர்தலில் காங்கிரஸ் கட்சி இடதுசாரி முன்னணியுடன் கூட்டணி அமைத்து போட்டியிட்ட நிலையில் ஒரு தொகுதியில் கூட வெற்றி பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# 807 பேர் காணாமல் போன விவகாரம்; பயப்பட தேவையில்லை - டெல்லி போலீசார்



**புதுடெல்லி, பிப்.7:**

டெல்லியில் ஜனவரி 1-ந்தேதி முதல் 15-ந்தேதி வரை பெண்கள், குழந்தைகள் என 807 பேரை காணவில்லை. அப்படியென்றால், நாளொன்றுக்கு 54 பேர் காணாமல் போயுள்ளனர் என ஆம் ஆத்மி கட்சியின் ஒருங்கிணைப்பாளர் மற்றும் டெல்லியின் முன்னாள் முதல்-மந்திரியான கெஜ்ரிவால் கூறி அதிர்ச்சி ஏற்படுத்தினார்.

அவர்களில் பலர் இளம் சிறுமிகள். நாட்டின் தலைநகர் டெல்லியில், மக்களின் பாதுகாப்பு கேள்வியாக உள்ளது.

இது அச்சமூட்டும் வகையில் உள்ளது. ஆனால், பா.ஜ.க. அரசோ தூங்கி கொண்டிருக்கிறது என்றும் குற்றச்சாட்டாக கூறினார்.

டெல்லியில் சட்டம் ஒழுங்கு ஐ.சி.யு.வில் உள்ளது என கூறிய அவர், டெல்லி மக்கள் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். உங்களுடைய குழந்தைகளை நீங்களே கவனம் கொண்டு பாதுகாத்திடுங்கள் என்றும் கூறினார்.

இந்நிலையில், குழந்தைகள் காணாமல் போன விவகாரத்தில் பொதுமக்கள் அச்சமடையவோ, பயப்படவோ வேண்டிய அவசியமில்லை என டெல்லி போலீசார் தெரிவித்தனர்.

இதுபற்றி டெல்லி போலீசின் மக்கள் தொடர்பு அதிகாரி சஞ்சய் தியாகி கூறும்போது, முந்தின ஆண்டுடன் ஒப்பிடும்போது டெல்லியில் காணாமல் போனவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கவில்லை. கடந்த ஆண்டின் இதே காலகட்டத்தில் ஒப்பிடும்போது 2026-ம் ஆண்டு ஜனவரியில், காணாமல் போனவர்களின் எண்ணிக்கை குறைந்தே காணப்படுகிறது.

குற்ற செயல்களை அறிவிப்பதில் சிறந்த மற்றும் வெளிப்படை தன்மையுடன் செயல்படும் கொள்கையை டெல்லி போலீசார் பின்பற்றி வருகின்றனர் என்றும் கூறினார்.

குழந்தைகள் காணாமல் போனது அல்லது கடத்தப்பட்ட சம்பவத்தில் ஏதேனும் ஒரு குறிப்பிட்ட கும்பலுக்கு தொடர்பு இருப்பது போல் தெரியவரவில்லை என்றும் போலீசார் தெரிவித்தனர்.

# புதிய முதல்-மந்திரி பதவியேற்ற மறுநாளே மணிப்பூரில் மீண்டும் கலவரம்

**இம்பால், பிப்.7:**

டெல்லியில் உள்ள பா.ஜ.க. தலைமையகத்தில் மணிப்பூர் பா.ஜ.க. எம்.எல்.ஏ.க்கள் கூட்டம் நடந்தது. அதில், சட்டசபை பா.ஜ.க. கட்சி தலைவராக (முதல்-மந்திரி) ஒய்.கெம்சந்த் சிங் தேர்வு செய்யப்பட்டார். 'குகி' பழங்குடி இனத்தை சேர்ந்த முன்னாள் பெண் மந்திரி நெம்சா கிப்ஜென், துணை முதல்-மந்திரியாக தேர்வாகி உள்ளார். இதையடுத்து, மணிப்பூரில் மீண்டும் ஆட்சி அமைக்க ஏதுவாக அங்கு அமலில் இருந்த ஜனாதிபதி ஆட்சி வாபஸ் பெறப்பட்டது. மணிப்பூரில் புதிய அரசு வரும் 12-ந்தேதிக்குள், பதவியேற்கும் என்று தெரிகிறது.

இந்த நிலையில், மணிப்பூரில் மீண்டும் கலவரம் ஏற்பட்டுள்ளது. குக்கி இனத்தவர் அதிகம் வசிக்கும் பகுதிக்கு சுயாட்சி கேட்டு நடந்த போராட்டத்தில் வன்முறை ஏற்பட்டு கலவரமாக மாறியது. புதிய முதல்-மந்திரி பதவியேற்ற மறுநாளே மணிப்பூரில் கலவரம் ஏற்பட்டுள்ளது. கலவலரக்காரர்கள் பொது சொத்துகளுக்கு தீ வைத்தனர். அமைதியை நிலைநாட்ட காவல்துறை, துணை ராணுவ படைகள் முயன்று வருகின்றன.

# அரசியல் கட்சிகளின் இலவச அறிவிப்புகளுக்கு சிக்கல்? சுப்ரீம் கோர்ட்டில் பொதுநல வழக்கு

**புதுடெல்லி, பிப்.7:**

தேர்தல் நேரத்தில் வாக்காளர்களை கவருவதற்காக அரசியல் கட்சிகள் இலவச அறிவிப்புகளை தேர்தல் வாக்குறுதிகளாக வெளியிடுவதை வழக் கமாக கொண்டுள்ளன.

இலவசங்கள் அறிவிப்புக்கு ஒரு தரப்பினர் எதிர்ப்பு குரல் எழுப்பி வரு கின்றனர். இலவச அறிவிப்புகள் மக்களை ஏமாற்றும் வேலை என அவர் கள் குற்றம்சாட்டி வருகின்றனர். இந்நிலையில், தேர்தலின் போது வாக்காளர்களை கவருவதற்காக அரசி யல் கட்சிகள் அரசின் பொதுப்பணத்தில் இருந்து இலவசங்களை அறிவிப் பதற்கு தடை விதிக்க வேண்டும் என பொதுநல மனு ஒன்றை வக்கீல் அஸ்வினி உபத்யாயா என்பவர் சுப்ரீம் கோர்ட்டில் தாக்கல் செய்துள்ளார். அந்த மனுவில், 'இலவசங்களை அறிவிப்பது ஜனநாயக மாண்புகளைச் சிதைப்பதாகவும், அரசியலமைப்புச் சட்டத்திற்கு எதிரானது. இத்தகைய அறிவிப்புகள் தேர்தலின் நேர்மையைப் பாதிப்பதோடு, அரசு கஜானாவிற் குப் பெரும் நிதிச் சுமையை ஏற்படுத்துவதாக இருக்கிறது" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தநிலையில் நேற்று தலைமை நீதிபதி சூர்யகாந்த் தலைமையிலான அமர்வு முன்பு ஆஜரான மனுதாரர், 'இந்த மனுவை விரைந்து விசார ணைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்' என முறையிட்டார். இந்த வழக்கு விரைவில் விசாரணைக்கு பட்டியலிப்படும் என்று நீதிபதிகள் தெரிவித்தனர். ஒருவேளை தேர்தல் நெருங்கும் சமயத்தில் இந்த வழக்கில் சுப்ரீம் கோர்ட்டு மிக முக்கியமான உத்தரவுகளை பிறப்பித்தால் அது அரசியல் கட்சிகளுக்கு பெரும் நெருக்கடியை தரவும் வாய்ப்புள்ளது என தெரிவித்துள்ளனர்.

# பள்ளிக்கு சுடிதார் அணிந்து வந்த தலைமை ஆசிரியை.. உள்ளே அனுப்ப மறுத்த காவலாளி




**திருவனந்தபுரம், பிப்.7:**

கேரள மாநிலம் கொல்லம் மாவட்டம் கொட்டாரக்கரையில் ஒரு நடுநிலைப்பள்ளி உள்ளது. இந்த பள்ளியில் சிந்து என்பவர் தலைமை ஆசிரியையாக பணியாற்றி வருகிறார். இவர் சுடிதார் அணிந்து பள்ளிக்கு வந்தார். அப்போது அவரை காவலாளி பள்ளிக்குள் செல்ல விடாமல் தடுத்து நிறுத்தி கேட்டை மூடியதாக கூறப்படுகிறது.

இதனால் அதிர்ச்சி அடைந்த தலைமை ஆசிரியை போராட்டத்தில் ஈடுபட்டார். அத்துடன் போலீசுக்கு தகவல் கூறினார்.

உடனே போலீசார் சம்பவ இடத்துக்கு வந்து காவலாளியிடம் விசாரணை நடத்தினர். அப்போது. சுடிதார் அணிந்து வந்தால் ஆசிரியைக்கு அனுமதி கிடையாது என மேலாளர் உத்தரவு பிறப்பித்தார். அதன்பேரில், சுடிதார் அணிந்த தலைமை ஆசிரியை தடுத்து நிறுத்தி கேட்டை மூடியதாக கூறினார். இதனை தொடர்ந்து போலீசார் பேச்சுவார்த்தை நடத்தி சமரசம் செய்து தலைமை ஆசிரியை பள்ளிக்குள் செல்ல அனுமதித்தனர். இந்த சம்பவம் கேரளாவில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது.

இந்த சம்பவம் குறித்து மேலாளர் கூறுகையில் 'தலைமை ஆசிரியையை பள்ளிக்குள் அனுமதிக்க கூடாது என நான் கூறவில்லை' என்றார்.

ஆசிரியைகள் தங்களது வசதிக்கு ஏற்ப பள்ளிக்கு சுடிதார் அணிந்து வர தடையில்லை என 2021-ம் ஆண்டு உயர் கல்வித்துறை ஆணை பிறப்பித்து இருப்பது குறிப்பிடத்தக்கது.

இந்த சம்பவம் தொடர்பாக பள்ளி காவலாளி மீது நடவடிக்கை எடுக்கப்படும் என கூறப்படுகிறது.

# மலையாள நடிகர் கார் மீது மோதிய இருசக்கர வாகனம்! இருவர் படுகாயம்!

**திருவனந்தபுரம், பிப்.7:**

பிரபல மலையாள நடிகர் மணியன்பிள்ளை ராஜூவின் கார் மீது வியாழக்கிழமை இரவு இருசக்கர வாகனம் மோதியதில் இருவர் படுகாயமடைந்தனர்.

கடந்த 50 ஆண்டுகளாக மலையாள திரைப்படங்களில் நடித்து வருபவர் மணியன்பிள்ளை ராஜூ. சுமார் 400 படங்களில் நடித்துள்ள இவர், தயாரிப்பாளராகவும் பல படங்களை தயாரித்துள்ளார். திருவனந்தபுரத்தில் உள்ள வழுதக்காடு கிளப் அருகே வியாழக்கிழமை 9.30 மணியளவில் மணியன்பிள்ளை ராஜூ பயணித்த கார் பிரதான சாலையைக் கடக்க முயன்றது. அப்போது இருசக்கர வாகனத்தில் வேகமாக வந்த இளைஞர்கள் காரின் முன்புறம் மோதி கீழே விழுந்தனர்.

இதில், சூரஜ் மற்றும் நிதேவ் ஆகிய இரு இளை ஞர்கள் படுகாயமடைந்தனர். இருவரும் மீட்கப்பட்டு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில், விபத்து குறித்து கேரள காவல்துறையினர் வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

# லாட்டரியில் ரூ. 49 கோடி வென்ற இளைஞர்!



**பெங்களூரு, பிப்.7:**

ஐக்கிய அரபு அமீரகத்தில் செயல்படும் பிரபல லாட்டரி குலுக்கலில் கர்நாடகத்தைச் சேர்ந்த இளைஞர் ரூ. 49 பரிசுத் தொகையை வென்றுள்ளார்.

கர்நாடக மாநிலம், உடுப்பி மாவட்டத்தின் கடப்பாடி மட்டு பகுதியைச் சேர்ந்த சாந்தனு ஷெட்டிகர். இவர் ஓமனில் பணிபுரிந்து வரும் நிலையில், ஐக்கிய அரபு அமீரகத்தில் செயல்படும் பிரபல லாட்டரி சீட்டை வாங்கியுள்ளார்.

இந்த நிலையில், குலுக்கலில் அவர் வாங்கிய லாட்டரி சீட்டுக்கு 20 மில்லியன் திராம் (இந்திய மதிப்பின்படி ரூ. 49 கோடி) பரிசுத் தொகை விழுந்துள்ளது.

பரிசு விழுந்த லாட்டரி சீட்டை 500 திராமுக்கு வாங்கியுள்ளார் சாந்தனு. இந்திய மதிப்பின்படி ரூ. 12,300 ஆகும். கடந்த சில நாள்களாக தொடர்ந்து லாட்டரி சீட்டு வாங்கிவரும் சாந்தனுவுக்கு இந்த முறை அதிர்ஷ்டம் அடித்து கோடீஸ்வரர் ஆகியுள்ளார்.

விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்த சாந்தனுவுக்கு கடந்த மாதம் பெண் குழந்தை பிறந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# மேகாலயா: சுரங்க வெடிவிபத்தில் பலி 18 ஆக உயர்வு; நிலைமையை ஆய்வு செய்த அமித்ஷா




**புதுடெல்லி, பிப்.7:**

மேகாலயாவின் கிழக்கு ஜைந்தியா ஹில்ஸ் மாவட்டத்தின் தங்க்ஸ்கை பகுதியில் நிலக்கரி சுரங்கம் ஒன்று செயல்பட்டு வருகிறது. சந்தேகத்திற்குரிய வகையிலான இந்த சட்டவிரோத நிலக்கரி சுரங்கத்தில் தொழிலாளர்கள் பலர் மிக குறுகிய பகுதியில் சுரங்க பணியில் ஈடுபட்டு இருந்தபோது, வெடிவிபத்து ஏற்பட்டதில் அவர்கள் சிக்கி கொண்டனர்.

நுழைவு பகுதியில் பாறைகள் விழுந்து மூடியதில், உள்ளே இருந்தவர்களால் வெளியே வர முடியவில்லை. இதில் பலர் உயிரிழந்தனர். இதுபற்றி போலீஸ் சூப்பிரெண்டு விகாஸ் குமார் கூறும்போது, 16 உடல்களை இதுவரை மீட்டுள்ளோம். ஒருவர் தீக்காயங்களுடன் மீட்கப்பட்டு உள்ளார்.

தொழிலாளர்கள் பலர் உள்ளே சிக்கி கொண்டுள்ளனர். மாநில பேரிடர் மீட்பு படை, போலீசார் மற்றும் அரசு நிர்வாகத்தினர் மீட்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர் என கூறினார்.

இந்த சம்பவத்தில், உயிரிழந்தோரின் குடும்பத்திற்கு பிரதமர் மோடி இரங்கல் தெரிவித்து உள்ளார். பலியானோரின் குடும்பத்திற்கு ரூ.2 லட்சமும், காயமடைந்த நபருக்கு ரூ.50 ஆயிரமும் நிவாரண தொகை வழங்கப்படும் என அறிவித்து உள்ளார். இந்த நிதி பிரதமர் தேசிய நிவாரண நிதியில் இருந்து அளிக்கப்படும். தொழிலாளர்கள் பலர் உள்ளே சிக்கி கொண்டுள்ளனர்.

மாநில பேரிடர் மீட்பு படை, போலீசார் மற்றும் அரசு நிர்வாகத்தினர் மீட்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர் என கூறினார். இந்த சம்பவத்தில், உயிரிழந்தோரின் குடும்பத்திற்கு பிரதமர் மோடி இரங்கல் தெரிவித்து உள்ளார்.

பலியானோரின் குடும்பத்திற்கு ரூ.2 லட்சமும், காயமடைந்த நபருக்கு ரூ.50 ஆயிரமும் நிவாரண தொகை வழங்கப்படும் என அறிவித்து உள்ளார். இந்த நிதி பிரதமர் தேசிய நிவாரண நிதியில் இருந்து அளிக்கப்படும்.

## தொழில்நுட்ப நிறுவனங்களுக்கு வெளிப்படைத்தன்மை அறிக்கை கட்டாயம்

**சிட்னி, பிப்.7:**

2024 முதல் 2025 வரை மட்டும், ஆஸ்திரேலியாவில் சிறுவர்களுக்கு எதிரான இணைய வழியிலான பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பான சுமார் 83,000 புகார்கள் பெறப்பட்டுள்ளன. முன்னணி சமூக வலைதளங்களிலேயே இத்தகைய துஷ்பிரயோகங்கள் வெளிப்படையாக நடப்பதைக் கருத்தில் கொண்டு, ஆஸ்திரேலிய இணையப் பாதுகாப்பு ஆணையர் ஜூலி இன்மேன் கிராண்ட், கூகுள், ஆப்பிள், மைக்ரோசாப்ட் மற்றும் மெட்டா போன்ற முன்னணி தொழில்நுட்ப நிறுவனங்களிடமிருந்து ஒவ்வொரு ஆறு மாதத்திற்கும் ஒருமுறை வெளிப்படைத்தன்மை அறிக்கைகளை சமர்ப்பிக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

## வாஷிங்டன் போஸ்ட் பத்திரிகை 300 ஊழியர்கள் பணி நீக்கம்

செயற்கை நுண்ணறிவு மாற்றங்களுக்கு ஏற்ப வாஷிங்டன் போஸ்ட் பத்திரிகை நிறுவனம், 300க்கும் மேற்பட்ட தனது ஊழியர்க ளை பணியில் இருந்து நீக்கம் செய்துள்ளது. அமேசான் நிறுவனர் ஜெஃப் பெசோஸுக்கு சொந்தமான வாஷிங்டன் போஸ்ட் நிறுவனம், விளையாட்டு மற்றும் புத்தகங்கள் தொடர்பான செய்திகளை வழங்கும் பிரிவுகளை சேர்ந்தவர்களை நீக்கியுள்ளது. மத்திய கிழக்கு நாடுகளுக்கான ஒட்டுமொத்த செய்திக்குழுவினரும், உக்ரைனில் போர்க்களத்தில் செய்திசேகரித்துகொண்டிருந்த செய்தியாளரும் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.


## இந்திய - கனட வெளியுறவு அமைச்சர்கள் சந்திப்பு

இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் கனடா வெளியுறவு அமைச்சர் அனிதா ஆனந்துடன் இருதரப்பு ஒத்துழைப்பு பற்றி பேசியுள்ளார். அமெரிக்காவில் நடைபெற்ற அரிய கனிம வளங்கள் தொடர்பான மாநாட்டில் பங்கேற்ற அவர் இந்த சந்திப்பை மேற்கொண்டுள்ளார். இது பற்றி பேசிய ஜெய் சங்கர், கனடா அமைச்சருடனான சந்திப்பு சிறப்பாக இருந்தது; இரு நாடுகளின் உறவுகளை சிறப்பாக முன்னெடுத்து செல்வது பற்றி பேசினோம்; பெரு நாட்டின் வெளியுறவு அமைச்சர் ஹியூகோ டி ஜெலாவையும் சந்தித்தேன் எனக் கூறியுள்ளார்.

## அமைதிப் பேச்சுவார்த்தையை குலைக்க ஐரோப்பா முயற்சி - ரஷ்யா

உக்ரைன்-ரஷ்யா அமைதிப் பேச்சுவார்த்தை யை ஐரோப்பா மற்றும் பிரிட்டனைச் சேர்ந்த “போர்வெறியர்கள்” சீர்குலைக்க முயற்சிப்பதாக ரஷ்யா குற்றம் சாட்டியுள்ளது. ரஷ்யா, உக்ரைன் மற்றும் அமெரிக்கப் பிரதிநிதிகள் அரபு அமீரகத்தில் அமைதிப் பேச்சுவார்த்தை நடத்த உள்ள நிலையில் இந்த அமைதிப் பேச்சுவார்த்தையில் முன்னேற்றமும் சாதகமான நகர்வுகளும் இருப்பதாக ரஷ்ய ஜனாதிபதி புடினின் தூதர் கிரில் டிமிட்ரிவ் தெரிவித்துள் ளார். மேலும் இடையூறு முயற்சிகள் அதிகமாகும் போதே, அமைதிப் பேச்சுவார்த்தை உறுதியான பாதையில் செல்வதை உணர முடிகிறது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

## மீண்டும் இஸ்ரேல் வெறிச்செயல்: காசாவில் 24 பேர் படுகொலை



காசா மீது இஸ்ரேல் மீண்டும் குண்டு வீசியுள்ளது. இத்தாக்குதலில் 11 வயது சிறுமி உட்பட பெண்கள், குழந்தைகள் உள்பட 24 பேர் உயிரிழந்துள்ளனர். கடந்த அக்டோபர் மாதம் எட்டப்பட்ட “போர்நிறுத்த” ஒப்பந்தத்தை இஸ்ரேல் தொடர்ந்து மீறி வருகிறது. குறிப்பாக போர் நிறுத்தம் அமலுக்கு வந்ததிலிருந்து 1,520 முறை அமைதி ஒப்பந்தத்தை இஸ்ரேல் மீறியுள்ளது. மேலும் இஸ்ரேல் ராணுவத்தால் மொத்தம் 556 பாலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளனர். 1500 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

# “இந்தியா - பாக். போரை நிறுத்தியது நானே!” - 90வது முறையாக ட்ரம்ப் பேச்சு





**நியூயார்க், பிப்.7:**

கடந்த ஆண்டு இந்தியா மற்றும் பாகிஸ்தான் இடையிலான போரை தான் நிறுத்தியதாக அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் மீண்டும் கூறியுள்ளார். 90-வது முறையாக அவர் இப்படி சொல்வது குறிப்பிடத்தக்கது.

“கம்போடியா மற்றும் தாய்லாந்து, கொசோவோ மற்றும் செர்பியா, இந்தியா மற்றும் பாகிஸ்தான், இஸ்ரேல் மற்றும் ஈரான், அர்மேனியா மற்றும் அசர்பைஜான் என கடந்த ஓராண்டில் நான் எட்டு போர்களை நிறுத்தி உள்ளேன்.

உலகில் சக்தி வாய்ந்த நாடு என்றால் அது அமெரிக்காதான். முதல் முறையாக நான் அதிபராக இருந்தபோது ராணுவத்தை கட்டமைத்தேன். இதில் அணு ஆயுதங்கள் உட்பட பல்வேறு நவீன ஆயுதங்களும் உள்ளடங்கும். இப்போது அதை மேலும் சக்தி வாய்ந்த ராணுவ படையாக கட்டமைத்துள்ளேன். இரண்டாம் உலகப் போரில் பயன்படுத்தப்பட்ட போர் கப்பலை காட்டிலும் நூறு மடங்கு சக்திவாய்ந்த போர் கப்பல்கள் நம் வசம் உள்ளது.

இந்தியா - பாகிஸ்தான், ரஷ்யா - உக்ரைன் மற்றும் இஸ்ரேல் - ஈரான் இடையிலான அணு ஆயுதப் போரை நான் நிறுத்தினேன்” என ட்ரம்ப் தெரிவித்துள்ளார். கடந்த ஆண்டு மே 10-ம் தேதி அன்று இந்தியா - பாகிஸ்தான் இடையிலான போர்நிறுத்தம் குறித்து சமூக வலைதளத்தில் ட்ரம்ப் பதிவிட்டார். அதுமுதல் இதுவரை 90 முறை இந்தியா மற்றும் பாகிஸ்தான் இடையிலான போரை தான் நிறுத்தியதாக அவர் சொல்லியுள்ளார். இருப்பினும் இதில் மூன்றாம் தரப்பின் குறுக்கீடு இல்லை என இந்தியா தெரிவித்துள்ளது.

# செயற்கை நுண்ணறிவு உச்சி மாநாடு: இந்தியாவுக்கு ஐ.நா. தலைவர் பாராட்டு



**நியூயார்க், பிப்.7:**

டெல்லியில் வரும் 19, 20 ஆகிய தேதிகளில் செயற்கை நுண்ணறிவு தொடர்பான உச்சி மாநாட்டை இந்தியா நடத்தவுள்ளது. இதில் பல்வேறு நாடுகளின் தலைவர்கள், பிரதிநிதிகள் கலந்துகொள்ளவுள்ளனர். இந்த உச்சி மாநாட்டுக்கு வருவதை ஐ.நா. சபை தலைவர் அன்டோனியா குட்டேரஸும் உறுதி செய்துள்ளார்.

இதுகுறித்து செய்தி நிறுவனத்துக்கு நேற்று அவர் அளித்த பேட்டி: செயற்கை நுண்ணறிவுத்துறை என்பது மிகவும் வேகமாக வளர்ந்து வரும் ஒரு துறையாகப் பார்க்கப்படுகிறது. இதனால் பல நன்மைகளும், தீமைகளும் உண்டு. சர்வதேச உறவுகளில் இன்று செயற்கை நுண்ணறிவு முக்கியமான விஷயமாகவும், பிரச்சினையாகவும், எதிர்கால சவால்களில் ஒன்றாகவும் உள்ளது.

இந்தத் துறையால் பல நிபுணர்கள் வேலையிழக்கும் அபாயம் உள்ளதாக கருதுகின்றனர். எனவே, இதுதொடர்பாக அனைத்து வகையான சூழ்நிலைகளிலும் உலக நாடுகள் ஒன்றிணைந்து அதைப் பற்றி விவாதிப்பது மிகவும் முக்கியம்.

இந்த உச்சிமாநாட்டில் தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொண்டதற்காக இந்தியாவை நான் பாராட்டுகிறேன். இந்த உச்சி மாநாட்டில் செயற்கை நுண்ணறிவு தொடர்பாக எழுந்துள்ள சவால்கள் குறித்து விரிவாக விவாதிக்கப்பட வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# இந்தியா - அமெரிக்க வர்த்தக ஒப்பந்தத்தால் பாகிஸ்தானில் கடும் அரசியல் அதிர்வலைகள்!



**இஸ்லாமாபாத், பிப்.7:**

அமெரிக்காவுடன் இந்தியா அண்மையில் மேற்கொண்ட வர்த்தக ஒப்பந்தம் பாகிஸ்தானில் கடும் அரசியல் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள் ளது. அமெரிக்காவுடன் பல மாதங்களாக பாகிஸ்தான் நெருக்கம் காட்டியும், அதனால் எந்தப் பயனும் இல்லை. மரியாதையை விலைக்கு வாங்க முடியாது என்று நெட்டிசன்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப் மற்றும் ராணுவ தலைமைத் தளபதி ஆசிம் முனீர் ஆகியோர் மேற்கொண்ட தீவிர முயற்சிகளுக்குப் பலனாக, பாகிஸ்தானுக்கு 19 சதவீத வரியை அமெரிக்கா நிர்ணயித்தது. ஆனால், பல மாதங்களாக டிரம்பின் அழுத்தங்களுக்குப் பணியாமல் உறுதியாக நின்ற இந்தியா 18 சதவீத வரியுடன் பாகிஸ்தானை விட சாதகமான ஒப்பந்தத்தைப் பெற்றுள்ளது.

பிரதமர் நரேந்திர மோடியுடன் இருக்கும் புகைப்படங்களை சமூக வலைதளங்களில் பகிர்ந்த அதிபர் டிரம்ப், இந்தியப் பொருட்களுக்கான வரி 18 சதவீதமாகக் குறைக்கப்படும் என்று அறிவித்தார். இது பாகிஸ்தானுக்கு விதிக்கப்பட்ட வரியை விட ஒரு சதவீதம் குறைவு என்பது குறிப்பிடத்தக்கது.

அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்பிற்கு நோபல் பரிசுக்கு பரிந்துரை, அமைதி வாரியத்துக்கு ஆதரவு என பாகிஸ்தான் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்ட போதிலும், வர்த்தக ஒப்பந்தத்தில் இந்தியாவை விட கூடுதல் வரிச்சுமையையே அந்த நாடு பெற்றுள்ளது. இந்த விவகாரத்தை தற்போது கையில் எடுத்துள்ள நெட்டிசன்கள் பாகிஸ்தான் அரசை கடுமையாக விமர்சித்து வருகின்றனர்.

அளவுக்கு அதிகமான பணிவைக் காட்டாமலேயே இந்தியா எப்படி சிறந்த ஒப்பந்தத்தைப் பெற்றது எப்படி என்பது குறித்து அவர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர். இது தொடர்பாக சமூக வலைதளங்களில் பகிரப்படும் கருத்துக்கள் அந்நாட்டு அரசின் இயலாமையை சுட்டிக்காட்டுவதாக அமைந்துள்ளன.

சமூக வலைதளவாசி ஒருவர் கூறுகையில், “விற்பனையாளராக செயல்பட்ட பாகிஸ்தான் அரசின் வியூகம் தோற்றுவிட்டது. பலுசிஸ்தானின் கனிம வளங்களை அமெரிக்காவுக்கு நீங்கள் பெட்டி பெட்டியாகக் கொடுக்கலாம், ஆனால் மரியாதையை விலைக்கு வாங்க முடியாது” என்று தெரிவித்துள்ளார்.

## பாகிஸ்தான்: மசூதியில் குண்டுவெடிப்பு - 31 பேர் உயிரிழப்பு

**இஸ்லாமாபாத், பிப்.7:**

பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்தின் ஷேசாத் நகர் பகுதியில் உள்ள ஷியா மசூதியில் இன்று வெள்ளிக்கிழமை தொழுகை நடந்து கொண்டிருந்தது. அப்போது உடலில் வெடிகுண்டு கட்டிக் கொண்டு வந்த நபர் ஒருவர், மசூதி வளாகத்திற்குள் நுழைய முயன்றார்.

அவரது நடவடிக்கையில் சந்தேகம் ஏற்பட்டதால், மசூதியில் இருந்தவர்கள் வாசல் அருகே அவரை தடுத்து நிறுத்தினர். இதையடுத்து அந்த நபர் தனது உடலில் கட்டியிருந்த சக்திவாய்ந்த வெடிகுண்டை வெடிக்கச் செய்தார். இந்த குண்டுவெடிப்பு சம்பவத்தில் 31 பேர் உயிரிழந்தனர். சுமார் 169 பேர் படுகாயமடைந்தனர்.

இந்த தாக்குதல் சம்பவத்திற்கு இதுவரை எந்த பயங்கரவாத அமைப்பும் பொறுப்பேற்கவில்லை. இருப்பினும், இந்த தாக்குதல் சம்பவத்தில் தெஹ்ரிக்-இ-தலீபான் இயக்கத்துடன் தொடர்புடைய பிட்னா அல்-குவாராஜி அமைப்பிற்கு தொடர்பு இருக்கலாம் என பாகிஸ்தான் போலீசார் சந்தேகிக்கின்றனர். தாக்குதலில் படுகாயமடைந்தவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

உஸ்பெகிஸ்தான் அதிபர் ஷவ்காத் மிர்சியோயேவ் 2 நாட்கள் அரசு முறைப்பயணமாக நேற்று பாகிஸ்தான் சென்றார். அவர் தற்போது பாகிஸ்தானில் இருக்கும் சமயத்தில் இந்த குண்டுவெடிப்பு தாக்குதல் நடந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## ரஷியா: ராணுவ உளவுத்துறை துணைத்தலைவர் மீது துப்பாக்கி சூடு

**மாஸ்கோ, பிப்.7:**

உக்ரைன், ரஷியா இடையே 1 ஆயிரத்து 443வது நாளாக போர் நீடித்து வருகிறது. இந்த போரில் ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்துள்ளனர்.

இப்போரில் உக்ரைனுக்கு அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் ஆதரவு அளித்து வருகின்றன. அதேவேளை, போரை முடிவுக்கு அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் முயற்சித்து வருகிறார். அதன்படி, போர் நிறுத்தம் தொடர்பாக 28 நிபந்தனைகள் கொண்ட உடன்படிக்கையை டிரம்ப் முன்மொழிந்துள்ளார். இந்த நிபந்தனைகளில் சிலவற்றை ஏற்க இரு தரப்பும் மறுத்து வருகிறது. இதனால் போர் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இந்நிலையில், ரஷிய ராணுவத்தின் உளவுத்துறை துணைத்தலைவர் ஜெனரல் விளாடிமிர் அலெக்சிவ். இவர் 2011ம் ஆண்டு முதல் உளவுத்துறை துணைத்தலைவராக செயல்பட்டு வருகிறார். இவர் நேற்று மாஸ்கோவில் மர்ம நபர்களால் துப்பாக்கியால் சுடப்பட்டுள்ளார். இந்த துப்பாக்கி சூட்டில் படுகாயமடைந்த விளாடிமிர் அலெக்சிவ் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

## அமெரிக்கா-ஈரான் இடையே அணுசக்தி பேச்சுவார்த்தை




**துபாய், பிப்.7:**

ஈரான் மற்றும் அமெரிக்கா இடையிலான அணுசக்தி பேச்சுவார்த்தை (வெள்ளிக்கிழமை) ஓமன் நாட்டில் நடைபெற உள்ளது. ஈரானில் கடந்த மாதம் நடைபெற்ற போராட்டங்களின்போது நடந்த வன்முறை மோதல்களால் பதற்றம் நிலவும் சூழலில் இந்த பேச்சுவார்த்தை நடைபெற இருக்கிறது. முதலில் துருக்கியில் நடைபெறுவதாக இருந்த இந்த பேச்சுவார்த்தை, ஈரான் வெளியுறவு அமைச்சர் அப்பாஸ் அரகச்சியின் கோரிக்கையைத் தொடர்ந்து ஓமனுக்கு மாற்றப்பட்டது. ஈரான் அதிபர் மசூத் பெசெஷ்கியான் இந்த பேச்சுவார்த்தைக்கு அனுமதி வழங்கியுள்ளார். இதற்கிடையே, ஈரானின் உச்ச தலைவர் அயதுல்லா அலி காமேனிக்கு அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் பகிரங்க எச்சரிக்கை விடுத்துள்ளார். “ஈரான் தலைவர் மிகுந்த கவலையுடன் இருக்க வேண்டும்” என்று டிரம்ப் காட்டமாகத் தெரிவித்துள்ளார். ஈரானின் ஏவுகணைத் திட்டம் மற்றும் அணுசக்தி விவகாரங்களில் டிரம்ப் நிர்வாகம் சமரசமற்ற நிலைப்பாட்டை எடுத்துள்ளதால், இந்தப் பேச்சுவார்த்தை உலக நாடுகளிடையே பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

# பார்மசி பெயரில் போதை பொருட்கள் விற்கும் சர்வதேச கும்பலின் 200+ இணையதளங்கள் அமெரிக்காவில் முடக்கம்




**நியூயார்க், பிப்.7:**

இந்தியாவை தளமாகக் கொண்டு ஆன்லைனில் பார்மசி என்ற பெயரில் போதை பொருட்கள் விற்கும் சர்வதேச கிரிமினல் அமைப்புடன் தொடர்புடைய 200-க்கும் மேற்பட்ட வலைகளங்களை அமெரிக்கா முடக்கி உள்ளது.

இது குறித்து அமெரிக்க மருந்து கட்டுப்பாட்டுத் துறை அதிகாரிகள் நேற்று வெளியிட்ட அறிக்கையில் கூறியதாவது: இந்தியாவை தளமாகக் கொண்டு நூற்றுக்கும் மேற்பட்ட இணையதளங்களில் மருந்து மற்றும் போதைப் பொருட்கள் விற்பதாக பல்வேறு புகார்கள் வந்தன. இதையடுத்து மருந்துக் கட்டுப்பாட்டு துறை கள ஆய்வாளர்கள், நாடு முழுவதும் பல்வேறு இடங்களில் தொடர்ந்து சோதனை நடத்தி வருகின்றனர்.

கடந்த 2022-ம் ஆண்டு முதல் இந்த ஆய்வு நடைபெறுகிறது. ஆன்லைனில் பார்மசி என்ற பெயரில் சட்டவிரோதமாக மருந்து மற்றும் போதைப் பொருட்கள் விற்பனை செய்ததில் இது வரை 3 பேர் உயிரிழந்தது தெரிய வந்துள்ளது. அத்துடன் 6 பேர் அதிக டோஸ் மருந்துகள் எடுத்துக் கொண்டதில் உடல்நிலை மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக 4 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலும், இந்தியாவை தளமாகக் கொண்டு இது போல் ஆன்லைனில் போதை பொருட்கள் விற்கும் சர்வதேச கிரிமினல் கும்பல் குறித்து இந்திய அரசிடம் தகவல் தெரிவித்துள்ளோம். அத்துடன் சர்வதேச அளவில் இந்த கும்பல் செயல்படுவதால் 200-க்கும் மேற்பட்ட இணையதளங்களை முடக்கி உள்ளோம்.

கிரிமினல் கும்பலை கண்டறிந்து விசாரணை நடத்த இந்திய அரசை கேட்டுக் கொண்டுள்ளோம். அந்த கும்பலை ஒடுக்கவும் தகவல்கள் அனுப்பி உள்ளோம்.

இதுபோல் சட்டவிரோதமாக பார்மசி நடத்தும் விநியோகஸ்தர்களுக்கு எதிராக அமெரிக்க அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.